56

356

காவேரி

CAUVERI

சுபானு கார்த்திகை

★

NOVEMBER 1943

காரியவாதி

கல்யாணமே வைபோகமே

சிந்தனைக்கு உணவு

ஜஹன்னிஸா

உள்ளத்தின் ஒளி

கார்த்திகையன்று

விலை அணா 6

KUMBAKONAM

★

சங்கீத உலகில் புரட்சி !

★

சங்கீத உலகில் ஓர் புரட்சி! ரஸிகர்கள் நிறைந்த ஓர் மாபெரும் கூட்டத்தில் ஓர் முஹம்மதியச் சிறுவன் தோற்றமளித்தான். மேடைமீதமர்ந்து தமிழ் தெலுங்கு கீதங்களைப் பாடினான். சபையிலுள்ளோர் திகைத்தார்கள். மூக்கில் விரலைவைத்துப் பாமரர்கள் முதல் வித்வான்கள் வரை சிறுவனைப் புகழ்ந்தார்கள்.

அச்சிறுவன் யார்? புகழ்பெற்ற **கிட்டப்பா மார்க்** புகையிலைக் கம்பெனி முதலாளியான அன்பர் அபூபக்கர் ராவுத்தரின் புதல்வன், **மாஸ்டர் A. D. சுல்தான்.**

காலஞ்சென்ற கிட்டப்பாவின் சங்கீதத்தில் காதல்கொண்டு தாம் தயாரிக்கும் புகையிலைக்குக் **கிட்டப்பா மார்க்** என நாமகரணமிட்ட தந்தை தம் மைந்தனையும் கர்னாடக சங்கீதத்தில் பயிற்சியடையச்செய்தது போற்றத்தக்கதே.

சமீபத்தில் குடந்தையில் நடந்த சுகாதார மகாநாட்டில்தான் சிறுவனின் திறமை வெளியாயிற்று. அன்று ஸ்வர சுத்தமாயும் ச்ருதி லய தாள உணர்ச்சியுடனும் சுல்தான் அளித்த இன்னிசை விருந்தை யாவரும் வியந்து போற்றினார்கள்.

மாஸ்டர் சுல்தான் கர்நாடக சங்கீதக் கலையில் மேலும்மேலும் பயின்று உன்னத நிலைமை அடைய ஆண்டவன் அருள்புரிவாராக!

C. L. ஆராவமுதய்யங்கார்,
அட்வகேட், முனிஸிபல் கவுன்ஸிலர் & வாணிவிலாச சபா
மியூஸிக் கன்வீனர், கும்பகோணம்.

ராஜண்ணு பிள்ளை,
நாதஸ்வர வித்வான், கும்பகோணம்.

2 DEC 1943

இந்தியக் கைத்தொழிலை நீங்கள் ஆதரியுங்கள்

குழந்தைகள் இருக்கும் வீட்டிற்கு நீங்கள் வெறுங்கையுடன் போக மாட்டீர்கள். கைக்கு எளிதாய் உங்கள் பணப்பைக்கும் எளிதாய் வி. எஸ். & ஸன்ஸ் பெப்பர்மெண்ட் ஒரு டின் வாங்கிக் கொண்டு போங்கள். வி. எஸ். & ஸன்ஸ் பெப்பர்மெண்டையே குழந்தைகள் விரும்பித் தின்னும். அக்குழந்தைகளின் மென்மொழிகளில் இப்பெப்பர்மெண்டின் இனிமையை நீங்களே கண்டு ஆனந்தப்படுவீர்கள். உயர்ந்த முறையில் கை தேர்ந்த வேலைக்காரர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

ஒரு தடவை வாங்கிப்பாருங்கள்.

தென் இந்தியா கன்பெக்ஷனரி தொழிற்சாலை

புரோப்ரைடர்கள்:— வி. எஸ். & ஸன்ஸ்

கும்பகோணம்.

The Southern India Confectionery Factory

Proprietors:- V. S. & Sons,

KUMBAKONAM.

★ பொருளடக்கம் ★

சுபானு மலர் 3

கார்த்திகை இதழ் 4

காரியவாதி	...	...	3
கௌரீ கல்யாணமே	...	...	5
அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்	...	'ராமய்யா'	7
சிந்தனைக்கு உணவு	...	தி. சே. சௌ. ராஜன்	9
அன்பின் எதிரொலி	...	என். நாகராஜன்	13
கார்த்திகை விளக்கு	...	ரா. வீழிநாதன்	20
ஸுஜாதா	...	கமலா பத்மநாபன்	25
ஜஹன்னிஸா	...	"ஸ்ரீரா"	30
கார்த்திகையன்று	...	"ஸத்யதாமா"	37
அழுவானேன் கேடு	...	கௌரீ	41
உள்ளத்தின் ஒளி	...	கே. சுந்தரம்மாள்	45
அம்புஜம்	...	"கௌசி"	50

JL M24, N4IK ✓ N43.3.3-4

குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

ஜவுளி தினுசுகள் :: தேவைக்கு!

நம்பிக்கைக்கு உகந்ததாய்த் தற்கால மோஸ்தரில்
உடைக்குத் தக்க போட்டி விலையில்

புதுச் சரக்குக்கள் கிடைக்குமிடம்

M. N. நாகேந்திரம் ஸன்ஸ்

ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்.

(மலைவாசல் உள்மண்டபம்)

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினாப்பள்ளி.

N. B.-உயர்ந்த பனாரிஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 DEC 1943
MADRAS

காவேரி

சுபானு | மலர் 3 | "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார் | கார்த்திகை | இதழ் 4

காரியவாதி

வங்காளப் பஞ்சத்திற்குக்காரணமென்ன? இதற்கு யார் பொறுப்பாளி? இந்தியா கவர்ன்மெண்டார் தவறு, வங்க மாஜி ப்ரதம மந்திரி பஸ்லுல் ஹக்கின் பிழையா, அல்லது மாகாண சுய ஆட்சியின் விளைவா என்ற பிரச்னைகள் தீவிரமாக நாட்டில் விவாதிக்கப்பட்டு வருகின்றன. பத்திரிகைகளைப் பிரித்தால் பஞ்ச ஓலம் ஒருபுறமும் அதைப்பற்றிய விவாதங்கள் மற்றொரு புறமும் சில காலமாகக் காட்சியளிக்கின்றன. சட்ட சபைகளிலும் இதே முழக்கம்தான். பஞ்சமோ ஓய்ந்தபாடில்லை. அதைப்பற்றிய பேச்சிலும் யாதொரு முடிவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆராய்ச்சி இன்னும் நடந்துகொண்டே வருகிறது.

காமன்ஸ் சபையிலும் இந்தியப் பஞ்சம் அடிக்கடி கேள்வி நேரங்களில் தலை தூக்கிற்று. அமெரி மழுப்பி மழுப்பிப் பேசிப்பார்த்தார். இறுதியில் ஓர் தினத்தைக்குறித்து அன்று நீண்ட விவாதம்செய்து தொலைத்துவிடுவது எனச்சமீபத்தில் ஒருநாள் பேசித்தள்ளினார்கள். அறுநூறு அங்கத்தினர்கள்கொண்ட சபையில் அறுபது நபர்கள்கூட விவாதத்தின்பொழுது இல்லையாம். இந்தியப் பஞ்ச விஷயத்தில் அவ்வளவு அக்கரை நமது பார்லிமெண்டு சபையாருக்கு!

விஷயமாவது ஏதாவது தெளிவடைந்ததா? ஏதாவது முடிவு செய்தார்களா? ஆம், முடிவு செய்தார்கள். இந்தியா மந்திரி அமெரி பஞ்சத்தின் காரணத்தைக் கண்டுபிடித்துவிட்டார். பிரிட்டிஷ் இந்தியாவில்மட்டும் மாதம் ஒன்றுக்கு 300,000 அதிக நபர்களுக்கு உணவு தேடவேண்டி வருகிறது. ஜனத்தொகை இப்படி அளவுக்கு மிஞ்சி அதிகரித்துவருவதினால்தான் இப்பஞ்சம். இதுவரை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் உணவுப் பொருள்களினாலும், போக்குவரத்துச் சாதனங்களினாலும் பஞ்சம் தலை தூக்கவில்லை. இப்பொழுது இவை இரண்டும் குன்றவே மக்கள் அவதிப்படுகிறார்கள். அதிகரித்து வரும் ஜனத்தொகைக்கு ஏற்றவாறு நாட்டின் விவசாயத்தைப் புதிய முறையில் அதிகப்படுத்தினாலொழிய நிலைமையைச் சமாளிக்க முடியாது என்று மொழிந்திருக்கிறார். இன்று மட்டுமல்ல, என்றுமே பாதிக்கக்கூடிய விஷயமிது. ஆகையினால் இதற்கு நாம் தீர்க்காலோசனையுடன் பாகுபாடு செய்யவேண்டுமென்கிறார்.

அமெரியின் ஆராய்ச்சி மெச்சத்தகுந்ததே. ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையை உடனே சமாளிக்க என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள்? என்றால் கையைப் பிசைந்துகொண்டு, "யுத்தத்தின் காரணமாக அதைச் சீர்படுத்துவது கடினம்; எனினும், எங்களால் இயன்றமட்டும் கப்பல்களைத்திரட்டி, கொஞ்சம் தானியங்களை இந்தியாவுக்கு அனுப்ப முயலுகிறோம்; ஆனால் கப்பல்கள் ராணுவசேவைக்கு வேண்டியிருக்கிறது; அதை அச்சேவையிலிருந்துதிருப்புவது சிரமமான காரியம்" என்று முடிக்கிறார். இவையே விவாதத்தின் முடிவு.

மற்றும் சிலர் பேசினார்கள். சிலர் ஜனங்களிடம் அதிகப் பணப் புழக்கமிருக்கிறது. ஆகையினால்தான் விலைவாசிகள் அதிகரித்துவிட்டன. எனவே அதை வரிமூலமாயும் கடன் மூலமாயும் வாங்கிவிடவேண்டும், அப்பொழுதுதான் விலை வாசிகள் குறையும், பஞ்சம் தீரும் என்றும் கூறினார்கள்.

பிறகு என்ன நடந்தது? ஒன்றுமில்லை. இந்திய உணவுப்பஞ்சம் யுத்தம் முடிந்தால்தான் தீரும். அதை எவ்வளவு சீக்கிரம் முடிக்க முடியுமோ அதைச் செய்வதுதான் பஞ்சத்தைத் தீர்க்கச் சிறந்த முறை எனக் கண்டுபிடிக்கப்பட்டு, கூட்டம் கலைந்தது.

இதைக்கண்டு நாம் வியப்படையக் காரணமில்லை. இந்தியா விஷயமாக எப்பொழுது விவாதம் நடந்தாலும் முடிவு ஒன்றும் ஏற்படாது. ஏன்? அந்த அங்கத்தினர்களுக்கு அவ்வளவுதான் அக்கரை. சிற்சில சமயங்களில் இந்தியா என்று ஓர் காமதேனு இருக்கிறது, இதற்குக் குந்தகம் ஒன்றும் ஏற்படக்கூடாது என்ற கவலை ஏற்படும். அப்பொழுது சில கேள்விகளை வீசுவார்கள். பதில் என்று எது கிடைத்தாலும் ஆத்ம திருப்தியடைந்துவிடுவார்கள். காமன்ஸ் சபை விவாதத்தின் பலனாலோ அல்லது அங்கே கேட்கப்படும் பிரச்னைகளின் விளைவினாலோ, இந்திய அரசியல் நிர்வாக முறையில் யாதொரு சீர்திருத்தமும் ஏற்பட்டதாக நாம் அறியோம்.

பின் ஏன் இப்போலி விவாதங்கள்? அது பிரிட்டிஷாரின் பழக்கம். பகட்டிற்காக அர்த்தமற்ற பழைய பழக்கங்களைக் கைவிடாது நடத்தி வருவார்கள். இதைக் கண்டு ஏமாறுபவர்களுமுண்டு.

பஞ்சம் தீர வழியில்லையா என்ற பிரச்னை எழலாம். அமெரியைப் பொறுத்த வரையில்

இல்லை என்ற முடிவுதான். ஆனால் இந்தியாவுக்குவந்துள்ள புதியவைசிராய் வேவல்துரை இந்த முடிவை ஒப்புக்கொள்ளத் தயாராயில்லை. தம்மாலியன்றமட்டும் இதை 'ஒரு கை' பார்த்துவிடுவது என்று வாய்ச்சொல்லில் வீரியம் பேசாமல் காரியத்தில் புகுந்திருக்கிறார்.

இந்தியாவுக்கு வந்ததும் வராததுமாகப் பஞ்சப் பிரதேசங்களைத் தாமாக நேரில் பார்த்து ராணுவப் படைகளின் உதவியைப் பஞ்சத்தில் அகப்பட்டுத் தவிக்கும் மக்களுக்கு உதவுமாறு தூண்டியிருக்கிறார். இன்று வங்காளத்தில் மிலிட்டரி லாரிகளும் ஸோல்ஜர்களும் இவ் வேலையில் ஈடுபட்டுள்ளார்கள்.

மத்திய சட்டசபை சமீபத்தில் ஆரம்பிக்கப் பட்டது. அப்பொழுது வழக்கம்போல் வைசிராய் அவர்கள் பிரசங்கம் செய்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் லார்டு வேவல் அதைச் செய்ய முன் வரவில்லை. தாம் உணவுப் பஞ்சத்தைத் தீர்ப்பதில்முனைந்திருப்பதால் பேசிக் காலங்கழிக்க அவகாசமில்லை என்று ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார். உண்மையாகவே இவர் பெரிய காரியவாதி என்று தெரிகிறது. மாகாண கவர்னர்களை வரையும் ஒன்று கூட்டிப் பஞ்சத்தை ஒழிக்க ஓர் நிர்க்காலோசனைத் திட்டம் வகுக்கப் போகிறாராம். இந்தியா முழுதும் சுற்றுப் பிரயாணஞ் செய்வாராம் கூடிய சீக்கிரத்தில்.

மாட்சிமை தங்கிய வைசிராய் வேவல் துரைக்கு நாம் ஓர் சமர்ப்பணம் செய்ய விரும்புகிறோம். "தாங்கள் பெரிய காரியவாதி எனத் தோன்றுகிறது. உண்மையில் தங்களுக்குப் பஞ்சத்தை ஒழித்து நாட்டில் அமைதி நிலவச்செய்ய வேண்டுமென்ற அவா இருப்பின் மஹாத்மா காந்தி, நேரு முதலிய தலைவர்களை விடுதலை செய்து அவர்களுடைய உதவியை ஏன் பெறக்கூடாது? தாங்கள் மன்னர்பிரானின் பிரதிநிதி. காந்திமஹான் இந்திய மக்களின் பிரதிநிதி. இந்தியாவில் அவருக்கு இருக்கும் செல்வாக்கு,தங்களுக்கோ தங்கள் மன்னர்பிரானுக்கோ இருப்பது சந்தேகம். இதைத் தாங்கள் உணர்ந்தால் எடுத்துக்கொண்ட காரியத்தில் வெற்றி பெறுவது நிச்சயம். இதைத் தாங்கள் சீக்கிரம் செய்வீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

இக் காரியவாதியின் படம் நமது அட்டைப்படத்தை அலங்கரிக்கிறது.

தமிழ்ப் பெரியார்கள்

தமிழ்ப் பெரியார்கள்—வ. ரா. எழுதியது. தமிழ்ப் பண்ணையார் பிரசுரித்தது.

விலை ரூ. 2—8—0

தமிழ் நாட்டிலுள்ள பல பிரபலஸ்தர்களைப் பற்றி, தம் திறமைவாய்ந்த பேனாவினால் ஆசிரியர் வ. ரா. சித்திரித்திருக்கிறார். தாம் எடுத்துக்கொண்டுள்ளவர்களின் குணதிசயங்கள் நன்கு தெளிவாகும் முறையில் இதை வெற்றிகரமாகச்செய்திருக்கிறார்.

இப் புத்தகத்தின் முன்னுரையாகப் 'பெரியார்கள் யார்' என்ற கேள்விக்கு விடை அளிக்கின்றார். "ஜனசமூகத்தை, தங்கள் வாழ்க்கையின் மூலமாக மாறச்செய்பவர்கள் பெரியார்கள்" எனக்கூறி, தாம் இந்தப்புத்தகத்தில் சித்திரித்திருக்கும் பிரபலஸ்தர்கள் அனைவரும் இப்பட்டத்திற்குக்குரியவர்கள் எனப் பொறுக்கியிருப்பதாகக் கூறுகிறார். இப்படிப் பொறுக்கப்பட்ட தமிழ் நாட்டிலுள்ள பெரியார்கள் யார்?—சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார், ஈ.வே. ராமசாமி நாய்க்கர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார், டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், ஜ்யார்ஜ்ஜோஸப், எஸ். ஸத்தியமூர்த்தி, வ. உ. சிதம்பரம் பிள்ளை, எஸ்.எஸ். வாஸன், கே. பி. சுந்தராம்பாள், என்.எஸ். கிருஷ்ணன், வே. ராமலிங்கம் பிள்ளை.

இப்பேனாச் சித்திரங்களை வாசித்தபிறகும் கூட நமக்கு இதில் சேர்க்கப்பட்டுள்ள சிலர் "ஜனசமூகத்தை, தங்கள் வாழ்க்கையின் மூலமாக மாறச்செய்தார்கள்" என்பதாகத் தெரியவில்லை. 'தமிழ்ப் பெரியார்' என்ற பட்டத்திற்கு இவர்களில் சிலர் எவ்வகையில் உரித்தானவர்கள் என்பதும் விளங்கவில்லை. வ. ரா. அவர்களின் கொள்கைப்படியும் இதில் சிலர் பெரியார்களாகவில்லையே என வருந்துகிறோம்.

உதாரணமாக, கே.பி. சுந்தராம்பாளை எடுத்துக்கொள்வோம். இவர்களின் வாழ்க்கையினால் சங்கீத உலகமோ, அல்லது, பெரும்பாலான தமிழ்நாட்டிலுள்ள ஜனசமூகமோ,மாறினதாகத் தெரியவில்லை. இவரைப்பற்றிய தம் குறிப்பில் இவர் எவ்வகையில் இதைச் செய்துள்ளார் என்பதையும் ஆசிரியர் எடுத்துக்காட்டவில்லை. என். எஸ். கிருஷ்ணன், எஸ். எஸ். வாஸன், நண்பர் டாக்டர் ராஜன், ஜ்யார்ஜ் ஜோஜப் இவர்களே தங்களைப் பெரியார் என அழைத்தால் அது முற்றிலும் முகஸ்துதி எனத்தான் கொள்வார்கள். அவர்கள் "அனுகூலமேதுவும் இல்லாமல், பிரதிகூலங்களுக்கு மத்தியில் வாழ்ந்தும் வீறுகொண்டு எழும்பேர்வழிகள்" என்பதில் சந்தேகமில்லை. சொந்த முயற்சியால் முன்னுக்கு வந்தவர்கள். அவர்கள் போற்றத்தகுந்தவர்களே. ஓர் அளவில் இவர்கள் மேதாவிகள் என்றும் நாம் வ. ரா.வுடன் சேர்ந்துகூறத் தயார். ஆனால் இவர்கள் சரித்திரம் போற்றக்கூடிய பெரியார்கள், ஜன சமூகத்தையே தங்கள் வாழ்க்கையினால் மாற்றிவிட்டார்கள் என்பதுமட்டும் புகழ்ச்சியான மொழிகள்.

வ. ரா. இப்புத்தகத்தில் சித்திரிக்கும் பலர் நம்முடன் இருந்து வாழ்ந்துவருபவர்கள். அவர்களை இப்பொழுது ஸ்தோத்திரத்திற்காகப் பெரியார்களெனக் கூறித் திருப்தியடையச் செய்யலாம். ஆனால் அவர்களுக்குப் பின், உலகம் அவர்களைப் பெரியார்களெனப் போற்றிவருமா என நாம் யோசிக்கவேண்டும்.

எனினும் இப்புத்தகத்தை அனைவரும் படிக்க வேண்டும். பேனாச் சித்திரம் எழுதும் முயற்சி போற்றத்தக்கது.

கௌரீ கல்யாணமே

சமீபத்தில் மாஸ்கோவில் நடந்த திருமண வைபவத்தைப் பற்றிய விஷயங்களை நமது ஸ்பெஷல் நிருபர் ஸர். மானஸீகம் அவர்கள் அழகாகவும் ருசிகரமாகவும் விளக்கியுள்ளார்.

பிள்ளை வீட்டுக்காரர்கள் பூர்வீகமாகப் பிரபல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்; பணக்கார சம்பந்தமுடையவர்கள்; செல்வாக்கு மிகுதி உள்ளவர்கள்; கொஞ்சம் அகந்தையும் கொண்டுள்ளவர்கள்.

சமீபகாலம்வரை பெண் வீட்டார் கொஞ்சம் சிரம தசையிலிருந்தார்கள். இப்பொழுது நல்ல காலம் ஏற்பட்டுக் கடவுள் கிருபையால் உலகிலேயே மிகுந்த செல்வாக்கையும், சிறப்பையும் அடைந்துவிட்டார்கள்.

இந்த இரு குடும்பத்தாருக்குள் சம்பந்தம் ஏற்படவேண்டுமெனப் பலர் விரும்பினார்கள், நடக்கவில்லை. சமீப காலம்வரை பிள்ளை வீட்டார் பெண் வீட்டாரை மதிக்கவில்லை, நம்பவுமில்லை.

யுத்தசக்கரம் அதிவேகமாகச்சுழன்று பெண் வீட்டார் பெருமை பெறவே பிள்ளை வீட்டார் சற்றுப் பொறுமையும் கொண்டார்களென லாம். கடைசியில் இரு குடும்பத்தினரும் ஒருவருக்கொருவர் சம்பந்தம் செய்துகொள்வதே உலகக்ஷேமத்திற்கு உகந்ததென முடிவுகட்டப் பட்டது.

அதை அனுசரித்துப் பிள்ளையின் அம்மான்கள் இருவர் ஆகாய விமானத்தில் பறந்து சென்றனர். பெண்ணுக்கு அம்மான் இவர்களை வரவேற்றார். உபசாரங்கள் பல செய்தார். அம்மான்கள் ஒருவருக்கொருவர் முதலில் பிடி கொடாமல் பேசிவந்தார்கள்.

பிள்ளைவீட்டு அம்மான்களை மாயாவிகளெனப் பெண் வீட்டு அம்மான் நினைத்து ஜாக்கிரதையாக நடந்துகொண்டார். பல நிபந்தனைகளைச் சொன்னார். பிள்ளை வீட்டு அம்மான்கள் அந்த நிபந்தனைகளைப்பற்றி, தங்களாலானதைச் சாதுர்யமாகச் சொல்லிப் பார்த்தனர். பெண் வீட்டு அம்மான் மசியவில்லை. கடைசியில் ஒருவாறாக அம்மான்கள் ஒற்றுமைப்பட்டனர். பிணங்கி நின்ற பெண்ணும் சம்மதித்து விட்டாள்! உடனே விவாக ஒப்பந்த ஷரத்துக்கள் ஏட்டில் எழுதப்பட்டன. தம்பதிகள் சார்பாகப் பிரதிநிதிகள் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்துச் செய்தனர். ஒருவருக்கொருவர் மாலைமாற்றிக் கொண்டனர். மத குருவின்றியும், சதிபதிகளின் நேரடியான சந்திப்பில்லாமலும் முதல் முதல் உலகில் நடந்த புதுமையான சீர்திருத்தத் திருமணம் இதுதான்!

விஷயத்தை இனி சற்று விளக்கலாம். ருஷ்யாவுடன் பிரிட்டன், அமெரிக்கா சமீபத்தில் செய்துகொண்டுள்ள ஏற்பாட்டைத்தான் நாம் குறிப்பிடுகிறோம். விவாகப் பெண் மிஸ் ஸ்டாலின். அவளது அம்மான் மாலடோவ். மாப்பிள்ளை மிஸ்டர் ரூஸ்வெல்ட், மாப்பிள்ளையின் தோழன், சர்ச்சில் கார்டல் ஹல், ஈடன் இவர்கள் பிள்ளைவீட்டு அம்மான்கள். ஒப்பந்தத்தைப் பேசி முடித்ததெல்லாம் அம்மான்கள். விவாகத்திற்கு மாப்பிள்ளையான ரூஸ்வெல்டும் வரவில்லை. அவரது தோழரும் வரவில்லை. மணப் பெண்ணான ஸ்டாலின் அம்மாளும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை. மணப்பிள்ளையைச் சந்திக்கவில்லை!

விவாக ஒப்பந்த நிபந்தனைகளை—ஷரத்துக்களை நாம் கவனிக்கவேண்டியது அவசியமில்லை. விவாகமானவர்களுக்கு விஷயம் புரியும்!

சதிபதிகள் நேரடியாகச் சந்திக்காமல் விவாகமாகமுடியுமா? அப்படியானால் அதுசட்டப்படி செல்லுபடியாகுமா? என்பதெல்லாம் சட்ட நிபுணர்கள் ஆலோசிக்கவேண்டிய விஷயம்!

இந்தக் கலியாணம் காதல் மணமா அல்லது காலத்துக்கேற்ற மணமாவென்பதை ஆண்டவன்தான் அறிவான்!

மாப்பிள்ளையின் தூர பந்துவான சாங்கேய் ஷேக் ஏன் திருமணத்துக்கு வரவில்லை? அழைப்புண்டா? இந்தச் சங்கதிகளெல்லாம் நிதானமாக யோசிக்கவேண்டிய விஷயங்கள். கலியாண அவசரத்தில் மாப்பிள்ளை வீட்டார் சில சமயம் மதிமயங்கிப் போவது சர்வ சகஜந்தானே? ஆனால் விவாஹ ஒப்பந்தத்தில் சைனாவின் சாக்ஷியம் மட்டும் வாங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மொத்தத்தில் புரட்சிகரமான திருமணம். மனமொத்த தம்பதிகளாக மாறிவிட்டால் இதற்கிணையான ஜோடிகளைக்காண்பது அரிது. உலகம் போற்றும் உன்னத ஜோடிதான். விவாகரத்து ஏற்படாவண்ணம் சதிபதிகள் வாழ உலகம் எதிர் பார்க்கிறது.

தம்பதிகள் நாயும் பூனையும் போலல்லாமல் செக்கு மாடுகள் போல் ஒத்து உழைக்குமாறு ஆசீர்வாதம் செய்வோம். ததாஸ்து சொல்லுங்கள். பெண்கள் கௌரீ கலியாணம் வழக்கம் போல் பாடட்டும்!

கடவுளுக்குக் கதிமோக்ஷம்!

இப்பூவுலகில் அனாதையாய், நிர்க்கதியாய், கையாலாகாத பரம்பொருளாய், ஊமையாய், அடிமையாய் மக்கள் இழைக்கும் சகல இன்னல்களையும் சகித்த வண்ணமாய் வாழ்க்கை நடத்துவது கோவில்களில் குடியிருக்கும்

கடவுளெனத் திட்டமாய்க் கூறலாம். டிரஸ்டிகள், அர்ச்சகர்கள் இவர்களது மனமிளகாவிடில் 'சாமி'க்கு நிவேதனம்கூட கிடைக்க மாட்டாது. இருட்டில் அடைபட்டு அவதிப்படத்தான்வேண்டும். கடவுளுக்குச் சொத்து இருக்கலாம், ஆனால் அனுபவிக்கக் கொடுத்து வைக்கவேண்டாமா!

இந்த டிரஸ்டிகள் சரிவரக் கடவுளைக் கவனித்துவருகிறார்களா என்பதைக் கவனிக்க 'டெம்பிள்கமிட்டி'க் கூட்டத்தாருண்டு. இந்தக் கூட்டத்தார் பேசாத சாமியைக் கவனிப்பதைவிட பேசும் சுற்றத்தாரைக் கவனிப்பதே மேலெனக்கொண்டுள்ளார்கள். வேண்டியவர்களை இஷ்டமானவர்களைக் கடவுளுக்குக் கார்டியனாக நியமிப்பார்கள். அதன் நிமித்தம் கூடுவார்கள். கடவுளின் குறைகளை விசாரிக்கவும் கூடுவதுண்டு.

இந்த டெம்பிள்கமிட்டி என்ற ஸ்தாபனம் தொலைந்தால்தான் கடவுளுக்குக் கதிமோக்ஷம் மேற்படுமெனச் சிறந்த அறிவாளிகள் கூறியுள்ளார்கள். அதையொட்டிச் சர்க்காரும் கமிட்டியின் சீட்டைக் கிழித்துவிடத் தீர்மானித்துள்ளார்கள்.

சங்கடங்கள் சில ஒழிந்தனவென டிரஸ்டிகள் சந்தோஷப்பட ஞாயமில்லை, இடமில்லை. ஸ்பெஷல் ஆபீஸர்கள் வரப்போகிறார்களாம். அவர் எல்லாவற்றையும் கவனித்துக்கொள்வார்!

A word of appreciation

"National Radio"

with Pardonable Pride reproduces below an opinion from the Talented Musician

★

Sri. G. N. Balasubramaniam, B. A. (Hons.)

(Travancore State Vidwan)

MANNARGUDI,
8-11-43.

I have great pleasure in recording my entire satisfaction regarding the Loud speaker arrangements made by the National Radio Central, Kumbakonam, to-day at Kunniyur house.

(Sd.) ***G. N. Balasubramaniam***

NATIONAL RADIO CENTRAL

Brihman Koil St., : : KUMBAKONAM

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

"ராமய்யா"

ஹரிகாம்போஜி ராகத்தில் "ராம நந்நு ப்ரோவரா" என்று ஒரு கீர்த்தனை ஸ்ரீ தியாகய்யர்வாள் இயற்றி இருக்கிறார். இந்த உருப்படியை சமீபமாக இரண்டொரு கச்சேரிகளிலும் ரேடியோவிலும் அரியக்குடி ராமானுஜய்யங்கார் பாடிவிட்டார். அதைச் சிறிது அதிகமாக மெருகுசெய்து, அங்கும் இங்கும் கொஞ்சம் பொடிவைத்துச் சலங்கைகள் கட்டி, "மெப்புலகை கந்நதாவு" என்ற சரணத்தில் 'தநிஸரிநிஸ' என்று ஒருசங்கதி அமைத்து அரங்கேற்றிவிட்டார். பிறகு சொல்லவேண்டுமா? பத்து நாளாக இந்தக் கீர்த்தனையைப் பாடாதவனில்லை. ரேடியோவிலேயே ஒரு நாள் சாயந்திரத்தில் மூன்றுபேர் இந்தக்கீர்த்தனையைப்பாடினார்கள். எல்லாரும் 'மெப்புலகை' என்ற இடத்தில் நிரவினார்கள். தங்கள் தங்கள் மனதில் அரியக்குடி மாதிரியாகவே பாடிவிட்டதாக அபிப்பிராயம். இன்னும் இரண்டு மாதங்களுக்கு இந்த உருப்படி படப்போகும் பாடு நீங்களே கவனியுங்கள்.

இதனால் ஏற்படுவது என்னவென்றால் சங்கீதத்தில் ஈடுபட்டவர்கள் பெரும்பாலாருக்கு நுனிப்புல் கடிக்கும் தன்மையே அதிகமாயிருக்கிறது. ராமானுஜய்யங்காரைப் போல ஒரு வித்வான் நல்ல உருப்படி ஒன்றையெடுத்துப் பங்கிடுசெய்து பாடிக்காட்டினால் அதைப் பிடித்துக்கொள்ளத் தயாராயிருக்கிறார்களே தவிர, சம்பிரதாயமான கீர்த்தனங்களை ஒவ்வொருவரும் தாம் தாமே தேடிப்பிடித்துப் பாடம் செய்வோமே என்ற அவா கிடையாது. ஊரில் உள்ளவள் ஒரே தாசி; அவள் யாருக்கென்று ஆடுவாள்? இப்பொழுது உள்ள சம்பிரதாய வித்வான்களில் சிரமம் எடுத்துக்கொண்டு பாடம் பண்ணி, நகாஸு மெருகு ஏற்றி ஜனங்கள் சந்தோஷப்பட வேண்டும் என்ற அவாவுள்ளவர் ராமானுஜ அய்யங்கார் ஒருவர்தான் தென்படுகிறார். இவர் ஒருவரால் எத்தனை கீர்த்தனங்கள் வெளிக்கு வரும். "எவரிகை அவதார மெத்திதிவோ" என்ற பழைய வஸ்துவைப் புதுப்பித்தார். ஒவ்வொரு கச்சேரியிலும் ஒவ்வொரு பழைய வஸ்துவைப் புதுப்பிக்கிறார். மற்றவர்களும் இம்மாதிரியே செய்துவந்தால் நன்றாயிருக்கும். ஆனால் அய்யங்கார் கைகளில் ஏறும் மெருகு மற்றையவர் கைகளில் ஏறுவதில்லை. காரணம் என்ன என்று அம்மாஞ்சியைக் கேட்டேன். அவன் சொல்கிறான்:- "அவர் ஒருவர்தான் கைகளில் இன்னும் காப்புகள் போட்டுக்கொண்டிருக்கிறார். தங்கக் காப்புகள் போட்டவன் கையில்தான் மெருகு ஏறும்".

ஸ்ரீ ராமாநுஜய்யங்காருக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரே ஒரு எச்சரிக்கை மாத்திரம் செய்யவேண்டுமென்கிறான் அம்மாஞ்சி. அவன் வாக்குக்களையே இங்குஎழுதிவிடுகிறேன். "ஓய் அய்யங்கார்வாள்! உமக்கு இருக்கும் சக்தியையும் சாமர்த்தியத்தையும் வெகு ஜாக்கிரதையாகப் பிரயோகம் செய்யவேண்டும் ஸ்வாமி! உம்ம கையில் சாணியைத் தூக்கினாலும் அது வெல்லம் ஆய்விடுகிறது. ஆகையால் நீர் இன்னும் சில வருஷங்களுக்குப் பழைய உருப்படிகளையே வெளியேற்றி, மெருகு செய்து, ஜனங்களுக்கு வீசிக்கொண்டு இரும். தயவு செய்து இந்த நவீன இயக்கங்களில் ஈடுபட்டு முண்டம் முழங்கால் ஸாஹித்யங்களில் கை வைத்து, சிற்றப்பன் சீராட்டி, கண்ணில் சுட்டானும் என்று செய்துவிடாதிர். நம்பாதே, வெம்பாதே, தும்பாதே என்றுள்ள நவீன ஸாஹித்யங்களில் ஒன்றை நீர் எடுத்துப் பாடிவிட்டீரோ, பேய்களுக்குக் கள்ளு விட்டமாதிரி ஜனங்கள் எல்லாம் நம்பாதே உருப்படிகளையே தேம்பித்தேம்பிப் பாடிக்கொண்டிருப்பார்கள். அந்த மஹா பாபம் உம்முடைய கால்களில் சுற்றிக்கொள்ளும். ஜாக்கிரதை. உமக்குள்ள கௌரவம் என்றும் சாச்வதமாக இருக்கவேண்டுமானால் பழைய காலத்துப் பெரியவாள் உருப்படிகளையே எடுத்து மெருகு செய்து வெளியிடும். வெள்ளி, தங்கம் வைரம் விற்கும் தற்கால விலையில் பழைய வஸ்துக்களைப் புதுப்பித்து வைத்துக்கொள்வதே உசிதமான காரியம். புதியவைகளை வாங்கினால் முக்கால்வாசி வெள்ளிக்குத் தங்க முலாம் பூசினதாகவும், பாழடைந்த ரங்கூன் டைமண்டுகளாகவும் தான் கிடைக்கின்றன. ஆகையால் உஷாராயிருங்கள், ஐயங்கார் ஸ்வாமிகளே! சொல்லிவிட்டேன்".

புராண மித்யேவ நஸாது ஸர்வம் நசாபி காவ்யம் நவமித்யவித்யம் என்றெல்லாம் சொல்லிக்கொண்டு, தற்சமயம் புதிய இயக்கங்கள் ஏற்பட்டிருக்கின்றனவே, அவைகளில் உள்ள அஸந்தர்ப்பங்கள் பலவுண்டு. காவ்யங்களைப் பரீக்ஷை செய்து உத்தமம் எவை, மத்திமம் எவை, அதமம் எவை, என்று உணரத் தகுந்த யோக்கியதை வெகு சிலருக்கே உண்டு. அந்தப்பரீக்ஷை வைரப்பரீக்ஷை மாதிரி நுட்பமாகவும், நல்ல வெளிச்சத்திலும் சாந்தமாகவும், தெரிந்தவர்கள் செய்யவேண்டும். தடபுட

லாகத் தட்டியறைந்துகொண்டு ரேடியோ மூலம் நவீன சாகித்யங்களை வாரி வீசி விட்டால், குரங்குகள் பிடிப்பதுபோல் விஷயந் தெரியாதவர்கள் அவைகளைப் பிடித்துக் கொண்டு இடம், வேளை தெரியாமல் அவைகளைப் பிரசாரப்படுத்தி அத்தகைய பிரசாரத்தையே ஒரு இயக்கமாகக் கைக்கொண்டு களேபரம் செய்துவிடுகிறார்கள். புதிய உருப்படிகள், புதிய ராகங்கள், புதிய பாடகர்கள், புதிய சபாக்கள் எல்லாம் புதியதாகவே வேண்டும் என்று யாவரும் விரும்ப, இத்தகைய விருப்பத்திற்கு அளவேயில்லாமல் போய், பழையவையென்றால் மூக்கைத் தூக்கிக் கொண்டு, புருவத்தை நெளித்து, வாயைக் கோணுகிறார்கள். பழைய உருப்படிகளையும் புதியமாதிரி பாடவேண்டும் என்ற கொள்கை பல வித்வான்களுக்கு ஏற்பட்டிருக்கிறதுபோல் தெரிகிறது. நாகசுர வித்வான்கள் தான் தற்காலத்தில் தம்புரா, பிடில், மிருதங்கம் பக்க வாத்தியங்களுடன் வாசிக்கத் தொடங்கிவிட்டார்களே! இதை ஹாஸ்யம் செய்துசமீபத்தில் ஒரு சித்திரப்படம் வரைந்திருப்பதைக் கண்டேன். அதில் காத்திரவித்வான் ஒருவர், ஒத்து, தவுல், ஜாலர் இவைகளைப் பக்க வாத்தியங்களாக வைத்துக்கொண்டு பாடிக் கொண்டிருந்தார். அம்மாஞ்சிக்குச் சித்திரம் எழுதத் தெரிந்திருந்தால், காத்திர வித்வான்கள் வாயால் பாடுவதைவிட மூக்கினால் பாடுவதாகவும், பிடில் வித்வான் தவுல் கட்டையால் பிடில் தந்திமேல் அடிப்பதாகவும் வரைந்திருப்பான். நவீனத்தின் காலகோலம் இப்படியும் நேரலாம். நவீனம் முற்றி நாகரிகம் பழுதுபடலாம். அப்படியானால் நாம் என்ன செய்வது?

மதராஸில் புதிய சங்கீத சபைகள் மூன்று மாதங்களில் மூன்று உற்பத்தியாயிருக்கின்றன. பழைய பார்த்தசாரதி ஸ்வாமி சபை திருவல்லிக்கேணியில் புனர்ஜன்மம் எடுத்திருக்கிறது. இந்தச் சபையைத் திரும்பவும் ஸ்தாபிதப்படுத்தியவர்கள் பெரும்பாலும் ஸம்பிரதாய ரசிகர்கள் என்றும், பழைய அனுஷ்டானங்களைக் கைக்கொண்டவர்களென்றும் கேள்விப்படுகிறோம். மைலாப்பூரில் புதிய சபையொன்று வரப்போகிறதோ வந்துவிட்டதோ தெரியவில்லை. அதற்கு வேண்டிய முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றனவென்று மாத்திரம் அம்மாஞ்சி சொல்கிறான்.

இதெல்லாம் க்ஷேம சமாசாரங்களாகவே எண்ணவேண்டும்.

தீக்ஷிதர் தினக்கொண்டாட்டங்கள் மதராஸில் நடைபெற்றனவென்று பத்திரிகைகளில் படித்தோம். மதராஸில் எப்போதும் பேச்சுக்குத்தான் குறைவு இல்லையே! தீக்ஷிதர்வாள் சங்கீதத்தைப்பற்றி எல்லாரும் பேசினார்கள். "எல்லாரும்" என்றால் வழக்கமாகப் பேசுபவர்கள் எல்லாரும் என்று எழுதச்சொல்லுகிறான் அம்மாஞ்சி. பட்டணத்தில் சில சில விஷயங்களைப்பற்றி, சிற்சில மனுஷாள்தான் பேசுவார்கள். இது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. ஏதோ சில இடங்களில் பாடவும் பாடினதாகக் கேள்வி. நடக்கட்டும். இதாவது மதராஸில்நடந்ததேஎன்று சந்தோஷிக்கலாம்.

"ஆமாம், இதெல்லாம் சரிதான்! அந்த க்ஷேத்ரஞ்யருக்கு ஒரு தினம் கிடையாதோ, அதைக் கொண்டாடும் வழக்கம் உண்டோ" என்று கேட்கிறான் அம்மாஞ்சி. எனக்குத் தெரியாததால் நான் பதில்சொல்லத் தெரியாமலிருக்கிறேன். க்ஷேத்ரஞ்யர் உருப்படிகளிலே, சுமார் 200 அச்சிட்டிருப்பதாகவும், சுமார் 70 வீணை தனம்மாளுக்குப் பாடம் உண்டென்றும், தற்கால வித்வான்களில் ஒருவருக்கும் 7-க்கு மேல் பாடம் இல்லையென்றும் ஒரு நண்பர் சொன்னார். அம்மாஞ்சியைக் கேட்டால் பதில் சொல்லமாட்டேன் என்கிறான். வித்வான்களையே போய்க்கேளேண்டா, என்கிறான். அப்படிச்செய்ய எனக்குத் தைரியமில்லை. இது எப்படியிருக்கிறதென்றால், நான் எலிமெண்டரி மாத்மாடிக்ஸ் (கணக்கு) பேப்பரில் பரீக்ஷை எழுதியமாதிரி இருக்கிறது. பேப்பரில் 18 கணக்குகள் இருந்தன. நான் போட்ட கணக்குகள் 5. அதில் சரியாக இருந்தவை 2. அப்படியும் நான் பரீக்ஷையில் தேறிவிட்டேன். கர்னாடக சங்கீதத்திலுள்ள சாராம்ஸத்தையே கரைத்து வடிக்கட்டி எடுத்து க்ஷேத்ரஞயருடைய உருப்படிகளில் $3\frac{3}{4}$ உருப்படிகள் பாடம் பண்ணினவர்களும் இந்தக்காலத்தில் வித்வான்களாக விளங்குகிறார்கள்.

அம்மாஞ்சி சொல்லுகிறான்:- "எலிக்குஞ்சு கூட விக்னேச்வர வாகனமில்லையோ, நம்முடைய சாஸ்திரத்திலே. அந்தமாதிரி சரிகை வேஷ்டி போட்டு, ஜவ்வாது பொட்டுஇட்டு, ஸா, பா, ஸா சொன்னால் வித்வான்தான்".

சிந்தனைக்கு உணவு

தி. சே. சௌ. ராஜன்

"ஒரே ஒரு வருஷத்தில் ஸ்வராஜ்யம்" இது மகாத்மா காந்தியின் வாக்கு. ஜோஸ்யத்திலும், சகுனத்திலும், ராகுகாலத்திலும், சூலத்திலும் பரிபூர்ண நம்பிக்கைக்கொண்ட நமக்கு ஸ்வராஜ்யம் ஒரு வருஷத்தில் வருவது நிச்சயம் என்கிற எண்ணம் ஊர்ஜிதமாகிவிட்டது. மகாத்மாவே சொல்லிவிட்டாரே, அப்படிப்பட்ட மகாத்மாவின் வாக்குப் பொய்யாகிவிடுமா என இருதயபூர்வமாக நம்பிவிட்டோம். கலியுகம் முடியப்போகிறது. பிறகு வரவேண்டியது ராமராஜ்யம்தானே? காந்தி சொல்வானேன்? நமது சாஸ்திரங்களிலே முன்பே இப்படி எல்லாம் வரப்போகிறதென்று எழுதிவிட்டார்களே என்கிற திண்ணைப்பேச்சு. ஆனால் ஸ்வராஜ்யம்—வாக்குக் கொடுத்ததற்கு, கொடுத்த நாளாகச் சிறைத் தண்டனை. உண்ணா விரதம். காயகல்பம். இதனால் நோயற்ற வாழ்வும் நீண்ட ஆயுளும் காந்திஜீக்குக் கிடைத்துவிட்டன.

அடிமை நாட்டில் மனிதனுக்குச் சுதந்திரமெங்கே. சிறைச்சாலையில்தான் என்று காந்தி நிரூபணம் செய்கிறார். ஆகையால் அவருக்கும் அவரது சீடர்களுக்கும் சிறையில் ஸ்வராஜ்யம் கிடைத்தது. வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் நமக்கு அடிமை வாழ்வு நடக்கிறதென்பதை உணர்ந்துகொள்ளச் சக்தியில்லை. ஆண், பெண், இளைஞர்கள், முதியோர் எல்லோரும் தினசரி அரைமணி நேரம் நூல் நூற்றால் ஸ்வராஜ்யமென்றார் காந்தி. அந்த விரதத்தை இன்றும் ஏற்று அவர் கையாண்டு வருகிறார். அவ்விதம் எல்லோரும் நூற்றால் ஒரு வருஷத்தில் ஸ்வராஜ்யம் என்றுதான் அவர் பறைசாற்றினார். மக்கள் பெரும்பாலோர் அவ்விரதத்தை ஏற்க உடன்படவில்லை. ஆனால் ஸ்வராஜ்யம் கிடைத்தால் நலமென நினைத்தார்கள். அவர் சொல்லிய முறையை மட்டிலும் கைப்பற்றவில்லை. அதற்கேற்ற உணர்ச்சி, முயற்சி, செய்கையில் காட்டவில்லை. எனினும் மகாத்மா காந்திக்கு ஜயகோஷம் போடுவதை நிறுத்தவில்லை. இனியும் நிறுத்தப்போவதில்லை.

தீண்டாமையை அறவே ஒழித்துவிட வேண்டும். அதற்கறிகுறியாகக் கோயில்களை ஹரிஜனங்களுக்குத் திறந்துவிடவேண்டும். சுதந்திரம் கிடைப்பதற்குமுன் நம்முள்ளிருக்கும் அடிமைப் பழக்க வழக்கங்களை ஒழிக்க வேண்டும். தீண்டாமை தத்துவம் அடிமைத்தனத்திற்கு அஸ்திவாரம். மனிதனை மனிதனாக

நடத்தவேண்டும். தீண்டாமை இதற்கு நேர் விரோதம்...... என்றார் காந்திஜீ. காங்கிரஸ் ஆட்சியில் மதுரை திருநெல்வேலி ஜில்லாக்களில் சில பெரிய புராதன ஆலயங்கள் எல்லா மக்களுக்கும் திறந்துவிடப்பட்டன. அதனால் அந்த ஆலயங்கள் எவ்விதத்திலும் முன்னிருந்ததைவிடக் குறைவுபடக் காணோம். புள்ளி விவரங்களைக் கவனித்தால் எல்லா வகையிலும் அக் கோயில்கள் முன்னேற்றமடைந்திருக்கின்றன. ஆனாலும் பொது மக்களிடத்தில் தீண்டாமை உணர்ச்சி இன்னும் மறையவில்லை. ஸனாதனிகளும் ஸ்வராஜ்யம் வேண்டுமென்கிறார்கள். அவர்கள் வேண்டும் ஸ்வராஜ்யம் பெரும்பான்மையான ஏழை மக்கள் தேடும் சுதந்திரம் என்று சொல்லமுடியுமா என்பது சந்தேகம்.

மக்கள் எல்லோருக்கும் உணவுவேண்டும். உணவு கிட்டும் முறையைப் பின்பற்ற உரிமை வேண்டும். பிறருக்குத் தீங்கிழைக்காமல் தனது

NICO FERRIN

Iron and Vitamin B Tonic.

நிக்கோ-பெரின்

அயர்ன் வைடமின் B டானிக்

:o:

ரத்த சோகை, பெர்னீஷஸ் அனிமீயா (Anaemias-Primary, Secondary) பல ஹீனம், ரத்தக்குறைவு, முதலிய வியாதிகளுக்குச் சிறந்த டானிக்.

ஜீரண சக்தியைச் சீர்படுத்துவதிலும், ரத்தத்தை விருத்தி செய்வதிலும் நல்ல உதவி செய்கிறது. ஜ்வரங்களுக்குப் பிறகு ஏற்படும் பலஹீனத்தையும், கர்ப்ப ஸ்திரீகளுக்கு ஏற்படும் சோர்வு, ஒச்சல் பலஹீனத்தையும் போக்குகிறது.

மருந்துகள் எல்லா ஊர்களிலும் எல்லா இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:—

K. P. LIMITED,

40, Hunters Road, VEPERY MADRAS.

உரிமைகளை—தப்பு, தவறு செய்வதற்குக்கூட-காப்பாற்றத் திறன்வேண்டும். இதுதான் சுதந்திரத்திற்கு அறிகுறி. காந்தியின் ஸ்வராஜ்யமும் அதுதான். அதை அஹிம்ஸா முறையில் பெறவேண்டும், பெறமுடியும். நமக்கு விரோதிகள் எவ்வளவு சக்தி வாய்ந்தவர்களாக இருப்பினும் நாம் ஜெயமடையலாம். நமது உரிமைகளை நாம் தேட, அடைய, பாதுகாக்க, பாடுபட வழிவேண்டும். "நான் சொல்வதை, செய்வதை நீங்கள் பின்பற்றினால் நான் குறிப்பிடும் காலத்திற்குள் சுதந்திரம் சம்பாதித்துக்கொடுக்கிறேன்" என்று ஓயாது சொல்லிவருகிறார். "இந்த அஹிம்ஸா தத்துவத்தினால் நாம் ஆண்மை இழந்தோம். ஊக்கமிழந்தோம்" என்றெல்லாம் நம்நாட்டில் ஒரு சாரார் பேசிவருகிறார்கள். இது முற்றிலும் தவறு. நாம் ஆண்மை இழந்ததற்கு அடிமைத்தனம்தான் காரணம். கையாலாகாதவன், கோழை மனதுடையவன், பயங்கொள்ளி, சோம்பேறி, கஞ்சா அபின் சாப்பிடுபவன் இவர்களெல்லோரும் அஹிம்ஸா வாதிகளாகிவிட்டார்கள். அடிமைத்தனத்திற்கே ஒருவேதாந்தம் உண்டுபண்ணிக்கொண்டு நாட்டைப் பாழாக்கிவிட்டார்கள். அதனால் சத்தியத்தின் தன்மை மறைந்துவிட்டது. அஹிம்ஸா தத்துவத்தின் நடைமுறை சத்யாக்கிரகம். சத்யாக்கிரகம் செய்பவனுடைய குணம், குறி இவைகளைப் பற்றி விவரமாக எழுதியிருக்கிறார் காந்திஜீ. பயங்கொள்ளி சத்யாக்கிரகியாக முடியாது. பயத்தைக் கடந்த வீரனே சத்தியாக்கிரகம் செய்யமுடியும். சாகத்தெரிந்தவன், துணிந்தவன், இவர்கள் வீரர்கள். பிறனை வதைக்காமல் தியாகம் செய்பவன் அகிம்சா முறையைக் கையாளமுடியும். அக்கிரமம் செய்பவனைத் தடுக்கவேண்டும். உயிரைக்கொடுத்துத் தீமையைத் தடுக்கவேண்டுமானாலும் அவ்விதம் செய்யவேண்டும். யுத்தத்தில் உயிரைவிடுபவன் வீரசொர்க்கம் செல்வதாகப் புராணங்கள் கூறுகின்றன. விரோதியை எதிர்க்காமல் கைகட்டி, வாய்மூடி, தொண்டுசெய்பவன் அஹிம்ஸா தர்மத்தைப்பற்றி பேச யோக்கியதை கிடையாது. நமது நாட்டில் அஹிம்ஸா தர்மத்தின் தத்துவத்தை அறிந்தவர்கள் அநேகருண்டு. கையாள்பவர் மட்டிலும் வெகு சிலர். அவர்களில் பெரும்பாலோர் முற்றிலும் துறந்த முனிவர்கள். அவர்களுக்கு இந்தத் தத்துவம் முக்தி பெறும் முயற்சிக்கு இன்றியமையாத சாதனம்.

இந்தச் சக்தியைத் தேசீய விடுதலைக்குப் பெரும்பான்மையான மக்கள் கையாளவேண்டுமென்று காந்திஜீயின் விருப்பம். அவர்கள் அவ்வாறு செய்தால் விடுதலை கிடைப்பது நிச்சயம். ஆனால் அதற்குத் தகுந்த பயிற்சி கிடையாது. தேவையான தியாக உணர்ச்சி, தவம் இரண்டும் நம்மிடம் போதிய அளவு இல்லை. ஆதலால் ஆயிரக்கணக்கான சிலர்கள், தேசபக்தர்கள், இளைஞர் எல்லோரும் பல வருஷங்கள் கடுஞ்சிறைக்கு ஆளாகியிருக்கிறார்கள். அடிமைத்தனத்தை நினைந்து நினைந்து சிறுமை உள்ளம் குமுறி, விடுதலையடைய அல்லும் பகலும் ஓயாது உழைக்கும் தேசபக்தனுக்குச் சிறையில் விடுதலை உணர்ச்சி சற்று இருப்பதான மனோபாவம் உண்டாகலாம். சிறை அனுபவத்தைப் பன்முறை அனுபவித்ததில் சில முடிவுகள் எனக்கு ஏற்பட்டிருக்கின்றன. நியாய உணர்ச்சி, தேசபக்தி, சமூகத் தொண்டுசெய்யும் ஆர்வம், பரோபகார சிந்தனை இவைகள் நிரம்பப்பெற்றவன் ஒரு வருஷமோ அல்லது ஆறு மாதமோ சர்க்கார் சிறையிலிருப்பானேயாகில் இந்த நற்குணங்கள் எல்லாம் மறைந்துவிடும். சில்லரைச்சண்டை, பொறாமை, ஜாதிமத விபரீதங்கள், சிறுமைத்தனம் இவைகள் மேலிட்டு, சமூகத்தின்பேரில் கோபத்துடன் அநேகர் வெளிவருகிறார்கள். தண்டனை அடைந்தவர்கள்பேரில் குற்றமில்லை. தற்காலம் சிறைவைத்து நடத்தும் முறை இதற்குக் காரணம். சில வருஷங்களுக்கு முன்பாக அரசியல் கைதிகளாக இருந்து விடுதலை அடைந்த ஓர் கோஷ்டியார் பசியால் வருந்தும் நிலைமைக்கு வந்துவிட்டனர். காங்கிரஸ் கமிட்டி நிர்வாகிகள் தகுந்தபடி தங்களுக்கு உதவியளிக்கவில்லையெனக் கோபம். சிறையில் வகுப்புவாரியாகப் பிரித்து உயர்வு, தாழ்வாக நடத்தப்பட்டதில் கோபம். பொதுமக்கள் தங்கள் தியாகத்தைச் சரியான முறையில் அறியாமல் தவிக்கவிடுகிறார்கள் என்ற வருத்தம். மனைவி மக்களைவிட்டுப் பிரிந்து, பிழைப்பு வருவாயுமில்லாமல், சிறைவாசம் செய்பவர்களின் கஷ்டம் அளவிடமுடியாது. இது உண்மை. ஆனால் தகுந்த சன்மானம் கிடைக்கவில்லையேயென்று மனமாறுதல் அடைந்து நொந்துகொள்வதில் பயனில்லை.

சில நாட்களுக்கு முன்பாக வேலூர் சிறையினின்று விடுதலையடைந்த சில தியாகிகள் திருச்சிக்கு வந்தார்கள். வேலூரைவிட்டுப் புறப்பட்டவுடன் நேராகத் தங்களுடைய ஊர்களுக்குப் போவதற்காக இனாமாக அளிக்கப்பட்ட பிரயாணச் சீட்டுக்களை வேண்டுமென்றே காலதாமதம் செய்து, உபயோகமற்றதாக்கிவிட்டு, போகும் வழியிலுள்ள பல ஊர்களில்தங்கி ரயில்செலவிற்கென்றும், சாப்பாட்டுசெலவிற்கென்றும் பலரிடத்தில்யாசகம் வாங்கிக்கொண்டு வந்தார்கள். பகல் சுமார் ஒருமணி நேரம். எனது வீட்டை நாடி அவர்கள் வந்தசமயம் நான் காலையில் எனது வேலைகளில் அலைந்து திரிந்ததால் அயர்ந்து தூங்கிவிட்டேன். சிறையிலிருந்து திரும்பும் கோஷ்டியார் வந்து என்னைப் பார்க்கவேண்டுமெனச் சொன்னதின்பேரில் வீட்டிலிருந்தவர்கள் நான் தூங்கிக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். வேலூர் சிறையிலிருந்து சிலர் வந்திருக்கிறார்கள். உடனே பார்க்க விரும்புகிறார்களென்று சொல்லி எழுப்புங்கள் என்று சொல்லியும் எனது வீட்டார் மறுத்துவிட்டார்கள். நாலு மணிக்கு வந்தால் பார்க்கலா

மென்றும் சொன்னார்கள். நான் தூங்கியெழுந்ததும், மூன்றரை மணிக்கு வரும்படி சொல்லியிருந்த ஒரு நண்பர் வந்து என்னிடம் மேல் மெத்தையில் நான் படுத்திருக்கும் அறையில் பேசிக்கொண்டிருந்தார். பேச்சிடையே பக்கத்து அறையில் மனித சப்தம் நடமாடுவதைக் கேட்டு நான் படுக்கையைவிட்டு எழுந்து வந்தேன். நான் முன்பின் அறியாத ஒருவர் நின்றுகொண்டிருந்தார். "ஏன் ஐயா, தகவல் கொடுக்காமல் தாங்கள் மேலே ஏறிவந்து பக்கத்து அறையில் நின்றுகொண்டிருக்கலாமா? நான் தனித்துப் பேசவேண்டுமென, எனது தொழில் நண்பர் ஒருவருடன் பேசிக்கொண்டிருக்கிறேன். அப்படிப் பேசிக்கொண்டிருக்கிறதும் தங்கள் காதில் விழுந்திருக்கக்கூடும். இப்படி வருவது மரியாதையல்ல" எனச் சொல்லியவுடன் என்னை ஏறஇறங்க ஒருதரம் விழித்துப் பார்த்துவிட்டு, வேகமாகக் கீழே இறங்கிப் போய்விட்டார். அரைமணி நேரம் சென்று நான் கீழே இறங்கிவந்து பார்த்தபொழுது மேலே ஏறித் தேடிவந்தவரைக் காணவில்லை. மறுநாள் பிற்பகல் இரண்டு மணிக்கு முதல் நாள் வந்தவர் நான் வீட்டு வாசலில் நின்றுகொண்டிருக்கும்பொழுது வந்தார். என்ன சங்கதி என்று கேட்டதில் தான் வேலூர் சிறையிலிருந்து இன்னும் மூவருடன் விடுதலையடைந்து ஊர் ஊராகத் தங்கி வழிச்செலவிற்காக நன்கொடை பெற்று வருவதாகவும், திருச்சியிலும் சில நண்பர்கள் பணம் கொடுத்து உதவியதாகவும், அதுபோதாததால் மேற்கொண்டு நானும் ஏதாகிலும் கொடுக்கவேண்டுமெனவும் சொன்னார். முதல் நாள் மேல்மாடியில் ஏறி வந்தவர் இவராக இருக்கலாமென எண்ணி, "ஏன் ஐயா நீர்தானே நேற்றுவீட்டின் மேல்மாடிக்கு எனது அறைக்கு வந்தவர். இப்படி வரலாமா?" என்றேன். மறுபடியும் என்னை ஏறஇறங்கப் பார்த்துவிட்டு, "எங்கள் ஊரில் இந்தமாதிரி வழக்கம் கிடையாது. நாங்கள் எந்த வீட்டிலும் இஷ்டம் போலப் போவோம்" என்றார். இந்தப் பதில் என்னைத் தூக்கிவாரிப்போட்டது, இப்படியும் ஊரும் மனிதர்களும் உண்டாவென்பது எனது ஆச்சரியம். இந்தப் பதிலைக் கேட்டவுடன் அவருக்கு உதவி செய்ய எண்ணம்கொண்டிருந்த எனது மனம் மாறிவிட்டது. ஆனாலும் மிகவும்பணிவாக நான் உதவிபுரியும் படியான நிலையில் இல்லை எனத் தெரிவித்தேன். "அப்படி நான் கேள்விப்படவில்லையே" என்றார் அவர். "அது என்னுடைய குற்றமில்லை" என்றேன். அவருக்கு உண்டான கோபத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு, "உங்களைப்போல விநயமாகப் பேச நாங்கள் கற்றுக்கொள்ளவில்லை" என்று சொல்லிவிட்டுக் கடுகடுத்த முகத்தோடு வெளியேறினார்.

சத்தியாக்கிரக யுத்தத்தில் தளர்ந்துபோன அகதிகளுக்குப் பொது மக்களும், காங்கிரஸ் கோஷ்டியாரும் உதவிபுரிய வேண்டுவது அவசியம். அதற்கென தனியாக ஓர் நிதி திரட்டவேண்டும். உண்மையாக அவதிப்படுவோர்களைக் காப்பாற்றவேண்டும். யாதொரு உதவியையும் எதிர்பாராத வகையில் தொண்டு செய்யவேண்டுமென அடிக்கடி மகாத்மாஜீ வற்புறுத்தியிருக்கிறார்கள். ஆனால் இது நடைமுறையில் சாத்தியமில்லை. யுத்தத்தின் காரணமாகக் குற்றமற்ற அநேகர், போலீஸார் சந்தேகத்திற்கு ஆளாகி, விசாரணையின்றிச் சிறைப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது சிறையிலிருக்கும் அநேகர் இப்படிப்பட்டவர்கள்தான். ஆனால் 1940-ஆம் வருஷத்தில் உத்தரவு பெற்று, தனிப்பட்ட சட்டமறுப்புச் செய்த காலத்தில் சட்டசபை அங்கத்தினர்கள், ஜில்லா போர்டு. முனிசிபாலிடி, பஞ்சாயத் போர்டு, காங்கிரஸ் சபைகள் நிர்வாகிகள் எல்லோரும் சிறை சென்றார்கள். சிறைசெல்வதில் ஒரு தனிப் பெருமைகொண்டார்கள். ஒருவருடன் ஒருவர் போட்டிபோட்டுச் சிறை புகுந்தார்கள். தேசபக்தன் என்ற பெயர் வாங்குவதற்கு, சிறைவாசம் அறிகுறியாகமாறிவிட்டது. பொது ஸ்தாபனங்களில் நிர்வாகம் பெறமக்களின் ஆதரவைப்பெறுவதற்கு சிறைசெல்லவேண்டுமென நினைத்ததுமுண்டு. பணம் படைத்தவர்கள் சிறைவாசத்தை அதிக கஷ்டமில்லாமல் அனுபவிக்கவேண்டிய முறைகளைக் கையாண்டார்கள். ஆனால் இது சத்யாக்கிரக

KERMES INDICA

கர்மஸ் இன்டிகா

—:o:—

க்ஷயம் இழுப்பு (Asthma) இருமல், கக்குவான், குத்திருமல், ப்ராங்கைடீஸ், நியூமோனியா முதலிய நோய்களுக்கும் இன்னும் சுவாசக்குழாய்கள், சுவாசப்பை சம்பந்தமான சகல வியாதிகளுக்கும் சிறந்த மருந்தென்று வைத்திய நிபுணர்களால் ஆமோதிக்கப்பட்டது.

கபத்தை வெளியாக்கும் தன்மையுடையது. கோழையைச் சுலபமாய் இருமி வெளிப்படுத்தி இருமலைக் குணமாக்கி மார்பு விலாபக்கத்திலுள்ள வலியைப்போக்கி இழுப்பைக் குணமாக்குகிறது.

மருந்துகள் எல்லா ஊர்களிலும் எல்லா இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:—

K. P. LIMITED,
40, Hunters Road, VEPERY MADRAS.

முறையெனச் சொல்லமுடியாது. அதிகாரிகளுக்கு நம் நாட்டினருடைய எண்ணத்தை அறிவுறுத்தும் முறையாக எண்ணவேண்டுமே தவிர வேறில்லை. ஆனால் நம் தேசத்து அதிகாரிகள், இங்கிலாந்தில் ஆட்சிமுறை நடத்தும் கூட்டத்தினர். நாம் கோரும் சுதந்திரம் முறையென எண்ணவில்லை. அடக்கி ஆள்வதே யுத்தத்திற்கேற்ற சாதனம் என்று முடிவு செய்துவிட்டார்கள்.

நாடு சத்தியாக்கிரகத்தில், அஹிம்ஸா முறையில் சுதந்திரம் கோருகிறதென்று மகாத்மாஜீ அடிக்கடி சொல்லுகிறாரே, அவர் பொய்யா சொல்லுகிறார்? இல்லை. நாம் சுதந்திரம் கோருவது உண்மை. பெரும்பாலோருக்கு அஹிம்ஸா முறையைப்பற்றித்தெரியும். ஆனால் அதைக் கையாள்வதற்குப் போதிய மன உறுதி கிடையாது. காந்திஜீயவர்களுக்கு இது நன்கு தெரியும். சுதந்திரம் வேண்டுமா, அல்லது அதற்குப்பதிலாக அஹிம்ஸாமுறைவேண்டுமா என்று கேட்டால் எனக்கு அஹிம்ஸா முறைதான் வேண்டுமென விடையளிப்பார். சுதந்திரம் அஹிம்ஸா முறையை நிறைவேற்றி வைக்கச் சக்தி கொடுக்குமென்பது அவரது எண்ணம். இது அரசியல் வாதிகள் கோரும் சுதந்திரத்திற்கும் மகாத்மா காந்தி விரும்பும் சுதந்திரத்திற்குமுள்ள பேதம். இந்த ரகசியம் அநேகருக்குப் புலப்படுவதில்லை. காங்கிரஸின் மூலமாக அஹிம்ஸா முறை பரவுவதற்கு இடமிருப்பதென அறிந்து காங்கிரஸ் பொறுப்பை வகித்து நடத்த இசைந்துள்ளார். காங்கிரஸ் நாளைய தினம், போர்த்தொழிலில் ஈடுபட வேண்டும். சுதந்திரத்திற்கு அதுதான் வழி என்ற கொள்கையைப் பின்பற்றுமானால், அந்தக் காங்கிரஸில் காந்திஜிக்கு இடமில்லை. வீர சாவர்க்கர், வரதராஜுலு நாயுடு இவர்களைப்போன்றவர்களுக்குத்தான் இடமுண்டு. ஆனால் காங்கிரஸ் இன்னும் கொடுமைக் கொள்கைக்கு இடம்கொடுக்கவில்லை. அஹிம்ஸா முறையால் அரசியல் விடுதலை கிடைக்குமென்பதான கொள்கை தற்சமயம் பயன்படவில்லை. உலகம் முழுதும், கொலை செய்யும் முறையில் ஈடுபட்டுப் போராடிக் கொண்டிருக்கிறது. இதைத்தடுக்கக் காங்கிரஸ் இந்தியாவால் முடியவில்லை. யுத்த தத்துவம் தாண்டவமாடிக் கொண்டிருப்பது தான் இதற்குக்காரணம். இதேநிலையில்தான் உலகம் போய்க்கொண்டிருக்குமா அல்லது காந்திஜீயின் அஹிம்ஸா முறையைக் கைப்பற்றுமா, அப்படிக் கைப்பற்றினால் எக்காலத்தில் அது நடைபெறும், அரசியல் சுதந்திரம் இதன் மூலம் கிடைத்திடுமா. கிடைத்தாலும் கொலைத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் மற்ற மனித வர்க்கத்தினிடையே இதைக் காப்பாற்ற முடியுமா? இதெல்லாம் சிந்தனைக்குரிய விஷயங்கள்.

மேதாஸ்

"சுந்தரி எலிக்ஸர்"

ஸ்திரீகளின் சூதக சம்பந்தமான வியாதிகளுக்கு

★ சிறந்த டானிக் ★

ஆயுர்வேத முறைப்படி தயார் செய்தது.

பிரபல டாக்டர்களின் மதிப்பைப் பெற்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:—

K. S. மேதா & கோ., மதராஸ்.

ஹைதராபாத் ஏஜண்டு:—

ஸெண்ட்ரல் மெடிகல் ஸ்டோர்ஸ்,

ஸெகண்ட்ராபாத்.

அன்பின் எதிரொலி

என். நாகராஜன்

ராமச்சந்திரய்யர் எட்டாவது வகுப்பில் நுழைந்ததும் வகுப்பில் என்றுமில்லாத அமைதி குடிகொண்டிருந்தது. அந்த நிசப்தத்தில் பையன்கள் மூச்சுவிடும் சப்தம் நன்ருகக் கேட்டது.

சந்தேகத்துடன் அறையைச் சுற்றிலும் கவனித்தார். அவர் சந்தேகத்திற்கு ஏற்ருற்போல் அவர் கண்கள் வகுப்பின் நடுச்சுவரில் மாட்டப்பட்டிருந்த கண்ணுடி ஸ்டாண்டின் மேல்தான் சென்றது. அந்த ஸ்டாண்டின் கண்ணுடி சுக்கலாய் உடைந்து அதனுள்ளிருந்த உருவச் சிலையின் கழுத்து ஒடிந்து கீழே சாய்ந்திருப்பதைக் கண்டதும் அவருக்கு ஏற்பட்ட கோபத்திற்கு ஒரு அளவேயில்லை.

அது ராம அய்யங்கார் உருவச்சிலை. அவர்தான் அந்தப் பள்ளிக்கூடத்தையே ஸ்தாபித்தவர். அவர் ஞாபகர்த்தமாகத்தான் அந்தச் சிலை, கண்ணுடி ஸ்டாண்டில் சுமார் 50 வருஷ காலமாக வைக்கப்பட்டிருந்தது.

எட்டாவது வகுப்பில் நாற்பது பிள்ளைகள் படித்துக்கொண்டிருந்தனர். அதில் நான்கைந்து மாணவிகளும் உண்டு. மற்ற வகுப்புக்களிலிருந்து சுமார் ஏழெட்டு கஜ தூரத்துக்கப்பால்தான் அந்த வகுப்பு அமையப்பெற்றிருந்தது. அதற்கடுத்தது ஹெட்மாஸ்டரின் அறை. வேறு வகுப்பு மாணவர்கள் அந்த வகுப்பினுள் வந்து விளையாடுவது என்பது நடவாத காரியம். ஆகவே எட்டாவது வகுப்பு மாணவர்களில் யாராவது ஒருவர்தான் குற்றவாளியாக இருக்கவேண்டுமென்று அவர் மனதில் பட்டது.

ராமச்சந்திரய்யர் ஹெட்மாஸ்டரின் அறைக்குள் சென்ருர். ஐந்து நிமிடங்களுக்கெல்லாம் ஹெட்மாஸ்டர் ராமச்சந்திரய்யருடன் எட்டாவது வகுப்பினுள் நுழைந்தார். அவர் கையில் 'பளபள' என்று பிரம்பு ஒன்று மின்னிக்கொண்டிருந்தது.

“உருவச்சிலையை யார் உடைத்தது? உண்மையைச் சொல்லிவிடுங்கள்.” இந்த வார்த்தைகள் ஹெட்மாஸ்டரின் வாயிலிருந்து கடுமையாக வெளிவந்தன. அவர் கண்கள் இரண்டும் கோபத்தால் சிவந்திருந்தன. பையன்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்களேயொழிய ஒருவராவது ஒன்றும் பேசவில்லை.

ஹெட்மாஸ்டரின் கோபம் அதிகரித்துவிட்டது. “யார் உடைத்தது? சீக்கிரம்.” இந்த வார்த்தைகள் இப்பொழுது முன்னைவிட மிக்க அதட்டலுடனும் கோபத்துடனும் வெளிப்பட்டன. யாதொரு பதிலுமில்லை.

அவர் கோபம் எல்லையை மீறிவிட்டது. “எப்படியும் இதைக் கண்டுபிடிக்காமல் விடப்போவதில்லை. உண்மையைச் சொல்லிவிட்டால் அரை டஜன் அடிகளோடு போய்விடும்.” ஒருவரும் உண்மையைச் சொல்ல முன்வரவில்லை.

சற்றுநேரத்திற்கெல்லாம் ஒரு கூட்டம் கூட்டப்பட்டுப் பள்ளிக்கூட மாணவ மாணவிகளெல்லாம் வரிசையாகநிறுத்தப்பட்டார்கள். அதில் எட்டாவது வகுப்புப் பிள்ளைகள் மாத்திரம் தனியாக நிறுத்தப்பட்டிருந்தனர்.

எங்கும் ஒரே நிசப்தம். விசாரணை ஆரம்பமாயிற்று. ஹெட்மாஸ்டர் வரிசையாக எட்டாவது வகுப்பு மாணவ மாணவிகளை ஒவ்வொருவராக கேட்டுக்கொண்டே வந்தார். “நான் இல்லை” என்ற பதிலே கிடைத்துக்கொண்டிருந்தது. முப்பதுபேர் பதில் சொல்லியாகிவிட்டது, இன்னும் இரண்டே பையன்கள் பாக்கி. அதற்குப் பிறகு சாரநாதன் நின்றுகொண்டிருந்தான். அவன் மனம் திடுக் திடுக் என்று அடித்துக்கொண்டது.

முப்பத்தோராவது பையன்: “நான் இல்லை”

முப்பத்திரண்டு: “நான் இல்லை”

முப்பத்து மூன்ருவது, சாரநாதன் முறையும் வந்துவிட்டது. திடீரென்று அவனை ஓர்வித பயம் கவிந்துகொள்ளவே “நான் இல்லை” என்ற வார்த்தைகள் அவனை அறியாமல் வெளிப்பட்டுவிட்டன.

ஹெட்மாஸ்டர் அவனைத் தாண்டிப்போய் விட்டார். மாணவர் யாவர் முகத்திலும் ஒரு ஆச்சர்யக்குறி தோன்றியிருந்தது. ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்களே ஒழிய ஒருவரும் உண்மையைச் சொல்ல முன்வரவில்லை.

முப்பத்து ஆருவது பையனிடமிருந்தும் 'இல்லை' என்ற பதிலே கிடைத்துவிட்டது. முப்பத்து ஏழாவது கல்யாணியின் முறை.

"நீ உடைத்தாயா?" என்றார் ஹெட்மாஸ்டர்.

'ஆம், நான்தான் விளையாடுகையில் தெரியாமல் உடைத்துவிட்டேன்."

அவள் பதில் பிள்ளைகள் எல்லோருக்கும் தூக்கி வாரிப்போட்டது. ஆனால் அந்த நிலையிலும் உண்மைக் குற்றவாளியை வெளிப்படுத்த ஒருவருக்காவது தைரியம் பிறக்கவில்லை. ஹெட்மாஸ்டர் தம் விசாரணையை நிறுத்திக்கொண்டார்.

"உன் தீவிர உண்மைக்கு மெச்சவேண்டி இருக்கிறது. ஆனால் செய்த காரியம் மிகப் பெரிய தவறு. அதற்குச்சிறிது தண்டனை பெறத்தான் வேண்டியிருக்கிறது." வருத்தம் கலந்த குரலில் இதைவெளியிட்டார் ஹெட்மாஸ்டர்.

கல்யாணி கைகளை நீட்டினாள். அவள் சிவந்த மெல்லிய கைகளில் விழுந்த ஆறு பிரம்படிகள் கையை நன்றாகச்சிவக்கச்செய்தன. சாரநாதன் உள்ளத்தில் விழுந்த அடிகளை அவனால் பொறுக்க முடியவில்லை. கல்யாணியின் முகத்தில் சற்றாவது வருத்தமோ, கண்ணீரோ தென்படவில்லை. சந்தோஷமே குடிகொண்டிருந்தது.

சாரநாதனுக்கு அவன் குற்றம் அன்று முழுதும் அவன் மனதை உறுத்திற்று. வகுப்பில் தன் சஹபாடிகளின்முன் முகத்தைக்காண்பிக்க வெட்கினான். பிள்ளைகளும் அவனை ஏளனம் செய்யாமலில்லை. தான் செய்த குற்றத்திற்கு வேறொரு தண்டனை அனுபவித்துவிட்டாகிவிட்டது. அதிலும் நெருங்கிப்பழகும் ஒரு பெண்!

இவன் குற்றத்தைக் கல்யாணி ஏற்றுக்கொள்ளாவிடின் அவன் மானம் அன்று கப்பலேறியிருக்கும். அவர்கள் இருவரும் அத்யந்த நண்பர்கள். அநேக தடவை பாடங்களில் தர்க்கமும் இவர்களிடை நடக்கும். அதில் நடந்த சச்சரவுகளுக்கும் கணக்கில்லை. 'நெஞ்சத்தககாகட்பது நட்பு' என்ற பதம் நன்றாகப் பொருந்தியிருந்தது.

அன்று சாரநாதன் தன் குற்றத்தை மறுத்துவிட்டதைக் கண்டவுடன் தன் நண்பனைக் காப்பாற்றவேண்டுமென்ற எண்ணம் உதிக்கவே, கல்யாணி, தண்டனையை ஏற்றுக்கொண்டாள்.

இரண்டு வருஷங்களில் சாரநாதன் மேல்படிப்புக்காகச் சென்னைக்குச்சென்றுவிட்டான். ஆனால் இந்தச் சம்பவத்தை அவன் மறக்கவில்லை. அவன் ஹிருதயத்தில் அந்தத் தழும்புகள் ஆழமாகப் பதிந்திருந்தன.

ஃ ஃ ஃ

பத்து வருஷங்கள் கழிந்துவிட்டன. சாரநாதனின் தந்தை சென்னையில் செகரிடேரியட்டில் ஒரு கௌரவமான உத்யோகத்திலிருந்தார். அவருடைய சிபார்சினால் சாரநாதனுக்குப் பி. ஏ. படிப்பு முடிந்ததும், ஒரு பிரபல இங்கிலீஷ் கம்பெனியின் கிளை ஸ்தாபனத்தில் சென்னையிலேயே உதவி மானேஜர் பதவி கிடைத்தது. தன் வேலைத் திறமையினாலோ அதிலும் கமலம்—அவன் மனைவி—வந்த அதிர்ஷ்டத்தினாலோ வெகு சீக்கிரமே கம்பெனியின் மேல் அதிகாரிகளின் நல்லெண்ணத்திற்குப் பாத்திரமாகிவிட்டான். உதவி மானேஜராகவிருந்தாலும் ஆபீஸ் நிர்வாகமுழுதையும் சாரநாதனே கவனித்து வந்தான். அவன் சம்பளமும் இரண்டு வருஷத்தில் முந்நூறு ரூபாயை எட்டிவிட்டது.

அன்று ஆபீஸ்கணக்குக்கள் தணிக்கை நடந்துகொண்டிருந்தன. சாரநாதன் ஆபீஸ் அறையில் பேப்பர்களுக்குக் கையெழுத்துஇட்டுக்கொண்டிருந்தான். ஆடிட்டர் ரங்கநாதன் உள்ளே நுழைந்தார்.

"கணக்குப் பரிசிலனையெல்லாம் முடிந்துவிட்டதா? கணக்குக்களெல்லாம் சரிவர இருக்கின்றனவா!" என்றான் சாரநாதன் அவரைக் கண்டதும்.

"எல்லாம் பார்த்தாய்விட்டது. சரிவரத்தான் இருக்கிறது. காஷில் நூறு ரூபாய் குறைகிறது" என்று அமைதியுடனேயே சொல்லிவிட்டு எதிரேயிருந்த நாற்காலியில் உட்கார்ந்தார்.

சாரநாதன் முகம் வெளுத்துவிட்டது. அவன் ஆபீசுக்கு வந்த நாள் முதல் குற்றமென்பதே அதுவரை ஏற்பட்டதில்லை.

மேஜையின் மேலிருந்த மணியை ஆத்திரத்துடன் அடித்தான். சேவகன் உள்ளே நுழைந்தான்.

"காஷியர் பார்த்தசாரதியைக் கூப்பிடு."

பார்த்தசாரதி எதிரில் வந்ததும்;

"என்ன விஷயம், காஷில் நூறு ரூபாய் குறைவானேன்?"

"மன்னியுங்கள். நான்தான் என் தகப்பனாரின் வைத்யச் செலவுக்காக நேற்று நூறு ரூபாய் காஷிலிருந்து கையாடவேண்டி வந்துவிட்டது. எங்கும் எனக்குப் பண உதவி கிடைக்கவில்லை. தீராப்பழியாக இந்தக்குற்றத்தைச் செய்துவிட்டேன். நேற்றுஎனக்கு அந்தத் தொகை இல்லாவிடில் என் தகப்பனாரை அன்று ஜீவனுடன் கண்டிருக்க முடியாது......" துக்கம் தடுமாறச் சொல்லி முடித்தான்.

சாரநாதனுக்கு அந்த உண்மையைக் கேட்டதும் மனம் சலனமற்றுவிட்டது. அளவில்லாத ஆச்சர்யக் கோடுகள் நெற்றியில்தென்பட்டன. மௌனியாகவே இருந்தான் சாரநாதன்.

“இன்று இதோ நூறு ரூபாய்கள் கொண்டு வந்திருக்கிறேன். நான் ஆபீசுக்கு வருவதற்கு முன்பே எதிர்பாராத தணிக்கை நடந்துவிட்டது...” என்று தன் ஜேபியிலிருந்த நூறு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து மேஜைமேல் வைத்தான்.

“(Misappropriation) ஆபீஸ் பணத்தைக் கையாளுதல் எவ்வளவு பெரிய குற்றம் தெரியுமா?”

பார்த்தசாரதி ஒன்றுமே பேசவில்லை.

“இனிமேல் என்னால் ஒன்றும் செய்வதற்கில்லை. தணிக்கை ரிப்போர்ட் அனுப்பித்தாகிவிட்டது. உம் உண்மையை மெச்சினாலும் என் கடமையைத் தற்பொழுது விலக்குவதற்கில்லை. உம்மைத் தற்கா்லிகமாக ஸஸ்பெண்ட் செய்திருக்கிறேன். நீர் போம்.” அனுதாபத்துடனேயேதான் சாரநாதன் இதைச் சொன்னான். அவன் குற்றத்திற்கு ஈடுகொடுத்துத்தன்மானத்தையும் கௌரவத்தையும் விட்டுக்கொடுக்கச் சாரநாதனுக்கு மனமுமில்லை. இந்த எண்ணம் தோன்றியதும் அவசர அவசரமாக என்னவோ எழுதிமுடித்தான்.

அன்று சாயங்காலம் பார்த்தசாரதி கவலை தோய்ந்த முகத்துடன் வீட்டில் ஈசிச்சேரில் சாய்ந்துகொண்டிருந்தான். அன்று நடந்த சம்பவத்தால் அவன் உணர்ச்சியறிவு அவிந்துவிட்டது. ஆழ்ந்த யோசனையை நெற்றியின் ரேகைகள் வெளிப்படுத்தின.

பாபு எதிரில் வந்து நின்றாள்.

“உங்களைத்தானே? ஏன் இப்படி ப்ரமை பிடித்தமாதிரி உட்கார்ந்திருக்கிறீர்கள். ஆபீசில் என்ன நடந்தது? சீக்கிரமே வந்துவிட்டீர்களே?” பாபு கவலையுடன் விசாரித்தாள்.

பதிலில்லை. கண்களில் நீர்த்துளித் தேக்கங்கள் தென்பட்டன.

“சொல்லமாட்டீர்களா?”

“உன்னிடம் சொல்லி என்ன பிரயோசனம் பாபூ?” இதற்குமேல் அவன் ஒன்றும் சொல்லவில்லை.

“அப்படி என்னிடங்கூட சொல்லக்கூடாதப்டி உங்களுக்கென்ன துக்கம்? சொல்லுங்களேன்.” இந்தப் பிடிவாதத்துடன் அழுகையும் கூட வந்துவிட்டது பாபுவுக்கு.

அதற்குமேல் பார்த்தசாரதியால் பொறுக்க முடியவில்லை. தன் மனைவியின் துக்கத்தால் அவன் துக்கமும் அவனை மீறிக்கொண்டு குபீரென்று எழுந்தது. ஆதியோடந்தமாக விஷயங்களை அள்ளிவிட்டான். அவன் குரலில் பரபரப்பும் விசனமும் ஒருங்கே ஒலித்தன.

“சாரநாதன் நல்ல மனுஷர்தான்.

நான் செய்தது பெரிய குற்றமல்லவா? என்று முடித்தான் பார்த்தசாரதி.

பாபுவுக்கு அந்தநிலையைச் சகிக்கமுடியவில்லை. கோழை மனதைக் கட்டுப்படுத்தும் தைர்யமும் அவளுக்கு இல்லை. துக்கத்தின் விக்கலை அடக்க முடியாமலே உள்ளே சென்று விட்டாள்.

ஃ ஃ ஃ ஃ

“கமலூ! என்ன பண்றது நீயே சொல்லு. எங்கள் போதாதகாலம்தான். எங்கள் மாமனுருக்கு நிலைமை மோசமாகிவிட்டது. கையில் ஒரு பைசா கிடையாது. இவர்தான் முன்பின் என்னிடம் ஒரு வார்த்தை சொல்லாமல் இந்தக் காரியம் செய்துவிட்டார்......... “நீண்ட பெருமூச்சுடன் தன் கஷடத்தை வெளியிட்டுக் கொண்டாள் பாபு.

பிற்பகல் ஒரு மணி. சம வயதுடைய இந்த இரு யுவதிகளுடைய சந்திப்பு நெடுநாளைக்குப் பிறகு இன்றுதான் ஏற்பட்டது, ஒரு வாரத்திற்குப் பிறகு அன்றுதான், பாபு கமலத்தைப் பார்க்க வந்தாள். தன்னுடன் அவள் தன் துக்கத்தையும் கட்டிக்கொண்டு வந்தாள்.

ஆரம்ப முதல் பொறுமையுடன் அவள் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தாள். இடையிடையே அவள் முகத்தில் இரக்கத்தின் சாயல் தோன்றி மறைந்தது. சற்று நேரம் தோழிகள் இருவரிடமும் பேச்சில்லை,

சமீபத்தில் ஒரு மாதகாலத்திற்குள்தான் அவர்களிடையே அந்தத் தீவிரமான தொடர்பு ஏற்பட்டிருந்தது.

“என்ன விருந்தாலும் பாசமல்லவா? தந்தையின் பாசம் விடுமாடீ?” என்று சலித்துக் கொண்டாள் பாபு, எதையோ எண்ணிக் கொண்டு. கமலத்தின் இரக்கக் கட்டுக்களை இந்த வார்த்தைகள் அவிழ்த்துவிட்டன. அதற்குப் பதில் சொல்லித்தான் ஆகவேண்டியிருந்தது.

“நானும் என்னவோ நினைத்தேன். பாபூ, பாசம் யாரைத்தான்விடும். அதன்முன் இது எம்மாத்திரம்......?” அத்துடன் தன் பேச்சை நிறுத்திக்கொண்டாள் கமலம்.

அவள் சொன்னது வாஸ்தவம்தான். ஆனால் பாசமே குற்றத்தை மறைக்கமுடியுமானால்? அதுதான் உலகத்தில் நடப்பதில்லை.

அவர்களிடை நிலவிய நீண்ட மௌனத்தை அதற்குப் பின் கமலமே கலைத்தாள்.

"ஏண்டீ. எதிர்பாராதவிதமாய்......சொல்லி முடிக்கக்கூட இல்லை. ரேழியில் காலடிச் சத்தம் கேட்டது. சாரநாதன் உள்ளே நுழைந்தான். தோழிகளிருவரும் எழுந்து வேறுபக்கமாக உள்ளே போய்விட்டார்கள். அந்த ஸ்திரீ ஸகபாடிகளின் சம்பாஷணை அத்துடன் முடிவடைந்தது.

சாரநாதனின் அறையில் மின்சார விசிறி சுழலும் ஓசையைத் தவிர எங்குமே ஒரு நிசப்தம். மேஜைமீது வைக்கப்பட்டிருந்த ஆபீஸ் காகிதங்கள் கையெழுத்திடாமலே கிடந்தன. மைதோய்ந்த பேனா ஒன்று எவ்வித அக்கறையுமின்றி எதிரில் விழுந்து கிடந்தது.

கடிகாரம் மணி மூன்று அடித்தது. சிந்தனை ஒருவாறு கலையவும் மேஜைமேல் வைத்திருந்த காப்பியை எடுத்தான். அது சில்விட்டுப் போயிருந்தது. கமலம் உள்ளே நுழைந்தாள்.

"இந்தக் காப்பியை நாய்கூட சாப்பிடாது. ஆறிச் சில்விட்டிருக்கிறது." அவன் எரிந்து விழுந்தான். கமலம் வாய்திறக்கவில்லை.

"நான் காப்பியைச் சூடாகக்கொண்டுவைத்து அரை மணியாகிவிட்டது. நடுவில் இரண்டு மூன்றுதரம் சொல்லிவிட்டுப் போனேன். நீங்கள் காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. ப்ரமை பிடித்தமாதிரி..."

சாரநாதன் விழிப்படைந்தான். அவள் சொன்னது என்னவோ வாஸ்தவம்தான்.

ஆபிசில் நேரிட்ட குழப்பங்களால் அவன் மனம் ஒரு நிலையும் அடையாமல் திரிந்து கொண்டிருந்தது. அதிலும் அன்று அவனை அறியாமலே அவன் மனது கலவரமடைந்திருந்தது. வேலையில் நாட்டம் செல்லாமல் அந்தக் கவரைப் போடும்படி சேவகனிடம் கொடுத்துவிட்டு வீட்டுக்கு வந்துவிட்டான். பார்த்தசாரதியை வேலைக்கு வந்தநாள் முதல்கொண்டு தெரியும். அவனைப்போல் நேர்மையும் குணமுமுடையவன் கிடைப்பதே கஷ்டம். சாரநாதனே அவனை அநேகதரம் வேலையில் மெச்சியிருக்கிறான். ஏதோ அவன் போதாத காலம்—

இந்த நிலையில் கமலாவின் பதில் சாரநாதன் உணர்ச்சியை எழுப்பிற்று.

"கமலூ, வாஸ்தவம்தான், அன்று நான் சொன்ன சம்பவத்திலிருந்து மனமே பேதப்பட்டிருக்கிறது. என் நிலையைச் சமாளிக்க முடியவில்லை."

கமலம் இந்தச் சந்தர்ப்பத்தைத்தான் விரும்பினாள். அதை அவள் நழுவவிடவில்லை.

"ஆமா, பாபு, பாவம். இத்தனை நாழி அதைத்தான் என்னிடம் சொல்லிக்கொண்டிருந்தாள் பாவம். இந்தத்தடவை மன்னிக்க நீங்கள் ஏதாவது செய்யமுடியுமா?" பேச்சினிடையே ஒரு அனுதாபத்தையும், சரசத்தையும் அள்ளிவிட்டாள் கமலம்.

கணவனிடமிருந்து பதில் கிடைக்காததால் மறுபடி தொடர்ந்தாள்.

"நான் சொல்வதென்ன?"

இவைகளைச் சாரநாதனின் காதுகள்தான் கேட்டுக்கொண்டிருந்தன. அவனுக்கு என்ன தோணிற்றோ என்னவோ?

"கண்டிப்பாய் என்றால் இனி ஒன்றும் செய்வதற்கில்லை. குற்றம் குற்றம்தான்." இந்த வார்த்தைகளை அவள் எதிரில் சொல்லிவிட்டுச் சரேலென்று எழுந்து சென்றுவிட்டான் சாரநாதன். மேற்கொண்டு வார்த்தையாட விருப்பமில்லை. கமலம் திக்ப்ரமையடைந்த மாதிரி நின்றுகொண்டிருந்தாள். அவன் தோற்றம் குற்றவாளியினுடையதுபோல் காணப்பட்டது.

ரேழியில் எதிர்பாராதவிதமாக அவளைச் சந்தித்தான்-பாபுவைத்தான். பாபுவை நேருக்கு நேர் சந்தித்தது அதுதான் முதல்தடவை. எப்பொழுதும் பெண்களிடம் குனிந்து செல்லும் பாவமுடைய அவன் முகம் அன்று ஏனோ நிமிர்ந்துபார்த்தது. அதனால் அந்த முகங்களின் சந்திப்பு ஏற்பட்டது. அவ்வளவுதான். சரேலென்று மின்சாரத்தால் தாக்குண்ட மாதிரி நின்றுவிட்டான். அந்த முகம்? "கல்யாணி". இந்த வார்த்தைகளை அவள் காது கேட்கச் சற்று உரத்துத்தான் சொன்னான். ஆனால் மறுநிமிடமே நிலைமையைச் சமாளித்துக்கொண்டு வெளிச்சென்றுவிட்டான் சாரநாதன்.

ஏற்கனவே பலவிதக் கவலைகளால் வியாகூலமடைந்திருந்த பாபுவின் முகம் இந்த ஒரு அதிசயச் சந்திப்பினால் வெளிறிவிட்டது. அதைவிட அவன் தன் பெயரைக் கூறியது அவளுக்குப் பெருவியப்பாயிருந்தது. அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. எதையோ நினைத்துக்கொண்டு அவன் போன திக்கை நோக்கித் திரும்பினாள். ஆனால் அவள் பார்த்தபொழுது அந்த இடம் வெறிச்சென்றிருந்தது.

பாபு கமலத்தினிடம் விடைபெற்றுக் கொண்டபொழுது அவளால் ஒன்றும் பேச முடியவில்லை.

சாரநாதன் ஆபீசுக்குப் போனதும் போகாததுமாக அவசரஅவசரமாக வேலைக்காரனைக் கூப்பிட்டான்.

"நான் கொடுத்த கவரை போட்டுட்டாயா" பரபரப்புடன் கேட்டான் பொறுமையே இல்லாமல்.

"இன்னும் இல்லீங்களே எசமான்..." என்று இழுத்தான் சேவகன். கவரைப்பற்றி சொன்னவுடன், அதைப் போடாததால் எங்கே தன்னை கோபிக்கிறாரோ என்ற பயம் அவனுக்கு. மேலும் சாரநாதன் அதை உடனே போடும்படி வேறு கூறியிருந்தான்.

"நல்ல வேலை", சாரநாதனுக்கு மூச்சு வந்தது. "என்ன குற்றம் செய்ய இருந்தேன், கொண்டா அதை. போடாதது நல்லதாப் போச்சு. இந்தா ஓடிப்போய் காப்பி சாப்பிடு" நாலணாவைச் சேவகனிடம் விட்டெறிந்தான்.

கவரை வாங்கிச் சுக்கு நூறாகக் கிழித்து குப்பைக்கூடையில் போட்டதும்தான் அவன் மனம் நிம்மதியடைந்தது. பெரும் பாரத்தைச் சுமக்க மாட்டாமல் கீழே இறக்கினதுபோலிருந்தது. சேவகனுக்கு ஒன்றும் புரியவில்லை.

அதுதான் பார்த்தசாரதியை வேலையைவிட்டு நீக்கிவிடும்படி அவன் மேலதிகாரிகளுக்கு எழுதிய கவர். அன்றையதினமே அவன் வேறு ஒரு நீண்ட கவர் தன் கைப்பட எழுதிப் போஸ்டாபீஸில் போட்டது வேலைக்காரனுக்கும் தெரியுமோ என்னவோ!

இடையில் ஒருவாரம்கழிந்திருக்கும். அந்த ஒரு வாரத்திலும் பார்த்தசாரதி வெளியில் எங்கும் முகம் காட்டவில்லை. அவன் மனம் சொல்லொணா வேதனையில் புழுங்கிக்கிடந்தது.

அன்று வெளியில் போகப் புறப்பட்டான்.

"உங்களை எசமான் கையோடு அழச்சுவரச் சொன்னாக."

"எசமான் எங்கிருக்கிறார்?"

"வீட்டில்தான்"
அதற்குமேல் சேவகனிடம் கேள்வி கேட்க பார்த்தசாரதி விரும்பவில்லை.

ஃ ஃ ஃ

"நீங்கள் என்னைக் கூப்பிட்டீர்களாமே?" குரல் கேட்டதும் சாரநாதன் நிமிர்ந்து பார்த்தான். பார்த்தசாரதி விநயத்துடன் நின்றுகொண்டிருந்தான். தன்னிடம் பிரிக்கப்பட்டிருந்த கடிதத்திலேயே அவன் மனம் ஊறிப்போயிருந்ததால் அவர்கள் காலடிச்சத்தத்தைக்கூட கவனிக்கவில்லை. அப்போதுதான் பிரிக்கப்பட்ட அந்தக் கடிதத்தின் உறை மேஜைமேலேயே கிடந்தது.

"நீர் செய்த குற்றம் எவ்வளவு பெரிய குற்றம் தெரியுமா?" கொஞ்சம் அமர்த்தலுடனேயே கேட்டான்.

"மன்னிக்கமுடியாத குற்றமே. என் மனவேதனையே போதுமான தண்டனை விதித்துவிட்டது. என் ஆயுளில் இனி அவ்வித குற்றமே ஏற்படாது." குழறக் குழறப் பதிலளித்தான். அவன் எதிரில் பார்த்தசாரதிக்கு நிற்கக்கூட முடியவில்லை.

"உம்மை மன்னித்துவிடும்படியே மேல் அதிகாரிகளுக்குச் சிபார்சுகாட்டி மன்றாடி இருக்கிறேன். அத்துடன் உம் நன்னடைத்தைக்கு நானே ஜாமீனாக ஏற்றுக்கொண்டிருக்கிறேன். உம்மை மன்னித்துவிடும்படி மேலதிகாரிகளிடமிருந்து வந்திருக்கிறது. இதோபாரும்..........." கடிதத்தை அவன் கையில் கொடுத்தான். பார்த்தசாரதி கடிதத்தை வாங்கினான்.

"இனி ஜாக்ரதையாயிரும். எந்தக் கஷ்டம் நேரிட்டாலும் நேரடியாக என்னிடம் வாரும்" என்று சொல்லி முடித்தான் சாரநாதன்.

பார்த்தசாரதி அந்தக் கடிதத்தைப் படித்துவிட்டு அங்கேயே நின்றுகொண்டிருந்தான். அவன் கண்களில் நீர் பெருகிற்று. அந்த உபகாரத்திற்கு நன்றி செலுத்தக்கூட அப்போது அவனால் முடியவில்லை.

"பாபூ பாபூ......கல்யாணி" பார்த்தசாரதி கதவைத் தட்டினான். கதவு திறக்கப்பட்டது.

"உத்யோகமாகி விட்டது. சாரநாதன் மன்னித்துவிட்டார்" ஒரேமூச்சில் பரபரப்புடன் அவன் சொன்னான். கல்யாணி (பாபு) ப்ரமையடைந்தாள்.

எதிர்பாராத அந்தச் சுபச்செய்தி அவளை நிலைதடுமாறச் செய்தது. அவளைக் கீழேவிழாதபடி அணைத்தவண்ணம் உள்ளே இழுத்துச் சென்றான் பார்த்தசாரதி. பாபு கமலத்துடன் வார்த்தையாடியது ஒன்றுமே அவனுக்குத் தெரியாது. கமலம் சொன்னபடி அவனுக்கு மன்னிப்பை அவள் எதிர்பார்க்கவில்லை. ஆகவே கணவனுக்கு அந்த ஏமாற்றத்தை வெளியிட அவள் விரும்பவில்லை. அன்றைய தினம் அந்த எதிர்பாராத சந்திப்பு, இவற்றை எல்லாம் ஒன்றுமே வெளியிடவில்லை பாபு. இந்தச் செய்தியைக் கேட்கவே அவளுக்குத் தூக்கிவாரிப்போட்டது.

ஃ ஃ ஃ

"ஏண்டி பாபு, இதை நீ நம்புகிறாயாடீ. நேற்றுத்தான் இதை அவர் என்னிடம் சொன்னார். எங்காவது ஒரு பொண்ணு இவருக்காக அடிபடுவாளா? நீயே சொல்லு. எனக்கென்னவே நம்பத்தகுந்ததாயில்லை."

அவள் அதைச்சொல்லச் சொல்லப் பாபுவின் கண்களில் நீர் வழிந்துகொண்டேயிருந்தது. அவர் அன்பின் எதிரொலியை அவளால் அடக்கவே முடியவில்லை. கமலம் மேலும் தொடர்ந்துகொண்டே போனாள்.

"சிறுவயதில் அப்படி ஒரு சம்பவம் நடந்ததாம். ஒரு வாரத்திற்கு முன் அவளைக்கூடச் சந்தித்தாராம் அவர். எவ்வளவு உண்மை."

பாபுவின் முகத்தில் கலவரம் ஏற்பட்டது.

"ஏண்டி, அவள் பெயரைச் சொன்னாராமே" என்றாள் தன் முகத்தில் ஒரு புன் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு. அவள் தன் உள்ளக் கிடக்கையை அடக்கிக்கொண்டாள்.

"அவள் பெயர் என்னவோ சொன்னாரே...... ஞாபகத்துக்கு வரமாட்டேங்கறது. ஆ...... மீனாக்ஷி" கமலம் பதிலளித்தாள். அந்தப்பதில் பாபுவின் உள்ளத்தை உலுக்கியது.

"ஏண்டி உன் கண்களில் இப்படி நீர்தளும்புகிறது?"

"ஒன்றுமில்லை கமலம், உன் புருஷரின் உதார குணத்தை நினைத்தால் எனக்குக் கண் கூடக் கலங்குகிறது." ஆனால் அது சுத்தப் பொய். கமலம் என்னவோ அதை நம்பி விட்டாள்.

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்கியாதிபெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக்கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மைலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—	திருச்சி கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.	15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

மினியேசர் "T"
(கவர்ச்சியான வடிவம், வட்டக் கண்ணாடி)
18 காரட் கட்டித் தங்கம் ரூ. 141
மினியேசர் "A-2"
(கவர்ச்சியான வடிவம் வட்டக் கண்ணாடி)
18 காரட் கட்டித் தங்கம் ரூ. 127
மினியேசர் "M"
(கவர்ச்சியான வடிவம் வட்டக் கண்ணாடி)
18 காரட் கட்டித் தங்கம் ரூ. 166
பரிசளிப்பதற்கென
ஒப்பற்ற
"வெஸ்ட் எண்டு"
வாட்சுகள்!
சரியான வரத்து இல்லாமையால், பிரசுரம் செய்யப்பட்ட எல்லா ரகங்களையும் சப்ளை செய்ய இயலாவிடினும், ஆர்டர்களை கூடியமட்டும் கைவசமிருக்கும் ஸ்டாக்கிலிருந்து பூர்த்திசெய்ய முயற்சிக்கப்படும்.
WEST END WATCH Co
BOMBAY
CALCUTTA
வெஸ்ட் எண்டு வாட்ச் கோ., பம்பாய்-கல்கத்தா.

கார்த்திகை விளக்கு

ரா. விழிநாதன்

●

கார்த்திகைமாதம். கார்த்திகைப் பண்டிகை நெருங்கிக்கொண்டிருந்தது. சந்தியா காலம். இருட்ட ஆரம்பித்திருந்தது. அந்தக் கிராமத்துக்குழந்தைகள் தெருவில் நின்ற வண்ணம் வாணவேடிக்கையில் ஈடுபட்டிருந்தன. காட்டு ஆமணக்குக் கட்டைகளையும், கலியாண முருங்கைக்கட்டைகளையும், உரிமட்டைகளையும் காயவைத்து அதில் தணல் உண்டுபண்ணி, ஒரு கையில் எடுத்து மற்றொரு கையில் ஒரு சிறு குச்சியை வைத்துத் தட்டிக்கொண்டிருந்தனர். அதினின்றும் தீப்பொறிகள் பறந்து கீழே குவிந்து அவிந்துகொண்டிருந்தன. மற்றும் சில குழந்தைகள் உமிக்கரியை ஒரு ஓட்டில் வைத்துக்கொண்டு இங்குமங்கும் ஓடிக்கொண்டிருந்தன. அதினின்றும் சிறுசிறு பொறிகள் பறந்தன. மற்றும் சில குழந்தைகள் மூலை முடுக்குக்களிலிருக்கும் குப்பை கூளங்களையும், வைக்கோலையும், பொறுக்கி வந்து குவித்துச் சொக்கப்பானை என்று சொல்லிக் கொளுத்திக்கொண்டிருந்தன. தெருவும் குப்பை கூளங்கள் ஒழிந்து சுத்தமாகக் காணப்பட்டது. அந்த வாண வேடிக்கையில் பெரியவர்களும் ஒரு வகையான ஆனந்தமனுபவித்துக் கொண்டிருந்தனர். 'டேய் ராமு, நெருப்புக்கு அவ்வளவு கிட்ட நிக்காதே. வேட்டியில்பட்டு விடப்போகிறது' என்று உபதேசித்த வண்ணம் கிழவர்கள் அருகில் நின்றுகொண்டிருந்தனர்.

இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த ஆறுவயதுக் குழந்தையான பத்மா தாயினருகில் சென்று, 'அம்மா, எல்லாக் குழந்தைகளும் வாணம் விடறதுகள். எனக்கு உரிமட்டையில் தணல் தாயேன், நானும் வாணம் விடறேன்' என்று கூறினாள் ஆவல் நிறைந்த கண்களுடன்.

கமலத்திற்குத் தன் குழந்தை பத்மாவிடம் அளவு கடந்த அன்பு உண்டு. குழந்தைக்கு அவள் ஒன்றும் இல்லையென்று சொன்னதில்லை. ஆனால் பத்மா தணல் கேட்டதும் அவளது மனத்துள் ஏதோ பழைய சம்பவமொன்றின் ஞாபகம் ஏற்பட்டது. முகத்தில் ஒருவித வருத்தம் சூழ்ந்தது. குழந்தையைக்கோபித்து அனுப்ப அவ்ளது மனம் துணியவில்லை. சமாதானப்படுத்தும் முறையில் கூறலானாள்;– 'கண்ணே, நம்பாத்திலே அந்தப்பழக்கமே கிடையாதடி. வழக்கமில்லாத வழக்கத்தை உண்டு பண்ணினால் ஓம்மாச்சி கோவிச்சுக்கும். அது வேண்டாமே."

குழந்தை பத்மா குறிப்பறிந்து நடக்கும் சிறுமி. "அப்படின்னு வேண்டாமம்மா. எனக்கு ஆசையாயிருந்தது அதான் கேட்டேன்" என்று கூறி, பதிலை எதிர்பார்க்காமல் வேடிக்கை பார்க்க வாசலுக்குச் சென்றுவிட்டாள்.

கமலத்தின் கண்களில் அப்பழைய சம்பவத்தின் ஞாபகம் நீர் அருவியை வரவழைத்துவிட்டது. அவளுக்கு வேலை செய்யத்தோன்றவில்லை. பெருமூச்செறிந்த வண்ணம் ஒட்டுத் திண்ணையில் அப்படியே உட்கார்ந்துவிட்டாள்.

— 2 —

கார்த்திகைத் தீபதினத்தன்று, கிராமத்திலுள்ள ஜனங்கள் அனைவரும், கையில் ஒரு ஓலைப்பந்தத்துடன் சிவன் கோயிலுக்குச் செல்வர். கோயில் சந்நிதியில் ஒரு பெரிய சொக்கப்பானை போடப்பட்டிருக்கும். தீபாராதனை முடிந்தபின் மேளதாளத்துடன் ஒரு பெரிய அகல் தீபத்தைக் கையில் எடுத்துக் கொண்டு கோயிலைக் குருக்கள் வலம் வருவார். பிறகு நேரே சொக்கல் பானைக்குச்சென்று அதைக்கொளுத்திவிடுவார். 'சொக்கல்' தகதகவென்று எரியும். ஜனங்கள் தங்கள் கையிலுள்ள ஓலைப்பந்தத்தைக்காட்டிக் கொளுத்திக் கொண்டு, "உத்ஸவந்த......தீபஸ்ய......மகா பலே.........மகாபலே" என்ற சுலோகத்தை உச்சரித்த வண்ணம் உத்ஸாகமாகப்பெருமாள் கோயிலை அடைவர். பெருமாளுக்குத் தீபாராதனைவகையரா முடிந்ததும், அங்குள்ள சொக்கல்பானையில், (சிவன்கோயில் தீபத்தை அணைத்து), பந்தத்தை ஏற்றிக்கொண்டு வீடு வருவர். மாதர்கள் புதுப்புடவை அணிந்து தம்மை அலங்கரித்துக்கொண்டு, கையில் ஒரு கை விளக்குடன் வாசலில் வேடிக்கை பார்த்து நிற்பர். தங்கள் தங்கள் கணவன்மார்கள் வந்ததும் மலர்ந்த முகத்துடன் வரவேற்று, அப்பந்தத்தில் தம் கையிலிருக்கும் கை விளக்கை ஏற்றிக்கொண்டு உள்ளே செல்வர். பிறகு அந்தத் தீபத்தின்மேல் எல்லாத்தீபங்களையும் ஏற்றி வீட்டைத் தீபங்களினால் அலங்கரிப்பர். கார்த்திகை தினத்தன்று வீடு அலாதியான சோபையுடன் விளங்கும்.

— 3 —

ஐந்து வருடங்களுக்கு முன், கார்த்திகைப் பண்டிகையன்று கமலத்தின் அகமும் ஜகஜ்ஜோதியாக விளங்கியது. தனது கைதேர்ந்த தீபாலங்காரத்தினால் வீட்டை மிகவும் மங்கள

கரமாக்கியிருந்தாள், கமலம். அவ்வருஷத்திற்குப் பின் அவளது வீடு சோபையிழந்து காணப்பட்டது. நான்கு வருஷங்களுக்கு மேல் ஆகிவிட்டன. 'கல்யாணமும் கார்த்திகையும்' என்ற முதுமொழி அவளது கிரஹத்தில் தாண்டவமாடவில்லை. கமலத்தின் கணவன் சுந்தரேசன் கார்த்திகையன்றுதான் வீட்டை விட்டுக் கிளம்பிச் சென்றுவிட்டான். அதற்குப்பின் வீடு 'குலதிலகம்' இல்லாமல் சோபையிழந்து கிடந்தது. இன்று குழந்தை பத்மா 'வாணம்' கேட்டுப் பழைய ஞாபகத்தை மனத்துள் மூட்டிவிட்டாள்.

சுந்தரேசனுக்குக் கமலத்தினிடம் எந்தவிதமான கோபமும் இருந்திருக்கக் காரணம் இல்லை. கமலத்தினிடம் அவன் அளவிலாக் காதல்கொண்டவன். அன்று அவள் கேட்ட புடவையை வாங்கியும் அளித்திருந்தான். கார்த்திகையன்று சிவன்கோயில் பந்தத்துடன் வந்து, "நான் பெருமாள்கோயில் போகப் போகிறதில்லை. இதிலேயே விளக்கை ஏற்றிக் கொள்" என்று கமலத்தினிடம் மொழிந்தான்.

"நன்னாயிருக்கு. சிவன்கோயில் பந்தத்தில் விளக்கு ஏற்றிக்கொள்கிற வழக்கமில்லை. பெருமாள்கோயிலுக்குப் போய்விட்டு வாருங்கோ"

"அதெல்லாம் என்னால் முடியாது, இதிலேயே ஏற்றிக்கொள்."

'நானும் ஏற்றிக்கொள்ள முடியாது. பெருமாள்கோயிலுக்குப் போயிட்டு வாங்கோ."

"நான் சொல்கிறேன். என்னவோ மேலே மேலே பேசுகிறாயேடி. உனக்கு இவ்வளவு திமிர் எப்போ வந்தது?"

'திமிரா! எல்லாம் நீங்கள் கொடுத்த இடத்தினாலேதான் வந்தது. போய்விட்டு வாங்கோ தர்க்கம் அப்பறம் செய்துகொள்ளலாம்.'

"போகப்போகிறதில்லை. நீ இப்போ ஏற்றிக் கொள்ளுகிறாயா இல்லையா?" என்றான் அதிகாரத்வனியில்.

"நல்லது கெட்டதுங்கிறது பொம்மனாட்டிகளுக்கும் தெரியும். சிவன்கோயில் தீபம் வீட்டுக்கு ஆகாதுன்னு சொல்லுவா. அதுதான் போய்விட்டு வாருங்கோன்னு சொல்கிறேன்."

"இது உன் குடும்பமா என் குடும்பமா?"

"என் குடும்பமும்தான்."

"அப்போ நீயே இந்த வீட்டிலே இரு. நான் எங்கேயாவது கண்காணாத இடத்திற்குப் போய்விடுகிறேன்."

"அடாடா இதென்ன. நான் ஒண்ணுசொல்ல நீங்கள் ஒரு அர்த்தம் எடுத்துக்கிறீர்களே. எனக்கென்ன? உங்கள் குடும்பம்தானே. நீங்கள் ஏற்றச்சொன்னால் ஏற்றிக்கொள்ளுகிறேன்"

இப்படிக்கூறிக் கமலம் விளக்கை ஏற்றிக் கொண்டாள். வழக்கம்போல் வீடும் தீபங்களால் அலங்கரிக்கப்பெற்றது. பிறகு ஆகாரம் முதலியவைகள் முடிந்தபின்னர் தம்பதிகள் படுக்கச்சென்றனர். வேலை மிகுதியினால் கமலம் அயர்ந்து நித்திரை போய் விட்டாள்.

4

சுந்தரேசனுக்குத் தூக்கமே வரவில்லை. கடன்காரர்களுக்கு நிம்மதியாக எப்படித் தூக்கம் வரும்! சுந்தரேசனது குடும்பம் வெகு நாட்களுக்குமுன் நல்ல நிலையில்தான் இருந்தது. ஆனால் கால மாறுதலினால் இருந்த ஸொத்து எல்லாம் அழிந்து, வீடுமட்டும்தான், பாக்கி இருந்தது. குடும்பச் செலவிற்காகவும், தனது மனைவிக்கு நகைகள் செய்து போடுவதற்காகவும் கிராமத்தில் சிலரிடம் கடன் வாங்கியிருந்தான் அவன். கடன் கிட்டத்தட்ட 2000 ரூபாயை எட்டிப்பார்த்துக்கொண்டிருந்தது. கிராமத்திலேயே யாரிடமாவது காரியம் பார்த்துக் குடும்பத்தையும் நடத்திக்கொண்டு கடனையும் தீர்த்துவிடலாம் என்றாலோ தன் மதிப்பை விட்டுக்கொடுக்க மனம் துணியவில்லை. யார்தான் உலகில் தன்மதிப்பை இழக்கத் துணிவர்? தனது வீட்டை விற்றுக் கடனையடைத்துவிடலாம். ஆனால் பிதுரார்ஜிதமான வீட்டை விற்றுக் கடனைத் தீர்க்க அவனது மனமொப்பவில்லை. கடனைத் தீர்க்கும் கவலை அவனுக்கு இரவு பகலாக இருந்து வந்தது.

கிராமத்தில் குளத்தங்கரையும் கோயிலும் தானே வம்பளக்கவும் பிறரைக் குறைகூறவும் ஸௌகரியமான இடங்கள். சிவன்கோயிலில் கூடியிருந்த சிலர், சுந்தரேசனிடம், "பணம் வாங்கி நாளாகிவிட்டதே. கொடுத்துவிட்டால் தேவலையே" என்றனர். சிலர் தவணை குறிப்பிட்டு அதற்குள் கொடுக்கவில்லையெனில் பிராது செய்துவிடுவதாகப் பயமுறுத்தினர். கடன் கொடுத்தோர்களது இவ்வார்த்தைகளைக் கேட்ட சுந்தரேசனுக்குப் 'பகீர்' என்றது. கிராமம் என்றால் இரண்டு விரோதிகள் இரண்டு சினேகிதர்கள் என்றுதானே இருப்பது வழக்கம். யாராவது பிராது செய்து அவமானப்படுத்திவிட்டால்...எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ, யார் கண்டது? ஊரில் தனக்கு விரோதிகளே இல்லையென்று சொல்லமுடியுமா? என்று மனத்துள் எண்ணங்கள் ஓடின.......அவன் மனம் உட்கார்ந்து விட்டது.

இவைகளெல்லாம் அவனது சகதர்மிணி கமலத்திற்குத் தெரியாமல் இல்லை. அவள்

தனது நகைகளைக் கொடுத்தும் கடனை தீர்க்கத் தயாராகத்தானிருந்தாள். பெண்ணுள்ளம் தானே!. அவர் கேட்டால் கொடுத்துக்கொள்வோம்' என்றெண்ணி வாளா இருந்தாள்.

சுந்தரேசன் ஏதாவது அயல் ஊருக்குச் சென்றுவது பிறரிடம் கைகட்டிச் சேவகம் புரிந்து கடனைத் தீர்க்க எண்ணினன். அவன் அதிகம் படித்தவனுமல்ல. படித்தவர்களே வேலைக்குத் திண்டாடும் இந்த நாட்களில் அவனுக்குவேலை எங்கே கிடைக்கப்போகிறது? குறைவான சம்பளத்தில் வேலை கிடைத்தால், அவனுக்குப் பிரயோஜனம்தான் என்ன? வயிறு வளர்க்கமட்டும் சம்பளம் கிடைத்தால் போதாது. கடனைத் தீர்க்கவும் அல்லவா பணம் வேண்டியிருந்தது அவனுக்கு? இந்த விதமான யோசனையில் அவனது மனம் வெகு நாட்களாகவே சுழன்றுகொண்டிருந்தது.

யுத்தத்திற்குச் செல்வதாயிருந்தால் இந்நாட்களில் அதிகச்சம்பளம் கிடைக்கக்கூடும் என்பதை அவன் அறிவான். 'யுத்தத்திற்குச் சென்றல் என்ன?' என்று அவனது மனத்துள் கேள்வியெழும். மனைவி இதைக்கேட்டுப்போக விடுவாளா? உற்றர்களும் கிராமத்தார்களும் தான் யுத்தசேவைக்குப் போகச் சம்மதிப்பார்களா? இவர்களிடம் உத்தரவு பெற்றுக் கிளம்புவது என்பது முடியாத காரியம் ஆயிற்றே என்ற எண்ணத்தினல் அவனது மனம் இதில் ஈடுபடாமல் அடங்கியிருந்தது.

இன்று கடன் கொடுத்தோர்களது வாக்கியம் அவன் மனத்துள் புதைந்து கிடந்த எண்ணங்களைக்கிளறிவிட்டது. 'பிறருக்குத்தெரியாமல் ஓடிவிடுவது, பணத்தைச் சம்பாதித்து வந்து கடனை அடைத்துவிடுவது' என்ற எண்ணம் அவனது மனத்துள் உதித்தது. மனைவியிடம் இவ்விஷயத்தைச் சொல்லுவதும் சரியல்ல. அவள் போகவிடமாட்டாள். ஆகையால் அவளுக்கும் தெரியாமல் ஓடிவிடுவது தான் சரி என்ற முடிவிற்கு வந்தான். பெருமாள் கோயிலிற்குச் சென்றிருந்தால் இன்னும் சில கடன்காரர்கள் தேள் கொட்டுவதுபோலக்கொட்டுவார்களே, என்று நினைத்துத்தான் கமலம் சொன்னபடி பெருமாள் கோயிலுக்குப் போகமுடியாது என்று மறுத்துக் கமலத்துக்குத் துயரைவிளைவித்திருந்தான். அவன் கடன் தொல்லையிலிருந்து எவ்விதமாவது விடுபட்டுவிடவேண்டும் என்று எண்ணி மெதுவாகப் படுக்கையை விட்டு எழுந்திருந்தான். சிமிழி ஒன்றில் பத்து ரூபாய் வைக்கப்பட்டிருந்தது. கையில் மூன்று ரூபாயை மட்டும் எடுத்துக்கொண்டு, மெதுவாக அங்கிருந்து கம்பி நீட்டினன். மறுநாள் திருச்சியிலுள்ள 'ரெக்ருடிங் ஆபீஸிற்குச் சென்று தன்னையும் ராணுவத்தில் பதிவு செய்துகொண்டான். சில தினங்களுக்குப் பின்னர் ஒரு சிறு சேனையுடன் அவனை எகிப்துக்கு அனுப்பிவிட்டார்கள்.

— 5 —

கமலம் மறுநாள் காலை எழுந்தாள். தினமும் தனக்குப் பிறகு வழக்கமாய் எழுந்திருக்கும் சுந்தரேசனைக்காணவில்லை. இன்று விழிப்புக் கொடுத்து ஒரு கால் பல் தேய்த்துவரப் போயிருப்பாரோ என அவள் கருதினள். அதனல் அதிகம் கவலைகொள்ளாமல் வீட்டு வேலையில் ஈடுபட்டாள். காபி சாப்பிடும் நேரமும் கழிந்தது. சாப்பாட்டு நேரமும் வந்தது. அதுவும் மெதுவாக உருண்டு சென்றது. கமலத்திற்கு யோசனை பிறந்தது. பணச் சிமிழைத்திறந்து பார்த்தாள். மூன்று ரூபாய் குறைந்திருந்தது. "இன்றுவரை என்னிடம் சொல்லாமல் எங்கும் சென்றது இல்லையே. எங்கே போயிருப்பார்? அதுவும் இரவே கிளம்பியிருக்கிறர் போலிருக்கிறதே! இதற்கென்ன அர்த்தம்? ஒரு கால் சிவன் கோயில் தீபத்திற்காக நான் வாதாடினேனே, அதற்காகக்கோபித்துக்கொண்டு போயிருப்பாரோ! சீ அப்படி இராது. அவர் இதற்கெல்லாமா கோபித்துக்கொள்வார்? நான் ஆழ்ந்து நித்திரை செய்வதை எண்ணி எழுப்பிச் சொல்லிக்கொள்ளாமல் எங்காவதும் போயிருப்பார். வந்து விடுவார்" என்று மனத்தைத் திடப்படுத்திக்கொண்டாள்.

மாலைப்பொழுது மாறி இருள் உலகைக் கப்பியது. பிறகு பொழுதுவிடிந்தது. நாட்கள் வாரங்களாக மாறின. வாரங்கள் மாதங்களாக மாறி வருஷங்களாகவும் ஆக ஆரம்பித்துவிட்டன. ஆனல் எவ்வளவு தேடியும் சுந்தரேசன் அகப்படுவதாக இல்லை. அவனிடமிருந்து கடிதமோ, அவனைப்பற்றிய சமாசாரமோ தெரியவே இல்லை. தன்னிடம் கோபித்துச்சென்றுவிட்டதாகவே நிர்ணயித்துப் பெருமூச்செறியலானள்.

தினமும் கடன்காரர்களது தொல்லை அதிகரித்தது. "கடனை ஏமாற்றத்தான் அவன் ஓடிவிட்டான். உனக்குத்தெரியாமலா அவன் ஓடுவான். பொய் சொல்லாதே" என்று கூறுவர் சிலர். அவன்மேல் பிராதுகொடுத்து பணத்தை வாங்கும் வழியைச் சிலர் பார்த்தனர். கமலம் அனுபவிக்கும் கஷ்டத்திற்கோர் எல்லையில்லை. இவ்விதம் அவமானப்படுத்திச் சென்றரே என்று ஒரு புறம் துயரம். என்பால் கோபித்துக்கொண்டு போய்விட்டாரே என்று மற்றொரு புறம் ஏக்கம். ஊர் வாயை அடக்க அவளால் முடியவில்லை. கடைசியில் வெட்கத்தை விட்டுப் பெரியாத்து மாமாவிடம், "உங்களையன்றி எனக்கு வேறுகதியில்லை. நீங்கள்தான் என்னைக் காப்பாற்றணும்" என மன்றடினள். மாமா முன்னல் சற்றுத் தயங்கினர். அவளது நிலையை அறிந்த அவருக்கு அவரை அறியாமலே அவள்மீது கருணை ஏற்பட்டது. வீட்டைப் பந்தகமாக வைத்துக்கொண்டு கடனைத் தீர்த்து வைத்தார்

அவர். கமலம் மிகவும் நல்ல, சாதுவான பெண். வீட்டில் உட்கார்ந்து சாப்பிடும் வழி இல்லாமையினால், பிறர் வீட்டிற்குச் சின்னஞ் சிறு ஒத்தாசைகள் செய்து கிடைப்பதைக் கொண்டு தனது வாழ்க்கையைச் சிக்கனமாக நடத்தி வந்தாள்.

ஒவ்வொரு கார்த்திகை தீபமும் வந்து, அவளுக்கு அடக்கவொண்ணுத் துயரைக் கொடுத்துச் சென்றது. கார்த்திகை தீபதினத் தன்றெல்லாம் கணவனது ஞாபகம் வந்து கண்ணீரும் கம்பலையுமாக நிற்பாள். கணவன் போன துயர் மனத்தை அரம்போட்டு அறுக்கும். அவளது இல்லம் ஒளி மங்கி, சோபையிழந்து காணப்படும். ஊரார்களில் வெகுபேர் அவளுக்கு அன்பு மொழிகளால் ஆறுதல் அளிக்க முற்படுவர். மனப்புண் அனுதாப வார்த்தைகளைக்கேட்டு ஆறுபவை யல்லவே. 4 வருடங்களுக்குமேல் ஆகியது. அவளது வீட்டில் கார்த்திகை விழாவே கொண்டாடப்படுவதில்லை. வெகு நாட்கள் வரை தன் கணவரது கடிதத்தை எதிர்பார்த்து ஏமாந்துபோனாள். பாவம்! இவ்வருடமும் அந்த இழவு கார்த்திகை விழா வந்து அவளது மனப்புண்ணைப் புதிதாக்கியது.

கார்த்திகையின் நினைவு வந்ததும் அவளது மனம் குமுறியது. கணவனது பிரிவு அவளை உருக் குலைத்தது. இக்கார்த்திகைக்குள் நான் மடிந்துவிடக்கூடாதா என்று தன்னையே சலித் துக்கொள்வாள். கார்த்திகை தினம் நெருங்க நெருங்க அவளதுள்ளமும் உடைந்து வந்தது. இந்த வருடமும் அந்தகாரக் கார்த்திகைதானு வரவேண்டும் என மனத்துள் கூறிக்கொள் வாள்.

கார்த்திகைக்கு இரண்டு தினங்கள்தான் பாக்கியிருந்தன. வருத்தமுற்ற முகத்துடன் அவள் வீட்டு வேலையில் ஈடுபட்டிருந்தாள். வாசலிலிருந்து 'தபால்' என்ற குரல் வந்தது. குழந்தை பத்மா ஓடிப்போய், தபாலை வாங்கி வந்தாள். சர்க்காரிலிருந்து ஆங்கிலத்தில் வந்திருந்தது. ஹவல்தார் வேலை பார்த்து வந்த சுந்தரேசன் சிலதினங்கள் முன்பு யுத்தத் தில் மாண்டுபோனார் என்பதுதான் அக்கடிதத் தின் சாராம்சம்.

கமலத்தின் தலை சுழன்றது. தூக்கி வாரிப் போட்டது. கண்களினின்று நீர் தாரை தாரையாக வழிய ஆரம்பித்தது. துக்கம் நெஞ்சையடைத்தது. சிறிதுநேரத்திற்கெல் லாம் 'கோ' வென்று அலற ஆரம்பித்தாள். குழந்தை பத்மாவும் விஷயம் அறியாமலே தாயுடன் அழச் சேர்ந்துகொண்டாள். குழந் தைக்கும் தாயின் துயரம் தெரிந்துவிட்டது போலும். அழுகைச் சப்தத்தைக்கேட்டு, ஊரார் துக்கம் விசாரிக்க வரஆரம்பித்தனர். இவ்வுளவு வருஷங்களாக வந்த கார்த்திகை யைக் காட்டிலும் இவ்வருஷத்திய கார்த்திகை அவளுக்கு அடக்கவொண்ணுத் துயரத்தை அளித்தது. கொஞ்சம்நஞ்சம் இருந்த நம்பிக்கை யிலும் மண்ணைவாரிப் போட்டது.

"முன் கார்த்திகையில் சிவன்கோயில் தீபத்தை ஏற்றியதனுல்தான் இவ்விதம் கேடு சம்பவித்துவிட்டது. சிவசொத்துக் குல நாசமல்லவா! அதுதான் மாங்கிலிய பாவத்தையும் பிடுங்கிவிட்டது" என நினைத்து மனதை நொந்துகொண்டாள். அவளுக்கு ஒவ் வொரு வினாடியும் ஒவ்வொரு யுகமாகக் கழிந்தது. எப்படியோ பகல்பொழுது கழிந்து இராப்பொழுது வந்தது. இந்த இரவுஅரக்கன் தன்னை விழுங்கிவிடக்கூடாதா என ஏங்கினாள். இரவும் கழிந்து மறுநாள் பகல் மணி 10 அடித்தது.

வாசலில் தபால்காரன் கையில் தபால் ஒன்றுடன் நின்றான். கடிதத்தைப் பார்த்ததும் அவளுக்குத் தன் கண்ணையே நம்ப முடிய வில்லை. எழுத்துச் சுந்தரேசனுடையதாக இருந்தது. படித்தாள்:-

அன்பிற்குகந்த கமலத்திற்கு,

ஆசீர்வாதம். நான் இன்று காலைதான் மதராஸ் வந்தேன். நாளை ஊர்வந்து சேரு கிறேன். இவ்வளவு நாட்கள் கடிதம் எழுதாம லிருந்ததற்காக மன்னிப்பாயாக.

இப்படிக்கு,
சுந்தரேசன்.

சர்க்காரிடமிருந்து வந்த கடிதத்திலோ கணவர் இறந்துவிட்டதாகக் கூறப்பட்டிருக் கிறது. ஆனல் அவரிடமிருந்து இக்கடிதம் எப்படி வந்தது? ஏதோ சூது இருக்கிறது என்று நினைத்து இரு கடிதத்தின் தேதியை ஒத்துப் பார்த்தாள். சர்க்கார் கடிதத்தில் "சிலதினங்கள் முன்" என்று இரண்டு தினங் களுக்கு முன்னுல் எழுதப்பட்டிருந்தது. சுந்தரேசனது கடிதமோ நேற்றுத்தான் எழுதப்பட்டிருக்கிறது. அவளது மனத்துள் ஆனந்த அலைகள் எழுந்தன. கடவுளின் கருணையைப் பாராட்டினாள். மறுநாள் காலை வரை பொறுத்திருக்கும் சக்தி அவளிடமில்லை. சிறிது நேரத்திற்கொருதரம் வாசலையடை வாள். நாளைவரும் ரயில் ஏன் இன்றே வரக் கூடாது என நினைப்பாள். வாசலில் ஏதாவது வண்டியின் சப்தம்கேட்டால் உடனே திண்ணை யில் நின்று எட்டிப் பார்ப்பாள். பிறகு நம்பிக்கையிழந்து உள்ளேசெல்வாள். இதே மாதிரி மாலை கழிந்தது. இரவு சூழ்ந்தது. படுத்தால் தூக்கம் வருவதில்லை. ஒருகால் கடிதம் பொய்யோ என ஏங்குவாள். கண்ணை மூடினால் கணவர் வந்துவிட்டது போலவும், அவருடன் சல்லாபம் செய்வதுபோலவும் ஒரு திரையெழும். மற்றொருதரம் மாண்டுபோய் விட்டதாகவும், சிலர் துயரம் விசாரிக்க வந்

திருப்பதுபோலவும் கனவுகாண்பாள். உடனே பதைபதைத்து விழிப்பாள். பிறகு இதெல்லாம் ஸ்வப்னம்தானே என்று எண்ணி மனதைச் சமாதானப்படுத்திக்கொள்வாள். இரவு பூராவும் நம்பிக்கையொளி மங்கியும், பிரகாசித்தும் அவளைத் தூங்கவிடாமல் அடித்துவிட்டது.

பொழுது புலர்ந்தது. வண்டி வரும் நேரமும் நெருங்கியது. ஏன் இன்னும் வரக்காணோம் என ஏங்க ஆரம்பித்தாள். மணி ஆக ஆக அவளது மனமும் பதைக்க ஆரம்பித்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் அவள் வீட்டு வாசலில் ஒரு வண்டியும் வந்து நின்றது.

7

சுந்தரேசன் வண்டியினின்று இறங்கி உள்ளே நுழைந்தான். மனத்துள் கமலத்திற்குத் திடம் ஏற்பட்டது, ஆனால் ஒன்றும் பேசத் தோன்றவில்லை. அவளது கண் சுந்தரேசனை 'வாருங்கள்' என்று சொல்வது போல் நோக்கின. இருவர் கண்களும் முன் சம்பாஷித்துக்கொண்டன. பிறகு திகைப்பும் வியப்பும் சற்றுக் குறைந்ததும் 'நீங்கள்தானே' என்றாள் கமலம்.

"ஆமாம் நான்தான், உனக்கு என்ன நந்தேகம் வந்தது?' என்று ஆச்சரியத்துடன் வினவினான்.

'இந்த லெட்டர் எப்படி வந்தது? நான் பயந்தேபோய்விட்டேன்' என்று கூறிய வண்ணம் சர்க்கார் கடிதத்தை நீட்டினாள். கடிதத்தைப்பார்த்த சுந்தரேசனுக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. பிறகு சற்றுயோசித்துத் தன் பெட்டியைத் திறந்தான். 'பாட்ஜை' எடுத்தால் அதில் 'சோமு' என்று எழுதப்பட்டிருந்தது. "அடடா, ஊருக்குக் கிளம்பும் அவசரத்தில் எனது 'பாட்ஜை' மாற்றி அவனது 'பாட்ஜை' எடுத்து வந்துவிட்டேன். "பாவம் எனது தோழன் 'சோமு' இறந்துவிட்டான் போலிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டிருந்த அவனது கண்களில் கண்ணீர் துளிர்த்தது. சிறிதுநேரத்திற்கெல்லாம் வெகு நாட்களாகப் பிரிந்திருந்த காதலர்கள் தம் குடும்ப யோகக்ஷேமங்களைப் பேச ஆரம்பித்தனர்.

இதேசமயம் 'ஸார் தபால்' என்ற குரல் கேட்டது. அதுவும் சர்க்கார் கடிதம்தான். 'சுந்தரேசன் என்பவர் இறக்கவில்லை. அவர் ஒரு வருஷ லீவில் தம் தாய்நாட்டிற்குச் சென்றிருக்கிறார். இறந்தவர் மற்றொருவர் என்று தெரியவருகிறது' என்று எழுதப்பட்டிருந்தது.

கண்வரை அடைந்த கமலம் புளகமுற்றாள். மாலைப்பொழுது நெருங்கியது. இருட்ட ஆரம்பித்ததும் அவளது வீட்டில் தீபாலங்காரமும் குதூகலிப்புமாக இருந்தது. குழந்தை பத்மாவைக் கூப்பிட்டு நீயும் வாணம் விடு என்று கூறினாள்.

'அம்மா சாமிகோவிச்சுக்கும்னு சொன்னியே அண்ணிக்கு. இன்னிக்குமட்டும் கோவிச்சுக்காதோ! என்றாள் பத்மா.

"அப்பா வந்தூட்டார் பாரு. "இனிமேல் சாமி கோவிச்சுக்காது" என்றாள் கமலம்.

அன்றிரவு புது 'டபிள்கலர்' புடவையையும், ஆபரணங்களையும் அணிந்து மிகவும் அழகாக விளங்கினாள் கமலம். சுந்தரேசனும் இரண்டு கோயிலுக்கும் போய் வந்து பந்தத்தைக் காட்டி 'விளக்கை ஏற்றிக்கொள்' என்றுரைத்தான்.

'முன்மாதிரி ஓடவில்லை' என்று சொன்னால் தான் ஏற்றிக்கொள்வேன்."

"இனிமே உன்னைவிட்டுவிட்டு யாரு போகப் போகிறார்கள்! அப்படிப் போனாலும்கூட அழைத்துக்கொண்டுதான் போகப் போகிறேன்."

"பந்தத்தை எட்டிப் பிடிச்சுக்குங்கோ. குங்கிலியம் போட்டுவிட்டு விளக்கை ஏத்திக் கொள்கிறேன்" என்று சொல்லிக் குங்கிலியத்தைத் தூவினாள். குபீலென்று பிரகாசம் எழும்பியது. அதைக் கண்ட தம்பதிகளிருவரின் கண்களும் அதிசயப் புன்முறுவல் பூத்தன. பிறகு விளக்கை ஏற்றிக்கொண்டு உள்ளே சென்றாள் கமலம்.

சிறிது நேரத்திற்கெல்லாம் கமலத்தின் இல்லம் தீபங்களால் அலங்கரிக்கப்பட்டது. 'குபேர மாளிகை' கூட அப்படியிராது என்று சொல்லிவிடலாம். இன்னிக்கித்தான் "வீடு கலியாணமும் கார்த்திகையுமாயிருக்கு" என்றாள கமலம் காதல் வீசும் கண்களுடன்.

'ஆம்' என்று தலையசைத்து விளக்குக்களும் அதை ஆமோதித்தன.

பத்மாவின் புதுப்பாவாடையும் தனது பாஷையில் அதை விளக்கிக் கூறியது.

சுந்தரேசனும் 'அதற்கென்ன சந்தேகம்' என்று கூறியவண்ணம் அவலையும் பொரியையும் வாயில் போட்டுக்கொண்டான்.

தொடர் கதை

ஸுஜாதா

கமலா பத்மநாபன்

சென்ற இதழ் தொடர்ச்சி.

6

தனிமையில் விடப்பட்ட ராஜசேகரன் மனோரமாவின் வார்த்தைகளைக் கேட்டுத் திக்பிரமை அடைந்தவனாய்ச் சில வினாடிகள் நின்றான். பிறகு சிறிது தெளிவடைந்ததும் மனோரமா கொடுத்துவிட்டுச் சென்ற புகைப் படத்தை முதலில் பார்த்தான். அது ஸாக்ஷாத் தன்னுடைய ரூபம் என்பதை அறிந்தவுடன் அவனுடைய ஆச்சர்யமும் ஆவலும் பன்மடங்கு அதிகமாயின. பிறகு கடிதத்தைப் பிரித்துப் படிக்கலானான்.

"என் அருமைக் குழந்தாய்,

தற்சமயம் எனது கர்ப்பத்திலிருக்கும் நீ இந்தப் பாபஉலகில் ஜனிப்பதற்கு முன்னதாகவே நான் உனக்கு இந்தக் கடிதம் எழுத வேண்டி இருப்பதை நினைக்க எனக்கே ஒரு மாதிரியாக இருக்கிறது. எழுதாமல் சும்மா இருந்துவிடவும் என் மனம் கேட்கவில்லை. எனது உடம்பு இப்பொழுது இருக்கும் மிகுந்த துர்ப்பலமான ஸ்திதியில், நீ பிறந்தபிறகு சில மணி நேரமாவது என் உயிர் உடலில் தரிக்குமோ என்பது சந்தேகம்தான். ஆனால் நீ ஜனனம் ஆவதற்கு முன்னதாக நான் ஒருகாலும் மரிக்கமாட்டேன் என்ற ஒரு திடமான எண்ணம் எனக்கு இருக்கிறது.

"குழந்தாய், நீ ஆணாய்ப் பிறந்தாலும் சரி, பெண்ணாய்ப் பிறந்தாலும் சரி, சமூகத்தால் திரஸ்கரிக்கப்பட்ட ஒரு ஜீவனாகவே உன் ஆயுள் முழுவதும் கழித்தாகவேண்டுமென்று உன் தலைவிதியாகிவிட்டதே என்பதை நினைக்கும்போதே என் உள்ளம் துடித்துத் துன்புறுகிறது. என்னைச் சுவீகரிக்கக் காத்துக்கொண்டிருக்கும் மரண தேவதை உன்னையும் ஒருகால் சீக்கிரத்திலேயே ஏற்றுக்கொண்டுவிடும்பக்ஷத்தில் என் ஆத்மாவுக்கு எவ்வளவோ நிம்மதி ஏற்படும். ஆனால் உன் தலைஎழுத்து எப்படி இருக்கப்போகிறதோ, யார் கண்டார்கள்?

"கர்ப்பத்திலிருக்கும் சிசுவே, உன்னுடைய தந்தையை இப்படிப் பாத்தியதை கொண்டாடி அவரைப்பற்றிக் குறிப்பிடுவதற்குக் கூச்சமாகத்தான் இருக்கிறது. நான் சில முறைகள்தான் பார்த்திருக்கிறேன். ஒரே ஒரு இரவு நான் அவருடன் நெருங்கிப் பழகும்படி நேர்ந்துவிட்டது. அந்த மறக்கமுடியாத ஒரு ராத்திரியே நீ இப்பொழுது என் கர்ப்பத்தில் வாஸம் செய்வதற்குக் காரணமாகிவிட்டது. உன் தந்தை என்று நான் குறிப்பிடுபவருக்கும் எனக்கும் மணமாகி எங்கள் இருவருடைய தாம்பத்ய வாழ்க்கையில் நியாயமாய்ப் பிறந்த ஒரு குழந்தை நீ என்று அவசரப்பட்டுத் தீர்மானித்துவிடாதே. சாதாரணமாய் உலகமக்கள் எல்லோருக்கும் உரித்தான அந்தப் பாக்கியம் உனக்குக் கிடையாது. நீ ஒரு அனாமதேயக்குழந்தை. உன் தந்தையின் பெயர் ராஜசேகரன். அவர் இப்பொழுது ஒரு டாக்டர்.

"ராஜசேகரனுக்கும் வைத்தியக்கல்லூரியின் தலைமை ஆசிரியர் டாக்டர் சாம்பசிவன் என்பவரின் புத்திரிக்கும் விவாகம் நடந்தேறிய விஷயத்தை அந்நூதன தம்பதிகளின் புகைப் படத்துடன் பத்திரிகையில் பிரசுரித்திருப்பதை ஒரு நாள் அகஸ்மாத்தாய்க் கண்டேன். அந்த நிமிஷமே என் தலையில் பேரிடிவிழுந்ததுபோல் உணர்ந்தேன். அதுபரியந்தம் நான், என்னை இப்பரிதாபகரமான கதிக்கு உள்ளாக்கிவிட்டுத் திடீரென்று மறைந்த அவ்விட புருஷர், சீக்கிரத்திலேயே என்னிடம் திரும்பி வந்து என்னை முறைப்படி விவாகம் செய்து கொள்வார் என்றே நம்பியிருந்தேன். ராஜசேகரன் மணம்புரிந்துகொண்ட தகவலை அறிந்தவுடனேயே என் நம்பிக்கை அடியோடு மடிந்துபோய், ஆசையும் நிராசை ஆயிற்று. ராஜசேகரன் என்னை இதற்குள் மறந்திருப்பார். ஆனால் கேவலம் ஒருமாதகாலபரிசயத்திலேயே அவரிடம் என் மனதைப் பறிகொடுத்து, நான் அவர் வார்த்தைகளை நம்பி, ஓர் இரவு என் உடலையும் அவருக்கு அர்ப்பணம் செய்தேன். இப்பொழுதுகூட நான் அவரையே என் நாதனாகக் கருதி என் ஹ்ருதயக்கோவிலில் வைத்துப் பூஜித்து வருகிறேன். அதிர்ஷ்டவசமாய் அவருடைய புகைப் படம் ஒன்று என்னிடம் இருக்கிறது. அப்படத்தையும் இக்கடிதத்துடன் வைத்திருக்கிறேன்.

"குழந்தாய், எனக்குச் சோர்வும் மனோவேதனையும் அதிகமாகிக் கண்ணை இருட்டிக் கொண்டுவருகிறது. இதற்குமேல் எழுதச் சக்தி இல்லை. அந்தர்யாமியான பரமாத்மாதான் உன்னைக் காப்பாற்றவேண்டும். கடைசியாக ஒரு வேண்டுகோள். உன்னை இந்த உலகில் ஒரு பாவ மூட்டையாகக்கொண்டு தள்ளியதற்காக என்னைச் சபிக்காதே! இக்கடிதத்தை நீ படித்து முடித்தபிறகு என்மேல் அனுதாபங்கொண்டு எனக்காக இரண்டு சொட்டுக்

கண்ணீர் விடுவாயென்று நம்புகிறேன். கடவுள் உன்னை வாழ்த்துவாராக!"

இப்படிக்கு,
உன்னை நிர்க்கதியாய் இவ்வுலகில் விட்டு உயிர் துறக்கும்
உன் அன்புமிக்க அன்னை,
சுமதி.

கடிதத்தைப் பாதி வாசித்துக்கொண்டிருக்கும்பொழுதே ராஜசேகரனுக்கு விவரிக்க முடியாத வேதனையும் உள்ளக் கிளர்ச்சியும் உண்டாகி, தான் ஒரு பெரிய குற்றவாளி என்பதாக அவன் உணர்ந்தான். முழுவதும் வாசித்து முடித்ததும் அவனது நேத்திரங்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. கிட்டத்தட்ட ஏழு வருஷங்களுக்குமுன்பு விளையாட்டுப்போல் நடந்த சம்பவங்கள் சில அவனுடைய மனத்திரையில் இப்பொழுது படக்காட்சிபோல் தோற்றமளித்து அவனது மனச்சாட்சியைக் கொடுமையாய்த் தாக்கிற்று.

ஃ ஃ ஃ

அப்பொழுது ராஜசேகரன் சென்னை வைத்தியக் கல்லூரியில் கடைசிவருஷ மாணவன். அதே வகுப்பில் படித்துவந்த தினகரன் என்ற வாலிபனும் ராஜசேகரனும் உற்ற தோழர்கள். தினகரன் படிப்பில் மகா மேதாவி. ஒவ்வொரு வருஷமும் வகுப்புப் பரீக்ஷையில் அவன் தான் முதல்மாணவனாகத் தேறுவான். "ஸ்காலர்ஷிப்"பில்தான் படித்துவந்தான். தினகரனைத் தரித்திரம் பிடித்து வாட்டியது. பசிப் பிணியையும் மனச் சோர்வையும் போக்க அவன் அவ்வப்பொழுது அபின் சாராயம்போன்ற போதை அளிக்கும் வஸ்துக்களை உட்கொண்டு வந்தான். செல்வந்தனான ராஜசேகரன் தன் நண்பன் தினகரனின் ஏழ்மை நிலைமைக்கு இரங்கி அவனுக்கு அடிக்கடி பண உதவி அளித்துவந்தான்.

ஒரு விடுமுறைநாளன்று சாயரக்ஷை தினகரனும் ராஜசேகரனும் சமுத்திரக்கரைக்கு உலாவச் சென்றிருந்தனர். நண்பர்கள் இருவரும் மணல்மேல் உட்கார்ந்துகொண்டு பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். திடீரென்று நினைத்துக்கொண்டவன் போல் தினகரன் ராஜசேகரனை நோக்கி, "ராஜா, நீ இன்று கட்டாயம் என் அறைக்கு வந்துவிட்டுத்தான் போகவேண்டும். எவ்வளவு நாட்களாக நானும் உன்னைக் கூப்பிட்டுக்கொண்டே இருக்கிறேன். நீயும் வராமல் ஏமாற்றிக்கொண்டே இருக்கிறாய்" என்று வற்புறுத்தி, ராஜசேகரனைத் தான் வசித்து வந்த இடத்திற்கு இழுத்துக்கொண்டு போனான்.

ஒரு குறுகிய அசுத்தமான சந்திலே கிலமாகிக்கிடந்த தாழ்ந்த ஓட்டுக் கூரையையுடைய வீட்டை நண்பர்கள் இருவரும் அடைந்தார்கள். முன்புறத்து அறையிலிருந்து மங்கலான வெளிச்சம் ஒன்று தெரிந்துகொண்டிருந்தது. அந்த அறையின் எதிர்ப்பக்கத்திலும் பக்கவாட்டிலும் இருந்த இரண்டு மூன்று அறைகள் ஒரே இருளில் மூழ்கிக்கிடந்தன.

ரேழி வாசற்படியைச் சமீபித்ததும் ராஜசேகரன், அங்கிருந்த உயரமான மரப்படியின் மீது தடுக்கிவிழப்போனான். தினகரன் சட்டென்று ராஜசேகரனின் கையைப் பிடித்துக்கொண்டு "மெள்ளப் பார்த்துவா அப்பா; ஒரே இருட்டாக இருக்கிறது" என்று தன் நண்பனை எச்சரித்து அவனைக் கையைப் பிடித்துத் தனது அறைக்கு அழைத்துக்கொண்டு போய், கதவைத் தட்டினான். கதவு திறக்கப்பட்டது. கதவைத் திறந்துவிட்டு அங்கேயே நின்றுகொண்டிருந்த சுமார் பதினேழு வயதுடைய பெண்மணி ஒருத்தி, தினகரனுடன் இன்னொரு வாலிபன் வருவதைக் கண்டு சற்றே பின்னால் நகர்ந்துகொண்டாள்.

"வா, அப்பா ராஜா, இந்த ஏழையின் குடிசைக்கு. எங்கே அந்த மரநாற்காலியை இப்படி எடுத்துப்போடு சுமதீ," என்று தன் நண்பனை வரவேற்றுக்கொண்டே அப்பெண் மணிக்கு உத்தரவு இட்டான் தினகரன்.

சுமதி என்ற அப்பெண் மூலையில் கிடந்த ஒரு நாற்காலியை எடுத்து அதன்மேல் படிந்திருந்த தூசியைத் தட்டிவிட்டு, அதை அறையின் நடுவே இழுத்து வைத்தாள்.

இவ்வளவு நாட்களாகத் தன் நண்பன் தினகரன்மாத்திரம் ஒரு அறையை வாடகைக்கு வைத்துக்கொண்டு ஒண்டியாய் அதில் வசித்துவருகிறான் என்று எண்ணியிருந்த ராஜசேகரனுக்கு, அங்கே ஒரு பருவ மங்கையைக் கண்டதும் வியப்பு உண்டாயிற்று.

தினகரனையும் சுமதியையும் மாறிமாறிப் பார்த்தவண்ணம் திகைத்து நின்றான் ராஜசேகரன்.

"என்ன விழிக்கிறாய் ராஜா. இவள் என் தங்கை சுமதி. அவள் எட்டு வயதுச் சிறுமியாக இருக்கும்பொழுதே என் பெற்றோர்கள் இருவரும் அவளை வளர்க்கும் பொறுப்பை என் தலையில் கட்டிவிட்டு இவ்வுலகை விட்டு நீங்கினர். அன்றுமுதல் சுமதி என்னையே நம்பி நிழல்போல் என்னைத் தொடர்ந்து வருகிறாள். அவையெல்லாம் கூறப்போனால் பெரிய ராமாயணம்! இப்பொழுது என்னத்திற்கு அந்தப் பேச்சு? சுமதீ, எங்கள் இருவருக்கும் கொஞ்சம் டீ தயார்செய்து கொடுக்கிறாயா?" என்று தன் தங்கையின் பக்கம் திரும்பிக்கேட்டான் தினகரன்.

இவ்வளவு நேரமும் ராஜசேகரனைத் தன் பார்வையினால் விழுங்கிவிடுபவள்போல் உற்று நோக்கிக்கொண்டிருந்த சுமதி, தன் சகோ

தரன் டீ தயார் செய்யும்படி சொன்னதைக் கேட்டுச் சரேலென்று நகர்ந்து, "ஸ்டவ்"வைப் பற்றவைத்துப் பத்து நிமிஷங்களில் டீ தயார் செய்து, இரண்டு கோப்பைகளில் ஊற்றிக் கொண்டுவந்து வைத்தாள்.

தன் கண் முன்னால் ஒரு யௌவன மங்கையின் உருவத்தில் எலும்பும் தோலுமாய் நின்றுகொண்டிருந்த சுமதியைப் பார்க்கப் பார்க்க ராஜ்சேகரனின் மனம் உருகிப்போயிற்று. சுமதியின் வதனம் அழகுடையதுதான். ஆனால் ஏழ்மையின் சின்னமான குழிவிழுந்த கண்களும் ஒட்டிய கன்னங்களும் அவளுடைய அழகைப் பங்கப்படுத்தியிருந்தன. வறுமை என்பது மனிதர்களை இவ்வளவு கொடுமையாய்த் தாக்கவல்லது என்று ராஜசேகரன் அன்றுதான் அறிந்துகொண்டான்.

ராஜசேகரன் அன்று தினகரனின் அறையை விட்டுத் தான் வசித்துவந்த ஹாஸ்டலுக்குத் திரும்பிச்சென்றபொழுது இரவு பத்துமணி ஆகிவிட்டது.

இதற்குப் பிறகு ராஜசேகரன் இரண்டுமுறை தினகரனின் அழைப்பிற்கிணங்கியும் மற்றும் இரண்டு முறை அவன் கூப்பிடாமலேயும் தினகரனின் அறைக்குப்போய்ச் சில மணி நேரம் கழித்துவிட்டு வந்தான். அந்தச் சமயங்களில் சுமதி தினகரன் ராஜசேகரன் முதலிய மூவரும் கூடி, சகஜமாய் உட்கார்ந்துகொண்டு சிரிப்பும் வேடிக்கையுமாய்ப்பேசி காலம்கழித்தது உண்டு. தினகரனுடைய அறைக்குவர ஆரம்பித்த பிறகு ராஜசேகரனுக்கும் கொஞ்சம் குடிப்பழக்கம் ஏற்பட்டுவிட்டது. உற்சாகத்தின்பொருட்டு மிதமாய் மதுபானம் செய்வதில் ஒரு தவறும் இல்லையென்று அவன் அப்பொழுது எண்ணியிருந்தான்.

ஒரு நாள் மாலை இருட்டியபிறகு ராஜசேகரன் தினகரனுடன் அவனுடைய வீட்டிற்கு வந்து சேர்ந்தான். சுமதி தான் தயார் செய்திருந்த தின்பண்டங்களையும் காபியையும் நண்பர்களின் முன்பு கொண்டுவந்துவைத்து விட்டுத் தானும் அவர்களுடன் வந்து உட்கார்ந்துகொண்டாள். பொழுதுபோனதே தெரியாமல் மூவரும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். இரவு ஒன்பது மணிக்குப் பிறகு தினகரன் அலமாரியைத் திறந்து ஒரு பெரிய வெள்ளை ஸீஸாவை எடுத்து, அதிலிருந்த பானத்தை இரண்டு கண்ணாடி லோட்டாக்களில் ஊற்றி ராஜசேகரனிடம் ஒன்றைக் கொடுத்துவிட்டு மற்றொன்றை எடுத்துத்தான் பருகினான். ராஜசேகரன் அன்றைக்குத்தான் முதல் தட்வையாக—அதுவே கடைசித்தடவையும்கூட—ஒரு பெரிய லோட்டா நிறையவுள்ள மதுபானத்தை உட்கொண்டுவிட்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் அவனுடைய உடம்பில் ஏதோ ஒருவித வெறி ஏற்பட்டுவிட்டது.

ராஜசேகரனின் நிலைமையில் சிறிது தடுமாற்றம் உண்டாகி இருப்பதைக்கண்ட தினகரன் சிரித்துக்கொண்டே "ராஜா, நீ இன்று இரவு ஹாஸ்டலுக்குப்போகவேண்டாம். இங்கேயே படுத்துக்கொண்டிருந்துவிட்டுக் காலையில் போனால் ஆயிற்று. எனக்கு என்னவோ ஒரே புழுக்கமாக இருக்கிறது. நான் கொஞ்சதூரம் வெளியேபோய் உலாவிவிட்டு வருகிறேன்" என்று கூறி ஒரு ஸிகரட்டைப் பற்றவைத்து வாயில் கவ்வியவனாய்க் கதவை இழுத்துச் சாத்திக்கொண்டு ராஜசேகரன் பதிலைக்கூட எதிர்பாராமல் வெளியே கிளம்பிவிட்டான்.

தினகரன் வெளியே சென்ற சிறிதுநேரத்திற்குப் பிற்பாடு ராஜசேகரன், ஜன்னல் ஓரத்தில் தலைகுனிந்தபடி நின்றுகொண்டு, தன்புடவைத்தலைப்பை விரல்களால் நெருடியபடி இருந்த சுமதியைப் பாத்து, "சுமதீ, இப்படி என் அருகில் வாயேன். ஏன் தூரப்போய் நிற்கிறாய்? என்னைக் கண்டால் உனக்குப் பயமா? உன்னிடம் எனக்கு எத்தனை ஆசை தெரியுமா? உனக்காகத்தானே நான் அடிக்கடி இங்கு வருகிறேன். உன்னையே விவாகம் செய்துகொள்ளப்போவதாகக்கூட நான் நிச்சயம் செய்துவிட்டேன்" என்று தன்னையே மறந்து மதுவெறியில் பிதற்ற ஆரம்பித்தான்.

சுமதி பதில் பேசவில்லை. தான் நின்ற இடத்தைவிட்டு அசையாமால் இருந்தாள். ராஜசேகரன் சட்டென்று தான் இதுகாறும் உட்கார்ந்திருந்த கயிற்றுக்கட்டிலில் இருந்து எழுந்து அவளை அணுகி அவளுடைய கரத்தைப் பற்றி இழுத்துத் தான் மார்புடன் சேர்த்து அணைத்துக்கொண்டு, அவளுடைய வதனத்தில் முத்தமாரி பொழிந்தான். பேதைச் சுமதியும் அதிக எதிர்ப்போ ஆக்ஷேபனையோ செய்யாமல் ராஜசேகரனின் அணைப்பில் அடங்கிக் கிடந்தாள்.

மதுபானத்தினால் உண்டான வெறியும் யௌவனத்தின் இயல்பான காம உணர்ச்சியும் ஒருங்கே சேர்ந்து ராஜசேகரனை நிலைதடுமாறச் செய்துவிட்டன. அந்த நள்ளிரவில் தன்னையும் மறந்தவனாய்ச் சுமதியுடன் கூடி, தன் மிருக இச்சையைப் பூர்த்திசெய்துகொண்டான் ராஜசேகரன்.

மறுதினம் அதிகாலையில் எல்லோருக்கும் முன்னதாகக் கண்விழித்த ராஜசேகரனுக்கு முன் இரவு நடந்தது முழுதும் கனவுபோல் தோன்றிற்று. தான் நிஜமாக அவ்விதம் மதியில்லாமல் மிருகத்தைக்காட்டிலும் கேடுகெட்டவனாய் நடந்துகொண்டுவிட்டதை உணர்ந்தபொழுது அவன் உடல் வெட்கத்தாலும் பச்சாத்தாபத்தாலும் குன்றியது. சப்தம் செய்யாமல் எழுந்து அவ்விடத்தைவிட்டு நழுவித் தன் இருப்பிடம் அடைந்தான் ராஜசேகரன்.

"இனிமேல் ஒரு நாளும் நான் சாராயத்தைக் கண்ணாற்கூடப் பார்க்கப்போவதில்லை! தினகரனின் அறையின் பக்கமே தலைகாட்டப் போவதில்லை!" என்று பிரதிக்ஞைசெய்து அதைக் கடைப்பிடித்தும் நடந்துவந்தான்.

அன்றைய தினத்திலிருந்து தினகரன் மெடிகல் காலேஜுக்கு வருவதும் திடீரென்று நின்றுபோயிற்று. நான்கைந்து தினங்கள் ஆனபிறகு, தினகரன் இரண்டு தினங்கள் கடுமையான ஜ்வரத்தில் கஷ்டப்பட்டு உயிர் நீத்தான் என்ற தகவல் காலேஜுக்கு எட்டியது. தினகரன் மரணமடைந்த செய்தியைக்கேட்டவுடன் ராஜசேகரனுக்கு அனாதரவாக விடப்பட்ட சுமதியின் நினைவு வந்தது. உடனே அவளைப்போய் நேரில்கண்டு பேசித் தேற்றி ஏதாவது பண உதவி அளிக்கவேண்டுமென்ற ஆவல் எழும்பியது. ஆனால் தான் அன்றிரவு குடிவெறியில் சுமதியிடம் மிருகத்தனமாய் நடந்துகொண்டது ஞாபகத்திற்கு வரவும் அவளைப்போய்ப் பார்க்கவேண்டுமென்று எழும்பிய ஆவல் அப்படியே அடங்கிப்போயிற்று. அவளுடைய முகத்தில் இன்னொரு முறை விழிக்க அவனுக்குப் போதுமான தைரியமில்லை!

பலநாட்கள் ஓடிச்சென்றன. ராஜசேகரனுடைய நினைவிலிருந்து சுமதி கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்துவந்தாள். இந்தச் சமயத்தில்தான் ராஜசேகரனுக்கும் மனோரமாவுக்கும் பரிச்சயம் உண்டாயிற்று. மனோரமாவைப் பரிபூரணமாய்க் காதலித்து அவளை மணம் செய்துகொண்டு ஆனந்தமான இல்வாழ்க்கையை மேற்கொண்ட ராஜசேகரனுக்குச் சீக்கிரத்திலேயே சுமதியைப்பற்றிய ஞாபகம் அடியோடு அற்றுப்போயிற்று என்றால் இதில் என்ன ஆச்சர்யம்? இந்த அனித்திய உலகின் கண் எங்கே பார்த்தாலும் மனித சுபாவம் இப்படித்தானே இருக்கிறது!

சுமதியின் கடிதத்தைப் படித்த பிறகு ராஜசேகரனுடைய இதயத்தில் அலைமேல் அலையாய் எழும்பிமோதிய பழையநினைவுகள் அவன் மனதை ஒரே கலக்காய்க் கலக்கிவிட்டன. நெஞ்சம் துடித்தது. பச்சாத்தாபம் என்ற உணர்ச்சி அவன் உள்ளத்தில் பூர்ணமாய் நிரம்பி அவனைத் திணற அடித்தது. அவன் இதயத்தில் கொந்தளிக்கும் உணர்ச்சியின் வேகம் கண்ணீர் உருவமாய் நேத்திரங்களின் மூலம் வெளிப்பட்டது.

"ஹா, கடவுளே, எத்தகைய அபராதி நான்! எனக்கு மன்னிப்பும் உண்டோ! பேதைப் பெண் சுமதிக்கு நான் என் அறிவீனத்தால் இழைத்துவிட்ட அநீதி போதாதென்று என் உதிரத்தினால் சுமதியின் வயிற்றில் உதித்த குழந்தை ஸுஜாதாவை வேறு சரியானபடி மருந்துகொடுத்து சிகித்சை செய்ய மனமில்லாமல், கொல்வதற்கும் வழிதேடினேனே! மகா பாபி நான்! பொறாமைப் பேய்பிடித்தாடிய பாதகன்! இனி ஒரு விநாடி தாமதித்தாலும் ஸுஜாதாவின் உயிருக்கு ஆபத்துத்தான்! என்னுடைய வைத்தியத் திறமை முழுமையும் உபயோகித்து என் குழந்தையைக் காப்பாற்ற முயல்கிறேன். கடவுளே! என்மேல் இரக்கம் கொள்! என்னை ஏமாற்றிவிடாதே!" என்று கதறியவண்ணம் ஸுஜாதா படுத்திருந்த அறையை நோக்கி ஓடினான்.

ராஜசேகரன் ஏதோ புலம்பியபடி பதட்டத்துடன் உள்ளே ஓடி வந்ததைக் கண்ட மனோரமாவுக்கு ரொம்ப பயமாகிவிட்டது: 'குழந்தையின் மென்னியைத் திருகிக் கொன்றுபோட்டு விடுவானோ என்று சந்தேகமும் அச்சமும் எழும்ப, கட்டிலின்மேல் கிடந்த ஸுஜாதாவை வாரி எடுத்துத் தன்னுடன் சேர்த்துப் பத்திரமாய் அணைத்துக்கொண்டாள்.

தன் மனைவியின் திகிலைக்கண்ட ராஜசேகரன் "மனோ, பயப்படாதே. நான் குழந்தையை ஒன்றும் செய்யமாட்டேன். இவ்வளவு நாட்களாக நான் மதியிழந்து அஞ்ஞானம் என்ற இருளில் மூழ்கிக்கிடந்தேன். இப்பொழுது அந்த இருள் நீங்கி வெளிச்சம் உண்டாகிவிட்டது. கண்மணி ஸுஜாதாவின் வியாதிக்குத் தக்க மருந்துகொடுத்து சிகிச்சைசெய்து அவளை ஸௌக்கியப்படுத்துவது என்னுடைய பொறுப்பு! ஏன்? அதுவே என் மனப்பூர்வமான ஆவலுங்கூட. ஒருபாவமும் அறியாத என் சொந்தக் குழந்தையை நான் இவ்வளவு நாட்களாக வெறுத்துவந்ததற்குத்தக்கபடி ஈடு செய்துவிடுகிறேன். என்னை நம்பு" என்று சாந்தமும் உறுதியும் த்வனிக்கும் குரலில் புகன்றுவிட்டு ஸுஜாதாவை மெதுவாய் மனோரமாவின் அணைப்பிலிருந்து பிரித்துப் படுக்கையின்மீது விட்டான்.

குழந்தையின் தேகநிலைமையை நன்றாய்ப் பரிசோதித்துவிட்டு, இரண்டு கைகளையும் கூப்பி, ஸர்வேச்வரனைப் பிரார்த்தித்த பிறகு ஒரு இஞ்செக்ஷன் கொடுத்தான்.

ஸுஜாதாவுக்கு அன்று காலை முதலே சுய நினைவுகூட இல்லை. ராஜசேகரன் இஞ்செக்ஷன் கொடுத்த ஒரு மணிநேரத்திற்குப் பிறகு சிறிது பிரக்ஞைவந்து கண்ணைவிழித்துச் சுற்று முற்றும் பார்த்தாள்.

ராஜசேகரன் கொஞ்சம் நிம்மதியுடன் பெருமூச்சுவிட்டான். அவனுக்குத் தன் புதல்வி பிழைத்து விடுவாள் என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

மற்றும் இரண்டு தினங்கள் சென்றன. ராஜசேகரன் பசி, தாகம், நித்திரை என்பதையே முற்றும் மறந்தவனாய் வெகு சிரத்தையுடனும் கனிவுடனும் நோய்வாய்ப்பட்ட ஸுஜாதாவுக்குச் செய்துவந்த ஒப்பற்ற சிசுருஷைகளின் பலனாக அவள் உடம்பு குணமடைந்துவர ஆரம்பித்தது.

டாக்டரின் நடத்தையில் ஏற்பட்டிருந்த பரிவையும் பக்ஷத்தையும் கவனித்த ஸுஜாதாவுக்கு முதலில் ரொம்ப வியப்பாகவே இருந்தது. பிறகு சில தினங்களுக்கெல்லாம் அவளுக்கு அது பாந்தமாகிவிட்டது. ராஜசேகரனிடம் அவள் கொண்டிருந்த பயமும் குறைந்து கொண்டே வந்தது. 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்' என்ற வசனம் பொய்யாகுமா?

ஒரு நாள் ராஜசேகரன் ஸுஜாதாவின் அருகில் உட்கார்ந்துகொண்டு அவள் தலைமயிரை அன்புடன் கோதிவிட்டுக்கொண்டே "ஸுஜாதா, என்னைக்கண்டால் உனக்கு இப்பொழுது பயமில்லையே" என்று சிரித்தபடி கேட்டான்.

"இல்லை டாக்டர்" என்று பதிலளித்த ஸுஜாதா தன் வார்த்தைகளை நிரூபிப்பவள் போல் ராஜசேகரன் அருகில் இன்னும் சற்று நெருங்கிக்கொண்டாள்.

ராஜசேகரன் 'நான் உனக்கு டாக்டர் இல்லை, கண்ணே! நான் உன்னுடைய அப்பா, என்னை நீ இனிமேல் 'அப்பா'வென்று கூப்பிடுகிறாயா?" என்று ஆர்வத்துடன் கேட்டான்.

'அப்பா!' என்று வாஞ்சையுடன் கூப்பிட்டுக் கொண்டே ஸுஜாதா ராஜசேகரனின் கழுத்தைத் தன் சின்னஞ்சிறு கரங்களால் கட்டிக் கொண்டாள். தன் குமாரியை ஆசைதீர முத்தமிட்டான் ராஜசேகரன்.

மேஜை அருகில் நின்றுகொண்டு ஸுஜாதாவுக்கு ஹார்லிக்ஸ் கரைத்துக்கொண்டிருந்த மனோரமா இந்தக் காட்சியைக்கண்டு மனம் குளிர்ந்து ஆனந்தக் கண்ணீர்விட்டாள்.

ஃ ஃ ஃ ஃ

மேலே குறிப்பிட்ட சம்பவங்கள் நடந்தேறிய நான்கைந்து மாதங்களுக்குப் பிறகு ஒரு பௌர்ணமி இரவு. ராஜசேகரனும் மனோரமாவும் வெளிமாடியில் உட்கார்ந்துகொண்டு உல்லாசமாய்ச் சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். பட்டுப்போல் காய்ந்துகொண்டிருந்த நிலா வெளிச்சத்தில் ஸுஜாதா தன் போக்காய் விளையாடிக்கொண்டிருந்தாள். ஆனந்தக் கடலில் ஆழ்ந்திருந்த இம்மூவரையும் தாமும் கண்டுகளிக்க விரும்புவனபோல் வானில் மின்னிய நக்ஷத்திரக்கூட்டங்கள் போட்டி போட்டுக்கொண்டு ஒன்றை ஒன்று நெருங்கித் தள்ளிக்கொண்டு முன்வந்து கண்சிமிட்டின.

திடீரென்று மௌனமாய் யோசனையில் ஆழ்ந்துவிட்ட மனோரமாவைப் பார்த்து ராஜசேகரன் "என்ன யோசிக்கிறாய், மனோ?" என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை, எனக்கு இரண்டு மாதங்களாக உடம்பு ஒரு மாதிரியாக இருக்கிறது. உணவு விருப்பமே இல்லை, அடிக்கடி தலைவலியும் தலைசுற்றலும் உண்டாகிவிடுகின்றன. கவலையாக இருக்கிறது." என்றாள்.

"கண்ணே, உனக்கு உடம்பு ஒன்றுமில்லை. உனக்கு ஏற்பட்டிருக்கும் உடம்பு அசௌக்கியம், கவலைப்படவேண்டியது அல்லது அதற்கு மாறாகச் சந்தோஷப்படவேண்டியதுதான். ஸுஜாதாவுக்குத் தம்பி பாபா பிறக்கப் போகிறான். உன்னுடைய நெடுநாளைக்குறை நீங்கும் காலம் சமீபித்துவிட்டது" என்று மகிழ்ச்சியுடன் கூறித் தன் இனியாளின் கன்னத்தை வருடினான் ராஜசேகரன்.

உவகையும் நாணமும் கூடியதினால், சந்திர வொளியில் பன்மடங்கு சோபித்த மனோரமாவின் அழகிய வதனத்தைக்கண்டு மனம் பூரித்துப் புன்முறுவல் செய்தான் ராஜசேகரன் மனோரமா தலைகுனிந்துகொண்டாள்.

தன் தந்தையின் வார்த்தைகளைக்கேட்டுக் கொண்டிருந்த ஸுஜாதா ஓடிவந்து மனோரமாவின் மடியின்மேல் உட்கார்ந்து, அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டாள். பிறகு தன் மெல்லிய விரலால் வானவெளிமேலிருக்கும் வெண்ணிலாவைச் சுட்டிக்காட்டி "அம்மா, என் தம்பி பாபா அந்தச் சந்திரனைப்போல் அழகாக இருப்பானோல்லியோ?" என்று ஆவலுடன் கேட்டாள்.

"என் தங்கமே, உன் தம்பி பாபா அந்தச் சந்திரனைவிட இன்னும் அதிக அழகாய் இருப்பான்" என்று ஸுஜாதாவுக்குப் பெருமையுடன் பதிலளித்த ராஜசேகரன் உள்ளத்தில் அந்தச் சமயத்தில், ஊற்றுப்போல் பொங்கி எழும்பிய ஆனந்தத்திற்கு அணைபோடமுடியுமா?

முற்றிற்று.

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற குழந்தைகளின் டானிக்

ஜஹன்னிஸா

"ஸ்ரீரா"

●

1

செங்கிஸ்கான் வெற்றிமேல் வெற்றிபெற்று ஆசியா முழுவதுமே ஜயித்துவிட்டான் என்றே சொல்லவேண்டும். தான் சிறுவயதில்கண்ட கனவுகள் பூர்த்தியாகிவிட்டன என்று நினைக்கையிலேயே அவனது தேகம் சந்தோஷத்தால் பூரித்தது.

சரித்திரம் ஒரு பெரிய சமுத்திரம். அதன் அலைகள் விநோதசம்பவங்களைப் பலவித வர்ண ஜாலங்களுடன் எடுத்துக்காட்டும். சரித்திரத்தின் புதுமெருகு, மனித எண்ணங்களின் ஒரு பூர்வபாவம், கிளர்ச்சி உணர்ச்சிகளை ஏற்படுத்திவிட்டது. நேரே போரின் கஷ்டங்களை அனுபவித்து உணருங்காலையில் அதன் குரூரபாவம் நமக்கு அருவருப்பை உண்டுபண்ணுகிறது. இப்போது ஏற்பட்டிருக்கும் உலகநிலைமையில் போர்களின்மேல் மனித உள்ளத்திற்குத் தீரா வெறுப்பேற்பட்டிருக்கிறது. இருந்தும் சரித்திரத்தின் மிகப்பழைய சம்பவங்கள் ஒருவிதமான ஆச்சரிய உணர்ச்சிகளையே நம் உள்ளத்தில் உண்டாக்குகின்றன.

சரித்திரப்பாதையில் ஆவலடி மிதித்தவர்களில் செங்கிஸ்கானும் தலைசிறந்த ஒருவன். அவனடைந்த பெருவெற்றிகளுக்கு அவனது சளைக்காத புத்திகூர்மையும், மனோவேகமுமே முக்கிய காரணங்கள். இவைகளுக்குச் சமமாக இடம்பெறவேண்டிய மற்றொரு காரணமும் இருந்தது. அதுதான் காலேகானின் உதவி.

காலேகான் செங்கிஸ்கானின் தம்பி மகன். செங்கிஸ்கான் தன் இளம்பிராயத்திலிருந்தே அரசியலில் தீவிரமாக ஈடுபட்டுத் திக்விஜயத்தில் முனைந்துவிட்டதால் மணமே செய்துகொள்ளவில்லை. செங்கிஸ்கானின் தம்பி திடீரென்று வியாதிகண்டு இறந்துவிட்டான். இறக்கும் தறுவாயில் ஒரு ஆண்குழவியை விட்டுச்சென்றான். அதுதான் காலேகான். செங்கிஸ்கானுக்கு அக்குழந்தையின்மேல் அத்யந்த மோஹம். அவனைத் தன் பிள்ளையைப்போல அருமையாக வளர்த்து வந்தான்.

கால சக்கரம் சுழன்றது. காலேகான் இருபது வயது வாலிபனாகிவிட்டான். அவனது எழிலைக்கண்டு மயங்காத முகம்மதிய மடந்தை ஆசியாவிலேயே இல்லையென்று எல்லோரும் சொல்லிக்கொண்டார்கள். செங்கிஸ்கானுக்கு இதில் ஒரு தனிப்பெருமைதான்.

காலேகான் நாளடைவில் செங்கிஸினிடமிருந்து சண்டையின் பல சூக்ஷ்மங்களையும் கற்றறிந்துவிட்டான். ஒவ்வொரு போரிலும் காலேகான் தன் பெரியப்பாவுக்கு மிகுந்த உதவியாயிருந்தான். அரங்கத்தில் அவனது ஊக்கம் சேனை அணிகளுக்கெல்லாம் பெரும் உற்சாகத்தைக்கொடுத்தது. செங்கிஸ்கானால் கைப்பற்ற முடியாத கோட்டைகளைக் காலே தன்யுக்தியினால் சுலபமாகப் பிடித்துக்கொடுப்பான். செங்கிஸ்கானது அரசியல் கனவுகள் எல்லாம் சில வருடங்களில் பூர்த்தியாகிவிட்டன. அவன் இப்போது நாற்பத்தைந்தாவது வயதின் எல்லையை மிதித்துவிட்டான்.

2

மத்திய ஆசியாவுக்கும் திபேத்துக்கும் உள்ள எல்லையின்மேல் தங்கிய பலூஸா நகரம் அந்தி சாயும் வேளையில் அழகொளியைப் பரப்பி நின்றது. மலைகளின் நடுவே அமர்ந்திருந்த அவ்வபூர்வ நகரம் ஒரு படகுபோல் தோற்றியது. அவ்வேளையில் தூரத்தில்தெரிந்த மாடமாளிகைகளும், விசித்திரகோபுரங்களும், ஸ்தூபங்களும் வானளாவி மிதந்தன அவ்வழகுக்கடலிலே.

அந்நகரத்தின் ஹிருதயத்தில் ஓடிய அருவி, மலைகளின்மேல் நின்று பார்ப்பதற்கு வெள்ளிமயமாக இருந்தது. வானத்தில் மேகங்களொன்றும் இல்லை. அதில் திகழ்ந்த நீலம் சந்துஷ்டியின் ஆழத்துக்கொப்பான ஆழத்தை விளக்கி நின்றது.

அருவிக்கரையில் பாறையொன்றின்மேல் இரு உருவங்கள் உட்கார்ந்திருந்தன, இருவரது முகத்திலும் சாந்தத்தின் களை பரவி நின்றது.

செங்கிஸ்கான் காற்றில் பறந்த தன் தலைமயிரைக் கோதிக்கொண்டே அருவியை உற்று நோக்கிக்கொண்டிருந்தான். காலேகான் தன் மிருதுவான பாதங்களை அருவியில் நனைத்துக்கொண்டு, நீரில் ஓடியாடிய மீன்களை விளையாட்டாகத் துரத்திக்கொண்டிருந்தான்.

கீழாசியாவில் போர் முரசு ஓய்ந்து சில நாட்கள்தான் ஆகியிருந்தன. தன் கடைசி வெற்றியை அடைந்து என்றுமில்லாக் குதூகலத்துடனிருந்தான் செங்கிஸ்கான். பால்கஷ் ஏரிகரையில் நின்ற தன் பிரதான நகரத்

துக்குத் திரும்பும் காலையில் வழியில் பலூஸா நகரத்தில் சில நாட்கள் தங்கியிருந்தான்.

"எல்லாம் முடிந்துவிட்டன காலே! எனக்குப் பெருமிதம்தான் உண்டாகிறது. எனினும் மனதில் ஏதோ குறையாக இருக்கிறதே?" என்றான் செங்கிஸ்கான். காலே மௌனமாகச் சிரித்தான். அதில் எவ்வளவோ அர்த்தம் நிரம்பியிருந்தது. செங்கிஸ்கான் பெருமூச்செறிந்தான். வானத்தில் மிதந்து சென்ற தென்றலுடன் அது கலந்து ஓடினது ஒருவர் கண்களிலும் புலப்பட்டிருக்கமுடியாது.

செங்கிஸ்கான் எழுந்து, அருவிக்கரையோரமாக நடந்தான். காலே ஏதோ யோசனையிலாழ்ந்து உட்கார்ந்திருந்தான். இருநூறு கஜ தூரத்திற்கப்பால் நின்ற செங்கிஸ்கான், சிறிது நேரம் கழித்துக் "காலே" என்று கூப்பிட்டது அவன் காதில் விழுந்தது. எழுந்து பரபரப்பாக நடந்தான். அவனை நெருங்கியதும் செங்கிஸ்கான் அருவிக்கரையோரம் நின்ற ஒரு உருவத்தைச் சுட்டிக் காட்டினான். இருவரும் சிறிது நேரம் அசைவற்று மௌனமாக நின்றனர். பின் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அருவியருகே நின்றிருந்தது ஒரு பெண். சாதாரணப்பெண்ணல்ல, அழகின் ஆதரிசம்! கூந்தலை அவிழ்த்துவிட்டுப் பாறையின்மேல் உட்கார்ந்திருந்தாள். சுற்றிலும் இரண்டு மூன்று பெண்கள் நின்றிருந்தனர். அவர்கள் அவளுடைய சேவகிகளாகத்தான் இருந்திருக்க வேண்டும்.

செங்கிஸ்கானையும், காலேகானையும் பெண்கள் ஒருவரும் பார்க்கவேயில்லை. அவர்களிருவரும் தூரத்தில் தான் நின்றிருந்தார்கள். இயற்கையொளியின் நடுவே அப்பெண்ணின் எழிலொளி பதிந்து வைரம்போல் நின்றது.

செங்கிஸ் மௌனத்தைக் கலைத்து "அந்தக் குறையும் தீர்ந்தது!" என்றான். அவன் முன்பு பேசிய வார்த்தைகளின் தொடர்ச்சிதான் இது என்று காலேகானுக்கு விளங்காமற் போகவில்லை. அவன் செங்கிஸ்கானை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தான். அவனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

இருவரும் கூடாரத்தை நோக்கி வேகமாக நடந்தனர். அன்றிரவு செங்கிஸ் தீவிரமான யோசனையிலாழ்ந்திருந்தான். தன்னுள்ளத்தை அவன் அம்மடந்தையிடம் பறிகொடுத்து விட்டான். சண்டைக் குழப்பம் ஓய்ந்து, மனதில் சாந்தி ஏற்பட்ட வேளை. பெண்ணில்லாத வாழ்வு என்ன வாழ்வு என்று செங்கிஸ்கானுக்குத் தோன்றியது. அவளை அடையவேண்டுமென்று செங்கிஸ் கங்கணம் கட்டிக்கொண்டான். அன்பிற்கு அடைக்கலம் அவசியம். காதலிற்கு அதைவிட அவசியம். உரிமைகள் மனிதருக்குப் பல, உணர்ச்சிகளும் அப்படித்தான். செங்கிஸ்கானின் மனதில் பெண்மையின்பால் ஏற்படும் அன்பு ஊற்றெடுத்துத் திளைத்தது.

செங்கிஸ்கானின் மனதில் ஏற்பட்ட காதலின் பரிமாணத்தைவிடக் காலேயின் மனதில் ஏற்பட்ட ஆசை இரண்டு பங்கு அதிகமாகவே இருந்தது. இளமையின் உத்வேகத்துடன் சிலிர்த்து நின்ற அவனது ஹிருதயத்தில் காதலின் விதை ஊன்றியதில் அதிசயமில்லை. செங்கிஸ்கானின்மேல் அவனுக்கிருந்த மதிப்பிற்கும், அன்பிற்கும், தன் காதலுக்கும் இடையே தன்னுள்ளத்தில் ஏற்பட்ட போராட்டத்தை அவன் உணராமல் போகவில்லை.

3

சுமார் ஒரு மாதம் கழித்து ஒரு இரவு. பால்கஷ் ஏரிகரையில் பேரரண்மனை யொன்று மயங்கி நின்றது. அதன் மேல் தளத்தில் நின்றிருந்தான் காலேகான். பனிக்காலம் ஆரம்பமாகிவிட்டது என்பதை அறிவிப்பதேபோல் சந்திரிகையின் வட்டம் திரை போடப்பட்டு ஒளி வீசிக்கொண்டிருந்தது. ஏரியின் தண்ணீர் அலைக்கும்மாளமின்றி அடங்கி இருந்தது. காலேகானின் மனதில் அன்றொரு நாள் அவன் கண்ட மடந்தையின் உருவம் மிதந்து வந்தது. அன்று நடந்த சம்பவம் ஏதோ ஒரு திவ்ய கனவுபோல் அவனுக்குத் தோற்றியது. தன் உள்ளத்திலேற்பட்ட காதலை, தான் செங்கிஸ்கானின்மேல் வைத்திருந்த பிரியத்தினால் அடக்கித்தான் வைத்திருந்தான் அவன். செங்கிஸின் மனோநிலை அவனுக்குத் தெரியும். அவன் விரும்பிய அச்சந்தோஷம் சரிதான் என்று அவனுக்குத் தோற்றியது. ஒரு மாதத்திற்குமுன் அவனுள்ளத்திலேற்பட்ட எண்ணத்தின் தீவிரம் இப்போது சற்றுக் குறைந்துதான் இருந்தது. செங்கிஸ்கானின் சார்பாக—தான் இச்சிறு தியாகம்—தன் காதலை மறப்பதுகூடச் செய்யக்கூடாதா என்றுகூட அவன் எண்ணினான். எனினும் இளமை உணர்ச்சி மனிதனை விட்டதா?

குழம்பிய மனதுடன் இவ்வாறு நின்றிருந்த காலே தன்னை யாரோ கூப்பிடுவதை உணர்ந்து திரும்பினான். வாசற்படியருகே செங்கிஸ்கான்தான் நின்றிருந்தான்.

கிட்ட நெருங்கியவுடன் "காலே உனக்கு ஒரு அதிசயச் சின்னத்தைக் காட்டப்போகிறேன்!" என்றான் செங்கிஸ். காலேகானுக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன விசேஷமோ?" என்று கேட்டான் காலே. "என்னுடன் வா! உன் கண்களாலேயே பார்க்கலாம்" என்றான் செங்கிஸ்.

ஆவலுடன் காலே அவனைப் பின் தொடர்ந்தான். மூன்று கட்டுகளைத்தாண்டிச் சென்றவுடன் வேலைக்காரன் ஒரு அறைக் கதவைத்

திறந்தான். அறைக்குள் இருவரும் நுழைந் தார்கள். அதுதான் தாமதம்—காலே ஆச்சரி யத்துடன் அசைவற்று நின்ருன்!

"அன்று பார்த்த பெண்ணல்லவா?" என் ருன் காலே. அவளது எழில் அவனைத் தகிப்பது போலிருந்தது. கண்ணை ஒரு விநாடி மூடித் திறந்தான். காலேயை ஒருமுறை ஏற இறங் கப் பார்த்தாள் அம்மடந்தை. அவளது முகத் தில் ஒருவித சோகம் நிறைந்திருந்தது.

"ஆம்! அவளேதான்! ஜஹன்னிஸா என்று பெயர். பொருத்தமில்லையா?" என்று உணர் ச்சி ததும்பக் கேட்டான் செங்கிஸ்.

"ஜஹன்னிஸா, ஜஹன்னிஸா" என்று முண முணத்தான் காலே. அத்துடன் ஒரு பெரு மூச்சும் கலந்து சென்றது.

செங்கிஸ்கானின் சொல்லொணுக் குதூகலம் அவனது வார்த்தைகளில் நிரம்பியிருந்தது காலேக்குத் தெரியாமல் போகவில்லை.

மற்றுமொருமுறை ஜஹன்னிஸா காலே காணை உற்று நோக்கினுள். சிறிது நேரங் கழித்து அவள் முகத்தைத் திருப்பிக்கொண் டாள்.

"காலே, அன்று அருவிக்கரையில் நான் சொன்னது உனக்கு ஞாபகமிருக்கிறதா?" என்று கேட்டுக்கொண்டே வெளியே சென் ருன் செங்கிஸ்கான். காலே அவனைப் பின் தொடர்ந்து கொண்டே யோசனையிலாழ்ந்து "ஆம்" என்ருன்.

"உனக்குத் தெரியாமலேயே அவளைத் தூக்கி வரச்செய்தேன். முதலில் தற்கொலைசெய்து கொள்ளுகிறேனென்று ஏதேதோ பிதற்றிக் கொண்டிருந்தாள். இப்பொழுது ஒன்றும் சொல்வதில்லை. இருந்தும் ஏதோ ஒருமாதிரி யாகத்தானிருக்கிருள். 'நிக்கா' செய்துகொண் டுவிடு என்று நான் விடாமல் சொல்லிக் கொண்டுதானிருக்கிறேன். நாட்களை ஒத்திப் போடுகிருள். என் மனம் என்னவோ மயங்கி விட்டது, காலே! உனக்குத் தெரியாது. வரட்சியாய் நின்ற என் மனதில் இவளை அன்று கண்டதுமுதல் ஒரு குதூகலம் ஏற்பட்டிருக் கிறது. வாழ்க்கையில் பெண்ணின் அணைப்பு இல்லாவிடில் என்ன இருக்கிறது?" என்று ஏதேதோ கூறினுன் செங்கிஸ். மேன்மேலும் பேசவேண்டுமென்று அவன் மனம் அவனைத் தூண்டிற்று.

"உன்னிடம், ஏதோ எண்ணத்தில் ஒன்றும் கூருமல் மறைத்திருந்தேன் இத்தனை நாள். உன்னிடம் என் சாந்தியையும், சந்துஷ்டியை யும், ஆவலையும்பற்றிச் சொல்லிக் கொள்ளா மல் வேறெங்கே சொல்லப் போகிறேன், காலே?" என்று அவன் மனம்விட்டுப்பேசினுன்.

காலேயின் உள்ளத்தில் அசைவற்று நின்ற காதல்அலைகள் மறுபடி கொந்தளிக்க ஆரம் பித்தன. செங்கிஸ்கானின் பேச்சு அவனுக் குப் பொருமைக்குப்பதில் பெருமிதத்தையே கொடுத்தது. அவனது நினைவுமுழுவதும் செங்கிஸின் மனே நிலையிலேயே ஊன்றி நின் றது. ஏதேதோ யோசனை செய்தான் காலே.

"காலே, நாடாசை பூர்த்தியாகிவிட்டது. அவளது கரத்தை ஸ்பரிசித்து, ஒரு அணைப்பு—அவ்வளவுதான். என் வாழ்க்கை சாபல்ய மடைந்துவிடும். கிழவனுக்கு ஆசையென்ன என்கிருயா?" என்று கேட்டான் செங்கிஸ். தன்னுள்ளத்தில் தோன்றியதையெல்லாம் அப் படியே கொட்டிவிட்டான். காலே மௌன மாகவே நின்ருன்.

4

ஜஹன்னிஸா போட்டிருந்த ஒருமாத கெடு வும் தீர்ந்துவிட்டது. சந்திரிகை மேகப்படலத் துள் மறைந்து, மங்கிய வெளிச்சத்தை வானில் மிதக்கவிட்டுக்கொண்டிருந்தது. ஜஹன்னிஸை பலகணியோரம் மஞ்சத்தில் உட்கார்ந்து சுற்றிலுமிருந்த மலைச் சிகரங்களைக் கவனித் துக்கொண்டிருந்தாள். அவைகளின் சுதந்திரம் அவளது மனத்தில் பொருமையையே உண் டாக்கியது. மூடுபனியின் மங்கலான ஒளி குழப்பமடைந்த உணர்ச்சிகளை எடுத்துக் காட்டி நின்றது.

செங்கிஸ்கானை அவளுக்கு எள்ளளவும் பிடிக்கவில்லை. தன் காதலை அவனுக்குக் கொடுக்க அவள் மனமிசையவில்லை. ஏதோ விரக்தியுடன் தான் உயிரை வைத்துக்கொண் டிருந்தாள். வறண்டுகிடந்த அவளுள்ளத்தில் காலே சிறிது நம்பிக்கையூட்டியிருந்தான். அன்று அவனைத் தன்னறையில் பார்த்தது முதல் விருந்தே அவளதுஅன்பு ஒரு கோயிலையடைந்த உணர்ச்சி ஏற்பட்டது. காதற்கதிர்கள் அவ ளது ஹிருதயத்தில் ஒளியைப் பரப்பின. காலேகாணை மறுபடி எப்பொழுது பார்க்கப் போகிறோம் என்று அவளுள்ளம் துடித்துக் கொண்டிருந்தது.

தான் செங்கிஸ்கானிடம் போட்டிருந்த கெடு அன்று பூர்த்தியாகிவிட்டது என்று அவளுக்கு நினைவுவந்தவுடன் சொல்லொணு வேதனை அவளை வாட்டியது.

அறையை விட்டு வெளியே சென்று திறந்த வெளியில் கொஞ்சநேரம் நின்றிருந்தாள். ஜஹன்னிஸா தன்னையுமறியாமல் ஏதோ ஒரு பாட்டை மெல்லிய குரலில் பாடிக்கொண் டிருந்தாள். அதன் இனிய நாதத்தை இயற் கையே மனமுவந்து ரஸிப்பதுபோன்றிருந்தது அவ்வேளையில்!

நள்ளிரவில் சிறிய தீபமொன்று அறைக்குள் எரிந்துகொண்டிருந்தது. சுவர்களின் நிழல் படர்ந்து இருட்டாகவேயிருந்தன தாழ்வாரங்களெல்லாம். பிச்சைக்காரனொருவன் மெலிந்த குரலில்

"சுதந்திரம், சுதந்திரம், தினைத்தனைச்சுதந்திரம்,
குருவிபோன்று இங்குமங்கும் ஓடிடும் சுதந்திரம்!"

என்றதொரு பழைய பாட்டைப் பாடிக்கொண்டே சென்றான். பட்டினிகிடந்திருந்த அவனது குரலில் கோபமும், பலஹீனமும் கலந்துசென்றன. தெரு நாய்கள் சில ஓயாமற் குரைத்துக்கொண்டிருந்தன.

செங்கிஸ்கான் தற்செயலாக அந்தப்பக்கம் வந்தான். ஜஹன்னிஸையின் சோபை, மங்கிய நிலவொளியில் அவனது கண்களுக்கு விருந்தாகவே இருந்தது. அவளது கீதம் அவனை மெய்சிலிர்க்கச்செய்தது. விந்தையுடன் அசைவற்று நிழலிலேயே நின்றான் செங்கிஸ். ஜஹன்னிஸையின் பாட்டைக் கலைக்க அவனுக்கு இஷ்டமில்லை. தான் தூக்கிவந்த பதுமை விலைகளுக்கடங்காத வைரம் என்று அவனது மனம் அவனுக்குத் திரும்பத் திரும்பச் சொல்லிற்று.

ஜஹன்னிஸை பாட்டை நிறுத்தியவுடன் செங்கிஸ் அவ்விடத்தைவிட்டுச் சென்றுவிட்டான். அவளை அவன் ஒரு மலராகவே எண்ணினான். அவளிடம் பலாத்காரத்தை உபயோகப்படுத்த அவன் மனம் இசையவே இல்லை. வாழ்க்கையில் இவ்வளவு நாட்கள் கழித்து மின்னல் தோன்றியிருக்கும் சமயம், அதைப் பூர்ணமாக லயித்து அநுபவிக்க வேண்டுமென்றே அவன் எண்ணினான். அவளை அடையத் தன்னை உரியவனாக்கிக்கொண்டே, 'நிக்கா' செய்துகொள்ளவேண்டுமென்ற யோசனை அவன் மனதில் தீவிரமாகப் பதிந்துவிட்டது. அவள் எந்த நிபந்தனை போட்டாலும், என்ன பரீக்ஷைகள் வைத்தாலும் அவைகளினூடே வெற்றிபெற்றுத் தன் ஆசையை அடையவேண்டும் என்று அவனுக்குத் தோற்றியது.

பால்கஷின் அலைக்கும்மாளம் அடங்கியிருந்தும், அதன் குமுறல் இலேசாகக் காற்றில் தவழ்ந்து சென்றது. தெரு நாய்கள் குரைப்பதை நிறுத்திவிட்டன. பிச்சைக்காரனின் பாட்டு மடிந்துவிட்டது. வானத்துத் தாரகையொன்று மறைய யோசனை செய்துகொண்டிருந்தது.

5

மறுநாள் பிற்பகல். செங்கிஸ்கான் ஆவல் நிறைந்த மனத்துடன் ஜஹன்னிஸையின் அறைக்குள் நுழைந்தான். "இன்று கெடு தீர்ந்துவிட்டதே?" என்றுகொண்டே மஞ்சத்தில் உட்கார்ந்தான். ஜஹன்னிஸை வருத்தங் கலந்த யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.

"என்ன யோசனை செய்கிறாய்? தாகத்தை மிகைப்படுத்திவிட்டாய், ஜஹனி, பதில் சொல்லமாட்டேனென்கிறாயே?" என்று கெஞ்சும் பாவனையாகக் கேட்டான் செங்கிஸ்.

மிகுந்த தயக்கத்துடன், "நான் சொல்ல வேண்டியது ஒன்று இருக்கிறது. சிறையிலிருக்கும் பறவைக்குச் சிறகை அடிக்கக்கூடச் சுதந்திரம் உண்டா என்று எனக்குத் தெரியவில்லை" என்று கூறினாள் ஜஹனி.

"சிறையிலிருக்கும் பறவை, என்று அங்கலாய்த்துக்கொள்கிறாயே, ஜஹனி? மிகப் பெரிய விஸ்தீர்ணங்கொண்ட ஆசியாவே என் காலின்கீழ் நிற்கிறது. மனத்திற்காக உனக்கு அடிமைப்பட்டுவிட்டேன். என் தோளின் தினவு அடங்கி, முகத்தில் சுருக்கங்கள் கூட விழுந்துவிட்டன. ஆனால் வாழ்க்கையின் ஒரு மின்னலை இன்னும் காணவேயில்லை. உன்னைத்தவிர வேறெவராயிருந்தாலும்சரி, என் அன்பைப்பெற தாஸானுதாஸர்களாயிருப்பார்கள். ஆனால் நீ........."என்று கூறி நிறுத்திக்கொண்டான் செங்கிஸ்கான். அவனால் அதற்குமேல் பேசமுடியவில்லை.

ஜஹன்னிஸைக்கு அவனது மனோநிலை நன்கு தெரியும். ஆனால் காதல் என்பது இளம் நீர்களில் திளைத்து நிற்கும் ஊற்றல்லவா? அவளுக்கு இதை எப்படிக் கழிப்பது என்றே தெரியவில்லை.

"மௌனமாயிருக்கிறாயே? ஏதாவது நிபந்தனையிருந்தாலும் சரி! அதை நிறைவேற்றி, வெற்றிபெற்று உன்னை அடைந்துவிடுகிறேன். என் உடல் ஆவலுடன் துடிக்கிறது உனக்குத் தெரியாது. தாமதம் செய்யாதே, ஜஹனி" என்று மேலும் கூறினான் செங்கிஸ். அவனது உன்னத உள்ளத்தினின்று எழுந்த இவ்வார்த்தைகள் ஜஹன்னிஸையின் ஹிருதயத்தை உருக்கிவிட்டன. அவள் அவனை ஆச்சரியத்துடன் பார்த்தாள். அவன் காட்டிய உணர்ச்சிகள் அவளை வியக்கச்செய்தன.

"சிதாரை எடுத்து வந்தால் நிபந்தனையைச் சொல்கிறேன்" என்றாள் ஜஹனி. வேலைக்காரன் சிதாரை எடுத்து வந்தான். ஜஹன்னிஸை அதை மடியில் எடுத்து வைத்துக்கொண்டு வாசித்துக்கொண்டே பாட ஆரம்பித்தாள். ஆம், அவள் அன்று பாடிய அதே பாட்டு........." என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான் செங்கிஸ். சிதாருடன் சேர்ந்து அதன் சோபை பன்மடங்கு அதிகமாகத் தெரிந்தது. பக்கத்திலிருந்த கோப்பையில் திராக்ஷை ரஸம் அசைவற்று நின்றது. அதை எடுத்துக் குடித்தான் செங்கிஸ். காலே அன்று அந்தப்பக்கம் வரவேயில்லை.

பாடிமுடிந்ததும் "இந்தக் கீதத்தை உங்களுக்கும், காலேகானுக்கும் சொல்லிக் கொடுக்கிறேன். சிதாரில் வாசிக்கவேண்டும். அதற்குத்தக்க பயிற்சியும் கொடுக்கிறேன். இதை உங்களில் யார் அதிகத் திறமையுடன் வாசிக்கிறார்களோ அவரைத்தான்........."என்றாள் ஜஹனி. செங்கிஸ்கான் அவள் காலேயைக் காதலிக்கிறாள் என்று தெரிந்துகொண்டான். ஆனால் தன் பிரேமையின் பலனை அடைய அவன் அகம் கொதித்து நின்றது. காலேயின்மேல் அவனுக்கு எள்ளளவும் பொறாமை ஏற்படவில்லை. போட்டியில் ஜயித்து அவளை அடைந்துவிடலாம் என்ற நம்பிக்கைமாத்திரம் அவனுக்கிருந்தது. சிறு வயதிலேயே அவனுக்கு அவ்வாத்தியத்தில் கொஞ்சம் பயிற்சியுண்டு.

ஜஹன்னிஸையின் நிபந்தனை மிக்க விநோதமாகவேயிருந்தது. செங்கிஸ் அதற்கு உட்பட்டான். அன்றுதொட்டு பயிற்சி ஆரம்பமாகியது. காலேகானுக்கும் விஷயம்தெரிந்து பயிற்சியில் கலந்துகொண்டான். இரு காதல்களுக்கு நடுவே நடந்த இப்போட்டி விநோதமாகவும், அர்த்தமில்லாததாகவும் அவனுக்குத் தோன்றிற்று.

ஒருமாதம் கழித்து ஒருநாள் இரவு காலே மேல் தளத்தில் தனியே நின்றிருந்தான். வியாபாரிகள் செல்லும் பாதை இரவில் ஆம்பல் வர்ணமாயிருந்தது. மினுக்கு மினுக்கென்ற சிறு விளக்குக்களைத்தவிர ஊரெங்கும் கும்பிருட்டாயிருந்தது. செங்கிஸ்கானுக்குப்போட்டியாக, விலகிநிற்க மனமிருந்தும், தான் முயல்வது அவனுக்கு என்னவோ போலிருந்தது. ஆனால் ஜஹன்னிஸை தன்னைக் காதலிக்கிறாள் என்பதும் அவனுக்குத் தெரியாமல் போகவில்லை. இரண்டு சங்கடங்களுக்கு நடுவில் அவன் அகப்பட்டுக்கொண்டு விழித்தான்.

சிதாரில் குறைந்த ஊக்கம் காட்டி, போட்டியில் தோற்றுச் செங்கிஸ்கானுக்கு வெற்றியைக் கொடுத்துவிடலாமென்றால், பெண்ணின் ஹிருதயம் அவன் மனத்திரைமுன் தெளிந்து வந்தது. அவளுக்குத்தீங்குசெய்ய அவன் மனம் இசையவில்லை.

குழப்பத்துடன் நின்ற அவனது செவிகளில் சதங்கையொலி கேட்டுத்திரும்பினான். ஜஹன்னிஸை அவனைநோக்கி வந்தாள். காலேகான் மயங்கிநின்றான். அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"ஜஹனி, நான் தோற்றுவிடுவேன்போலிருக்கிறதே. உன் பிரேமை வீணாகிவிடும்போல் அல்லவா இருக்கிறது. எனக்கொன்றும் புரியவில்லை. பெரியப்பாவின் விரல்கள் தீவிரமான திறமையை வெளிப்படுத்துகின்றன. எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. நான் எவ்வளவு முயன்றாலும், வெற்றிபெறமுடியாதுபோலிருக்கிறதே?" என்றான் காலே. அவளது ஹிருதயம் வெடித்துவிடும் போலிருந்தது.

"முயற்சி போதாது. எனது அன்பின் அளவு உங்களுக்குத்தெரியாது. உங்களையே நம்பியிருக்கிறேன். ஏதோ, நம்பிக்கையுடன்தான் நிபந்தனையைப் போட்டேன். வெற்றிபெற்றால் அல்லவோ.........? சம்பவத்தோணி என்னை இங்கேகொண்டுவந்து விடுத்திருக்கிறது. சூன்யமாய் நின்ற என் மனத்தில் ஒரு குதூகலத்தை ஏற்படுத்திவிட்டீர்கள். ஆனால் பலத்தைப் பறிக்க முயற்சியில்லை. என் மீது இரக்கமில்லையா?" என்று உருக்கமாகப் பேசினாள் ஜஹன்னிஸா.

காலேகான் வெற்றியடைந்தால்தான் தன் வாழ்க்கையின் குறி நிறைவேறும் என்று அவளுக்குத் தோன்றிற்று.

"காலை வேளைகளில் அவர் என்னறைக்கு வருவதில்லை. அவருக்குத்தெரியாமல் உங்களுக்கு அதிகப் பயிற்சி கொடுக்கிறேன். சீக்கிரமே வந்துவிடுங்கள்........" என்று மேலும் கூறினாள் ஜஹன்னிஸா. எப்படியாவது அவனை வெற்றிபெறச்செய்யவேண்டும் என்ற ஒரே எண்ணம் அவள் மனத்தைத் தூண்டிற்று.

"அது முடியாது—ஒரு நாளும் முடியாது; ஜஹனி! உனக்கு ஒரே அன்பு. என்னுடையதோ இரு கிளைகளில் பிரிந்து நிற்கிறது. எதையும் தள்ளிவிட முடியவில்லை. நியாயத்திற்கெதிரான எம்முறையிலும் நான் ஜயிக்க முற்படமாட்டேன்...... தேசீய எண்ணங்கள் முடிந்து ஓய்வு ஏற்பட்ட வேளையில் பெரியப்பா ஒரு ஆசையுடன் முன் நிற்கிறார். அவருக்குப்போட்டியாக........" என்று அடுக்கிக்கொண்டே போனான் காலே.

"ஆனால், நீங்கள் என்னைக் காதலிக்கவில்லையா?" என்று கேட்டாள். "நான் உன்னைக் காதலிப்பது உண்மைதான். ஆனால் அவர்...... அவரில்லாவிடில் நான் உன்னைப்பார்த்திருக்கவே முடியாதே........" என்றுகொண்டே வெளியே சென்றான் காலே. ஜஹனி மௌனமாகக் கண்ணீர் உகுத்துக்கொண்டே அவன் பின் தொடர்ந்தாள். அவன் வேகமாகச் சென்று படுக்கையில் படுத்துவிட்டான். ஆந்தைகளின் அலறல் விட்டுவிட்டுக் கேட்டது.

செங்கிஸ்கானின் முயற்சிகள் தீவிரமாகவே இருந்தன. அவனது திறமையைக்கண்டு ஜஹன்னிஸை வியப்பும், பயமும் அடைந்தாள்.

6

நாட்கள் ஓடி மறைந்தன. போட்டி நடக்க வேண்டிய வேளையும் வந்துவிட்டது. அதைப் பற்றி முன்னமேயே தன் மந்திரிகளுக்கு

அறிவித்திருந்தான் செங்கிஸ்கான். இந்த அதிசயச்சம்பவத்தைக்காண ஆவலுடன் கணக்கற்ற பிரதானிகளும், முக்கியஸ்தர்களும் அரண்மனை மண்டபத்தில் குழுமிவிட்டார்கள். ஜஹன்னிஸையின் மனம் குழம்பிக்கிடந்தது. காலேகான் சூன்யமான மனத்துடன் போட்டிக்குத் தயாரானான்.

மேடையின்மேல் மூவரும் வந்து உட்கார்ந்தார்கள். சபையில் நிசப்தம் குடிகொண்டிருந்தது. ஜஹன்னிஸைக்கு ஒவ்வொரு விநாடியும் ஒரு யுகமாகத் தோற்றியது.

போட்டிக்கு ஆரம்பிக்கவேண்டிய சமயம். அப்போது திடீரென்று எதிர்பாராததும், ஆச்சரியமும், பயங்கரமும் நிறைந்ததுமான சம்பவம் ஒன்று நடந்தது. திடீரென்று கூரிய வாளொன்று செங்கிஸ்கானை நோக்கி விரைந்து வந்தது. அதைத்தடுப்பதற்குள், ஐயோ, அது அவன் மார்பில் பாய்ந்தது! "ஹா" என்று கதறிக்கொண்டே சாய்ந்தான் செங்கிஸ்கான்.

பீதியுடன் எழுந்து நின்றாள் ஜஹன்னிஸா. சிதாரை நகர்த்திவிட்டுக் கோபம் முகத்தில் ஜ்வலிக்க எழுந்தான் காலேகான். மண்டபத்தில் ஒரு பெருங்குழப்பம் ஏற்பட்டது. கத்தியுடன் பாய்ந்தான் காலே. தன் பெரியப்பாவுக்குத் தீங்கு செய்தவனைக் கண்டதுண்டம் செய்ய அவன் மனம் துடிதுடித்தது. ரத்தம் வழிந்தோடிற்று. குழப்பத்திலே, பெரு முயற்சிக்குப்பின் கலகக்காரர்கள் பிடிபட்டார்கள். செங்கிஸைக்கொன்று தேசத்தைக்கைப்பற்றச் சில சதிகாரர்கள் செய்த சூழ்ச்சி என்றுகாலேகான் நொடிப்பொழுதில் தெரிந்துகொண்டான். அவனுக்குத் தாங்கொணுத்துயரம் ஏற்பட்டது. செங்கிஸ்கானை மேடையிலிருந்துஅறைக்குத் தூக்கிச் சென்றார்கள் வேலைக்காரர்கள்.

செங்கிஸின் மார்பிலிருந்து உதிரம் வழிந்தோடிற்று. சிகித்ஸை செய்ய அரண்மனை "சாகிப்" வந்திருந்தார். கண்ணில் நீர் தளும்ப ஜஹன்னிஸையும், காலேகானும், படுக்கையருகில் உட்கார்ந்திருந்தனர். ஜஹனி செங்கிஸ்கானை வெறுத்தபோதிலும் இப்போது அவன் பேரில் அவளுக்கு இரக்கமேற்பட்டது. இது மாதிரி சம்பவத்தை அவள் எதிர்பார்க்கவே இல்லை.

செங்கிஸ்கான் வாய்திறந்து ஒன்றும் பேசவில்லை, காலேயின் தலைமயிரை அன்புடன் கோதிக்கொண்டிருந்தான். ஜஹன்னிஸை ஒரு கோப்பையில் புதியதிராக்ஷை ரஸத்தை ஊற்றி மெதுவாக அவனுதடுகளில் வைத்தாள். பெரு முயற்சியுடன் செங்கிஸ் அதை விழுங்கினான். புண் மிகவும் பயங்கரமாயிருந்தது. ஜஹன்னிஸை, தன்னால் அவனுக்கு ஒரு நித்யமான காதலைக்கொடுக்க முடியவில்லையெனினும்,

ஜம்மியின் லிவர்க்யூர்மூலம் புனர்ஜன்மம்

ஜம்மியின்
லிவர் க்யூர்

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி ரோகங்களை குணப்படுத்துவதில் தாமதமோ, அசட்டையோ செய்வது ஆபத்தாகும். நோய் கண்ட மாத்திரத்தில் 36 வருட காலமாக கீர்த்தி பெற்ற இச்சஞ்சீவியை உபயோகியுங்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது

ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்,
1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்,
மற்றும் பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சினாப்பள்ளி.

சிறியசிச்ருஷைகளாலேனும் அவனது ஒடிந்த மனதைச்சாந்திசெய்யலாமென்று நினைத்தாள். ஆனால் செங்கிஸின் மனம் குழப்பமடைந்தோ, வருத்தமடைந்தோ இருக்கவில்லை.

வஸந்தத்தின் ஆரம்பம் வருத்தம் நிறைந்தே தென்பட்டது. தூரத்தேதெரிந்த வியாபாரிகள் கூடாரம் அழுக்கடைந்த துணித்திரைகளால் மறைக்கப்பட்டுக்கிடந்தது. ஒட்டகங்களின் அசைவு வெறுப்புக்கலந்திருந்தது.

மறுநாள் இரவு. வஸந்தத்தின் வரவு சுற்றிலுமிருந்த இலைத்தளிர்களினால் செவ்வனே விளக்கப்பட்டு நின்றது. தூரத்தில் பால்கஷ் ஏரியின் அலைமோதல் கீத நாதம்போல் ஒலித்துக்கொண்டிருந்தது. சந்திரிகை தெளிந்திருந்தது. செங்கிஸ்கான் கழுத்தைத் திருப்பிப் பலகணிகளின் வழியே வெளியே நோக்கினான். அவன் தனது அந்திய காலம் நிமிஷத்துக்கு நிமிஷம் நெருங்குவதை நன்கு உணர்ந்தான். நகமொடிந்த சிங்கம்போல் அமைதியாகப் படுத்திருந்தான் அவன். காலேகான் விம்மிக்கொண்டே அவனருகில் உட்கார்ந்திருந்தான். ஜஹன்னிஸை கண் விழிப்பால் சோர்ந்து உட்கார்ந்திருந்தாள்.

விடியற்காலங்கூட ஆகிவிட்டது. சந்திரன் இறங்கிக்கொண்டிருந்தான். காலே கண்களை மூடிக்கொண்டிருந்தான். சோகத்தின் வரம்பு அவனை உள்ளே முக்கியது. வாசற்படியில் அசைவற்று நின்றிருந்தார் அரண்மனை 'மௌல்வி'. செங்கிஸ்கான் கைஜாடையால் அவரையும் வேலைக்காரர்களையும் வெளியே போகச் சொல்லிவிட்டான்.

"காலே, என்னருமைக்காலே" என்று கூப்பிட்டான் செங்கிஸ். மிகவும் கஷ்டப்பட்டுத்தான் அவன் பேசினான். காலேகான் முகத்தை நிமிர்த்தி அவனைப்பார்த்தான்.

"காலே, சிறு எல்லைகளுக்கடங்காத இப்பெரியதேசத்தை உன் கையில் விடுத்துச்செல்கிறேன். அத்துடன் உனக்கு இன்னொரு பரிசும் கொடுக்கிறேன்;" என்று மெல்லக்கூறினான் செங்கிஸ். காலே உணர்ச்சியற்று அவனைப்பார்த்தான்.

"அதுதான் இந்தப்பெண் ஜஹன்னிஸா. என் காதலை நீ உணர்ந்திருக்கமுடியாது, காலே. அது இப்போது லோகதாபங்களையும், சிறு எல்லைகளையும் தாண்டி தெய்வீக மணம் கலந்து நிற்கிறது" என்று உணர்ச்சி ததும்பக் கூறினான் செங்கிஸ்கான்.

காலே மௌனமாக அவனை நோக்கினான். அவன் தீவிர யோசனையிலாழ்ந்திருந்தான் என்று அவனது முகம் அறிவித்தது.

"என்ன யோசனை, காலே, தூரத்தில் அலைக்கும்மாளம் கேட்கிறது. அது புத்துயிர் பெற்று நிற்கிறது. என் முடிவு நெருங்கிவிட்டது, காலே. என் மனம் சாந்தியடைய அவளை ஏற்றுக்கொள், காலே" என்றான் செங்கிஸ்கான். அவனது மார்பு படபடத்தது.

"ஆனால் தங்கள் வாழ்க்கை சாபல்யமடையவில்லையே பெரியப்பா? நீங்கள் விரும்பிய ஸ்பரிசத்தையும், அணைப்பையும் நீங்கள் அடையவில்லை. அதைக்கொடுக்க இதொ நான் காத்திருக்கிறேன்......" என்று உணர்ச்சியுடன் கூறிக்கொண்டே காலேகான், ஜஹன்னிஸையின் கரத்தைப்பற்றி அதைச் செங்கிஸின் கரத்தில் சேர்த்தான். செங்கிஸ்கான் அவளது பூக்கரத்தைப்பற்றி அவளை அணைத்துக்கொண்டான். அவனது கண்ணிலிருந்து இருநீர்த் துளிகள் தப்பி ஓடின. கடலடியில் அளக்க முடியாத ஆழத்தில் சிப்பிகளில் மறைந்துநிற்கும் முத்துக்களைவிட இவைகள் மதிப்பில் உயர்ந்த துளிகளாகவேயிருந்தன.

"இதோ அணைத்துக்கொண்டு விட்டேன், காலே. ஆனால் என் அணைப்பில் இப்போது நிற்பது பொன் மடந்தை ஜஹன்னிஸா அல்ல! குழந்தை ஜஹன்னிஸா!" என்றான் செங்கிஸ்கான். தன் ஹிருதயத்தில் தோன்றியதையெல்லாம் தெரிவித்துவிட்டான்.

காலேகானின் கண்களினின்று நீர்பெருகியோடிற்று. ஜஹன்னிஸை செங்கிஸின் உன்னத ஹிருதயத்தை எண்ணி விம்மினாள். அவளது தலைமயிரைக் கோதிக்கொண்டே செங்கிஸ்கான் பெருமிதத்துடன் கண்களை மூடினான். அப்புறம் அவன் அவைகளைத் திறக்கவேயில்லை. அறையில் மூலையிலிருந்த விளக்கு அணைந்துவிட்டது.

தூரத்தில் சோகஸந்தத்தம் நிறைந்து கொந்தளித்தன பால்கஷின் அலைகள். தேச எல்லைகளைத் தீர்மானம் செய்த அவ்வேரியின் நீலம், நுரை நிறைந்து, வாழ்வின் எல்லையையும் இரைந்து அறைகூவிற்று. தூரத்தே தெரிந்த கூடாரங்களில் ஜனங்கள் நடமாடும் காட்சி தென்பட்டது. நாய்கள் சோர்ந்து படுத்துக்கிடந்தன. அன்றொரு நாள் வந்து சென்ற பிச்சைக்காரன் அதே பாட்டைப் பாடிக்கொண்டு சென்றான். அதன் அர்த்தம் அவ்வேளையில் சரியாகப் பொருந்தியது. கதிரவன் மலைச்சிகரங்களை ஏமாற்றித் தலைநீட்டினான். காக்கைக்கூட்டம் இரைதேடக் கிளம்பிற்று. விஞ்ஞான யோசனை இவைகளுக்கில்லை.

ஜஹன்னிஸையும், காலேகானும் ஒருவரையொருவர் அணைத்துக்கொண்டு விம்மினார்கள். வாசற்படியருகே திரும்பிவந்து நின்ற அரண்மனை 'மௌல்வி'. பெருமூச்சுடன் மறைந்தார். பலகணிகளின் குறுக்கே படர்ந்திருந்த துணித்திரைகள் காற்றடித்து விலகின.

கார்த்திகையன்று

"ஸத்யதாமா"

●

கதிரவன் மலைவாயில் மறையும் தருணம். மேற்கு வானத்தில் தோன்றிய அந்த அந்திச் செவ்வொளி, அன்றுதான் கார்த்திகை தீபம் என்றும், ஆதியில் அந்தப்புனித தினத்தில் தான் ஈசன் ஜோதிப்பிழம்பாய் நின்று தமது ஆதியந்தமற்ற தன்மையை உலகுக்கு விளக்கிக் காட்டினர் என்றும் எடுத்துக் காட்டுவது போல் தோன்றியது. வீதியின் இருபுற வீடுகளிலும் திண்ணையில் வரிசை வரிசையாக வைக்கப்பட்டிருந்த அகல் விளக்குக்கள் நிசி என்னும் அங்கனையின் அழகிய பல் வரிசைகளேபோல் ஒளிவீசின. அணிஅணியாக ஆபரணங்கள் பூண்ட இளம்பெண்கள் புதுப்புடவையின் சலசலப்பு ஓசையுடன் அங்கும் இங்கும் துள்ளிநடந்து அச்சிறுதீபங்களுக்கு எண்ணெய் திரியிட்டும், அணைந்துபோனவற்றை மறுபடியும் பொருத்தியும் வந்தனர். அவர்கள் உள்ளத்தில் பொங்கி எழுந்த ஆனந்த ஒளி அத்தீப ஒளியுடன் ஒன்ருய்க் கலந்து அவர்கள் வதனத்தில் பளிச்சென்று பிரகாசித்தது.

ஆனல் சைலாவின் மனம்மட்டும் இத்தகைய ஆனந்தம் எதிலும் பங்குகொள்ளவில்லை. எல்லோர் வீட்டிலும் தீபம் வைக்கும்போது நாம் மட்டும் சூனியமாக இருக்கலாகாது என்ற எண்ணம்மட்டுமே அவளையும் விளக்குவைக்கச் செய்தது. ஆயினும், "தம்தம் உடன்பிறந்தவர்கள் நன்ருக வாழவேண்டுமென்று வேண்டிக்கொள்ளத்தானே பெண்கள் கார்த்திகைப் பண்டிகை கொண்டாடுகிருர்கள்? ஆனல் நமக்குத்தான் கடவுள் அந்தப்பாக்கியத்தையும் போக்கிவிட்டாரே" என்ற எண்ணம் தோன்ற அவள் மனம், காற்றில் அசையும் அத்தீபசிகையேபோல் நடுங்கியது. ஏதோ பிரமை பிடித்தவள்போல் அந்தச் சுடரைப் பார்த்துக் கொண்டே அசைவற்று நின்றிருந்தாள் அவள்.

"என்ன சைலா! நான் வந்ததுகூடத் தெரியாமல் அப்படி அந்தத்தீபச் சுடரையே பார்த்துக்கொண்டு நிற்கிருயே. அப்படிப்பட்ட வினேதம் அதில் என்ன கண்டிட்டாய்?" என்று யாரோ மடமடவெனப் பேசுவதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள் அவள். அங்கே பக்கத்து வீட்டுப் பங்கஜம் ஒரு தட்டில் இரண்டு அப்பமும் பொரியுருண்டையும் வைத்துக்கொண்டு நிற்பதைக்கண்டதும் "வா! பங்கஜம்! நைவேத்தியம் எல்லாம் ஆயிற்ரு?" என்ருள்.

"இப்பொழுதுதான் முடிந்தது. இதோ இந்தப்புடவையைப் பார்! நன்ருயிருக்கிறதா? நேற்று எங்கள் அண்ணு என் தலைக் கார்த்திகைக்கென்று எடுத்துவந்தார்" என்று பெருமை பிடிபடாமல் சொல்லிக்கொண்டு வந்தவள் சட்டென்று அவள் முகத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டாள். "ஏன் சைலா? ஒரு மாதிரியாக இருக்கிருய்? உடம்புக்கு என்ன?" என்ருள்.

"ஒன்றுமில்லை. உம், தலைவலி சாயங்காலம் தொட்டு வாட்டி எடுக்கிறது" என்ருள் சைலா தன் மனவேகத்தை வெளிக்குக் காட்டாமல்.

பங்கஜம் விடைபெற்றுச்சென்றுவிட்டாள். ஆனல் அவள் கூறிய வார்த்தைகள்மட்டும் சைலாவின் செவிகளைவிட்டு அகலவில்லை. "எங்கள் அண்ணு தலைக் கார்த்திகைக்கு எடுத்தது" என்ற வார்த்தைகள் அவள் சிந்தனைச் சகடத்தை உருட்டிவிட்டன. வானில் தோன்றும் மின்வெட்டேபோல், அவள் மனதிலும் சென்ற கால நிகழ்ச்சிகள் சில பளிச்சிட்டன.

2

புதுப்புடவை உடுத்தி நன்ருக அலங்கரித்துக்கொண்ட சைலா, கூடத்தில் கட்டுக்கட்டாகக்கோலமிட்டுக்கொண்டிருந்தாள். அவள் விரல் நுனிகளிலிருந்து பொங்கிஎழும் சித்திரங்களேபோல் அவள் மனதிலிருந்தும் ஆனந்தம் ததும்பி வழிந்தது. அவள் கண்கள் அவளையுமறியாமல் அடிக்கடி, கூடத்தில் ஒருபுறமாக வைக்கப்பட்டிருந்த வெள்ளிக் குத்துவிளக்கு, ஒரு டஜன் வெண்கல அகல் விளக்குகள், பக்ஷணங்கள் நிறைந்த ஜோடுதவலைகள் ஆகியவற்றில் சென்றன. அதே சமயம் தெருத் திண்ணையில் அவள் மாமியார் அடுத்தவீட்டு அம்மாமியுடன் பேசிக்கொண்டிருந்ததும் அவள் செவிகளில் விழுந்தது. "என்னமோ அம்மா! என் மாட்டுப்பெண்ணுக்கு அப்பா, அம்மா இல்லாத குறையை அவன் வைப்பதில்லை. அவள் தமையன் அனந்தராமனே அவளுக்குத் தாயாகவும் தந்தையாகவும் இருந்து வேண்டியதைச் செய்கிருன். தலைக் கார்த்திகைக்கு என்று புடவை ரவிக்கை, வெள்ளியிலே குத்துவிளக்கு, ஒரு டஜன் வெண்கல அகல் விளக்குக்கள் எல்லாம் சீர் கொண்டுவந்திருக்கிருன். அவன் நூறுஆயுசு நன்ருக இருக்கணும்" என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டிருந்தாள். சைலாவின் உள்ளத்தில் உவகை பொங்கி வழிந்தது. ஆமாம், பிறந்த வீட்டாரையும், அவர்கள் செய்யும்

வரிசையையும் புக்ககத்தார் புகழ்வதைக் கேட்கும்போது எந்தப்பெண்ணுக்குத்தான் ஆனந்தம் மேலிடாது! ஆனால் பாவம், கள்ளமற்ற அவள் வெள்ளை உள்ளம் மனித சுபாவத்தின் தன்மையை முழுதும் அறியவில்லை. இவ்வாறு புகழ்பவர்களின் வாயினின்றே காலம் மாறும்போது இகழ்வுரைகளும் வெளிப்படக்கூடுமென்பதை அவள்தான் எப்படி அறிந்திருக்க முடியும்?

விளக்கேற்றி நைவேத்தியம் செய்து முடித்ததும், சைலா இரண்டுதட்டுக்களில் நைவேத்ய பக்ஷணங்களில் சிறிது எடுத்துக்கொண்டு மாடிப்படிகளில் தாவி ஏறினாள். மாடி அறையில் மைத்துனரும் அத்திம்பேருமாக இரண்டு நாற்காலிகளில் அமர்ந்து ஏதோ அளவளாவிக்கொண்டிருந்தனர். சைலா பட்சண தட்டுக்களை மேஜைமீதில் வைத்துவிட்டு, "அண்ணா! நமஸ்காரம் செய்கிறேன். என்னை ஆசிர்வதி!" என்று கூறி அண்ணனுக்கும் கணவனுக்கும் நமஸ்காரம் செய்தாள். அவளை ஆசிர்வதிக்க அனந்தராமன் எழுந்து நின்றான். ஆனால் அதேசமயம் அடுத்தவீட்டு மொட்டை மாடியிலிருந்து திடீரென்று வந்த சப்தம் அவன் மனதைக் கவர்ந்து இழுத்தது. யாரோ ஒரு கிழவர்

"மாதா நாஸ்தி பிதா நாஸ்தி
நாஸ்தி பாந்தவ ஸோதரா: ।
அர்த்தம் நாஸ்தி கிருஹம் நாஸ்தி
தஸ்மாத் ஜாக்ரத ஜாக்ரத" ॥

என்ற சுலோகத்தை உரக்கப் பாடிக்கொண்டிருந்தது கணீரென்று கேட்டது. அனந்தராமன் ஒரு வேதாந்தப் பித்து. சிறுவயது முதலே அவன் பட்டினத்தடிகள், தாயுமானவர் முதலியவர்களுடைய பாடல் புத்தகங்களைக்கண்டால் விடமாட்டான். அப்படிப்பட்டவனுக்கு இந்தச் சுலோகம் காதில் பட்டதும் கேட்கவும் வேண்டுமா? அப்படியே மெய்மறந்த அவன், "ஆகா! எவ்வளவு அருமையான வாக்கு! வீடும் பொருளுமில்லார்க்குத் தாயுமில்லை தந்தையுமில்லை. அண்ணன் தம்பிகளுமில்லை........" என்று வியாக்கியானம் செய்ய ஆரம்பித்துவிட்டான். பெரியவரின் குரல் மேலும் தொடர்ந்து கேட்டது

'உற்றார் உடன் பிறந்தார் என்றிருக்கவேண்டாம்'
'உடன் பிறந்தே கொல்லும் வியாதி......'
'மாமலையில் பிறந்த மருந்தே பிணிதீர்க்கும்'

சைலாவின் மனம் துணுக்கென்றது. "என்ன அண்ணா இது! ஆசிகூற எழுந்தவன் இப்படித் திடீரென்று வேதாந்தம் பேசுகிறாய்? அந்தக் கிழத்துக்குத்தான் பொழுதுபோகவில்லை என்றால் நீயும் என்ன தாத்தாவாய்விட்டாயா? நீ அண்ணன் இல்லையா! நான் தங்கையில்லையா? ஏன் இப்படி அசம்பாவிதமாகப் பேசுகிறாய்?" என்றாள் படபடப்புடன்.

"இந்தா சைலா! கிழவரை ஏன் வைகிறாய்? உலக இயல்பைப் புத்தகத்தில் கூறியிருக்கிறதைத்தானே அவர் வாசிக்கிறார். அண்ணன் தம்பிகள் எல்லாம் பணத்தளவேதானே! ஏதோ நீ இன்று அண்ணன் அண்ணன் என்கிறாய், சீர் வரிசைகளை எல்லாம் பார்த்த சந்தோஷத்தால். அவன் கையில் பணம் இல்லாது போய் ஏழையானால் அப்போது இப்படி உறவுகொண்டாடுவாயோ என்னமோ யார் கண்டது?" என்றான் அவள் கணவன் சங்கர்.

சைலாவின் முகம் கோபத்தால் சிவந்தது. கண்களில் ததும்பும் நீரைச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு தடதடவென்று கீழே சென்றுவிட்டாள். ஆனால் பாவம் அவளுக்கு என்ன தெரியும்? யார் நாக்கில் சனி இருந்ததோ! அவள் கணவன் கூற்று இவ்வளவு விரைவிலேயே மெய்ப்பட்டு விடுமென்று யார்தான் எதிர்பார்த்திருப்பார்கள்!

3

"அரசமரத்தைப் பிடித்த பிசாசு பிள்ளையாரையும் பிடித்ததாம்" என்பது பழமொழி எனின், ஐரோப்பாவைப் பிடித்த யுத்தம் இந்தியாவையும் வாட்டுகிறது என்பது புதுமொழி எனலாம்.

கருமுகில்கள் திரள்வதேபோல் வானமெங்கும் எதிரி விமானங்கள் படர்ந்து குண்டுமாரி பொழிந்து ஓய்ந்தன. காயம் பட்டவர்கள் ஜாபிதாவில் அனந்தராமன் பெயரும் ஒன்று. விசாகை துறைமுகத்தில் ஒரு குமாஸ்தாவாக இருந்த அவனும் விபத்துக்குள்ளானான்.

செய்தியறிந்ததும் சைலா தன் கணவன் சங்கருடன் பதறி வந்தாள். சங்கரின் வேண்டுகோளுக்கிணங்கி டாக்டர்கள் அனந்தராமனை விசேஷமான கருத்துடன் வைத்யம் செய்தனர். மூன்று நாளுக்குப்பின் அவனுக்குப் பிரக்ஞை வந்தது. ஆனால் அந்தோ!......... குண்டின் அதிர்ச்சியால் அவன் மூளை சிதறிவிட்டது: இனி அது குணமாவது அரிதெனக்கூறி, மேலும் நான்கு நாளுக்குப்பின் அவன் ஆஸ்பத்திரியிலிருந்து விடுவிக்கப்பட்டான்.

சைலாவின் துக்கத்தைக்கண்டு அனந்தராமனைத் தன்னிடமே அழைத்துவைத்துக் கொண்டான் சங்கர். ஏதோ இரக்கத்தால் தூண்டப்பட்டு அவனுக்குத் தேவையானவற்றையும் செய்துகொடுத்தான். மூளைகலங்கிய அனந்தராமன் எப்போதும் ஒரு மூலையிலேயே உட்கார்ந்திருப்பான். அவன் முகத்தில் தவழ்ந்து வந்த புன்னகையும் ஒளியும் குன்றி அசடு வழிந்தது. கண்களில் ஒரு பயம். அடிக்கடி மிரள விழித்து மேலே பார்ப்பான். ஒருவரோடும் ஒன்றும் பேசமாட்டான். அவன் நிலையைக் காணக்காண சைலாவின் கண்களின் நீர் பெருக்கெடுத்தோடும்.

கடிகாரத்தின் சிறிய முள்ளும் பெரிய முள்ளும் நகர்ந்துசெல்வதேபோல், நாட்கள் பல செல்ல வாரங்களும் மாதங்களும் சில கடந்து சென்றன. மாப்பிள்ளை, சம்பந்தி முதலிய மதிப்பிற்குரிய விருந்தினராயினும், ஓரிரண்டு நாள் அதிகம் தங்கிவிட்டால், உபசாரம் வர வரக் குறைந்துகொண்டே வருவது உலக இயற்கை. அதிலும் வேண்டாத விருந்தாளி—மேலும் நோயாளி—என்றால் கேட்கவும் வேண்டுமா? சைலாவைத்தவிர மற்றவர்களுக்கு, வரவர அனந்தராமன் மீதுள்ள சிரத்தை குறைந்துகொண்டே வரலாயிற்று. அதிலும் அவனை வைத்துக்கொண்டிருப்பது ஒரு சுமையாகத்தோன்றத் தொடங்கியது. ஆம், "பழகப் பழகப் பாலும் புளிக்கும்" என்பது அனுபவ வாக்கேயன்றோ?

"என்ன அனந்து! இன்னும் எத்தனை நாள் இருப்பாய்?" என்று கேட்பான் சங்கர். அனந்தராமன் பதிலே சொல்லமாட்டான். மறுபடியும் மறுபடியும் கேட்கும்போது, "ஏன்! எத்தனை நாள் வேண்டுமானாலும் இருக்கிறேனே!" என்ற கபடமற்ற பதில் வரும்.

"எத்தனைநாள் வேண்டுமானாலும் இருப்பாயா? இப்படி ஒரே இடத்தில் இருந்தால் யார் சாதம் போடுவார்கள்?" என்பான் மீண்டும் சங்கர் பச்சையாக.

"ஏன் சைலாதான் போடுகிறாளே" என்று விடையளிப்பான் அனந்தராமன், ஒரு சிறு குழந்தையைப்போல. ஆம், குழந்தையைப் போலத்தான் அவனும்! சிறு குழந்தைகளின் மூளை இன்னும் விர்த்தியடையாதது. பைத்தியங்களின் மூளையோ கலங்கிப்போய்த் தெளிவற்றுவிடுகிறது. பிறரின் கபடங்களையும் சூதுவாதங்களையும் புரிந்துகொள்ளும் சக்தியற்றிருப்பதில் குழந்தையும் பைத்தியமும் ஒன்றுபோலவேதான் என்னும் தத்துவங்களைச் சங்கர் இன்னும் அறிந்துகொள்ளவில்லை போலும்.

கதவின் மறைவிலிருந்து இவர்கள் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருக்கும் சைலாவின் மனது பாகாயுருகும். "ஐயோ மானம் அவமானம் என்று பகுத்தறியும் சக்தியிருந்தால் தன் தமயன் ஒரு கணமேனும் இப்படி உட்கார்ந்து இருப்பானா? ஆனால் உண்மையிலேயே பகுத்தறிவுள்ளவர்களுக்கு இது ஏனோ தெரியவில்லையே!" என்று ஏங்குவாள். பாவம், பேதை அவள் வேறு என்ன செய்யமுடியும்?

அன்று சைலாவின் மாமனாருக்குச் சிராத்தம். அதிகாலை முதலே சமையல் அறையில் மாமியாருடன் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த சைலா ஓடி ஓடிக் காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் மனம் மட்டும் அமைதியற்றுத் தவித்தது. "ஐயோ, காலையில் ஒரு கப் வெறும் காப்பிமட்டும் சாப்பிட்டுவிட்டுப் பட்டினியாகக் கிடக்கும் அண்ணன் என்ன செய்கிறான் என்று போய்ப் பார்க்கக்கூட முடியவில்லையே! போய்ப் பார்த்தால் மடி கெட்டுவிடும் என்று மாமியார் கோபிப்பாளே" என்று உள்ளம் தவித்தாள்.

மணி ஒன்றடித்தது. பிராம்மணர்களும் சாப்பிட்டுவிட்டுத் தாம்பூலம் தரித்துக்கொண்டிருந்தனர். சைலா, அவர்கள் சாப்பிட்ட இடத்தைச் சுத்திசெய்துவிட்டு, தன் கணவனுக்கும் தமையனுக்கும் இலைபோட்டாள். பசியுடனிருந்த அனந்தராமன், இலையைக்கண்டதும் ஒரே பாய்ச்சலாக வந்து உட்கார்ந்துகொண்டான். அதைக்கண்டதும் சைலாவின் மாமியார் மோவாய்க்கட்டையைத் தோளில் இடித்துக்கொண்டபடியே முணுமுணுத்தாள். "பயித்தியமாயிருந்தாலும் பசியாவது தெரிகிறதே" என்ற வார்த்தைகள் சைலாவின் செவிகளைத் துளைத்தன. தன் தமையனை எப்போதும் பைத்தியம், பைத்தியம் என்று சொல்வது அவள் மனதை வதைத்தது. "ஐயோ! ஒரு மனிதன் பணங்காசுடன் நன்றாக இருந்தால் அவனை எல்லோரும் வரவேற்று உபசரிக்கின்றனர். ஆனால் அதே மனிதன் பிணிவாய்ப்பட்டு வறுமைக்குள்ளாயின் உலகம் வெறுத்து ஒதுக்குகிறதே, என்ன கொடுமை?" என்ற எண்ணம் தோன்ற, அவள் கண்களிலிருந்து கண்ணீர் அலையாகப் பொங்கி வழிந்தது.

ஒரு வாரம் சென்றது. ஒரு நாள் பிற்பகல் தூங்கி எழுந்தான் அனந்தராமன். தூக்கத்தில்தான் அவன் ஏதாவது கனாக்கண்டானோ? அவன் கலங்கிய மூளையில்தான் என்ன தோன்றியதோ யார் அறிவர்? திடீரென்று தனது ஓரிரண்டு அழுக்குத்துணிகளைச் சுருட்டி எடுத்து மூட்டையாகக்கட்டி அக்குளில் வைத்துக் கொண்டு அவன் சைலாமுன் வந்து நின்றான். "சைலா! நான் போய் வரட்டுமா" என்றான்.

சைலாவுக்குத் தூக்கி வாரிப்போட்டது. ஒன்றும் புரியாமல் மிரள மிரள விழித்த அவள் "என்ன அண்ணா! இது? எங்கே போகப் போகிறாய்?" என்று கேட்டாள்.

அனந்தராமன் திரும்பித்திரும்பி அதையேதான் சொன்னான். சைலா எவ்வளவோ தடுத்துப்பார்த்தாள். சங்கரும் எவ்வளவோ சொன்னான். ஒன்றும் பயன்படவில்லை. அனந்தராமன் மூட்டையை அக்குளில் இடுக்கிக்கொண்டு வீதியில் இறங்கி மறைந்துவிட்டான். அவன் வாயிலிருந்து வெளிப்பட்ட

"மாதா நாஸ்தி பிதா நாஸ்தி
நாஸ்தி பாந்தவ ஸோதரா:"

என்னும் அடிகள் சிறிது சிறிதாகக் காற்றில் கலந்து மறைந்தது.

ஃ ஃ ஃ

4

சைலா! "என்று யாரோ குதூகலமாகக் கூப்பிட்ட குரல் அவள் சிந்தனைச் சகடத்தை இழுத்து நிறுத்தியது. திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தாள் அவள். அங்கே சங்கரும் ஒரு புது மனிதனும் நின்றுகொண்டிருந்தனர். அப்புது மனிதன் நீண்ட தாடியும் மீசையுமாகக் கம்பீரமாகக் காணப்பட்டான். அவன் முகத்தில் ஒரு திவ்ய ஒளியும் சாந்தமும் பொலிந்தன.

"என்ன சைலா! தெரியவில்லையா! இவன் தான் மூன்று வருடங்களுக்குமுன் போய்விட்ட உன் தமையன் அனந்தராமன். காச்மீரபைராகி ஒருவரின் மூலிகையால் 'குணமாகிவிட்டதாம்" என்று விஷயத்தை விளக்கினான் சங்கர். அதே சமயம் அவள் சொல்வதைக் கேட்டுக் கொண்டே உள்ளே இருந்துவந்த அவன் தாய் "வாடாப்பா வா! உடம்பு தாவலையாயிற்று? ரொம்ப ஸந்தோஷம். உடம்பு குணமாகி பழையபடி ஆகவேணடுமென்று சதா கடவுளைப்பிரார்த்தித்துக் கொண்டிருந்தோம்." என்று முகமன் கூறினாள்.

சைலாவுக்கு உலக இயல்பு ஒருவாறு விளங்கியது. ஆனால் மனிதனின் மனமென்னும் அபூர்வ வஸ்துவின் தன்மை மட்டும் இன்னும் சரியாகப் புரியவில்லை.

—o—

மதுரை நகருக்கு
காவேரி ஸோல் ஏஜண்டு
S. மாரியப்ப கோன்
மதுரை நியூஸ் ஏஜன்ஸி
42, வடக்கு சித்திரை வீதி
மதுரை

JABCO
NEEM SOAP
— is Soap Supreme —

அழுவானேன் கேடு?

கௌரி

●

மதுரம் படுத்துக்கொண்டு விசித்துக் கொண்டிருந்தாள். "பண்ணுவதையும் பண்ணி விட்டு நன்னாயிருக்குடீ படுத்துண்டு அழரது. ஒரு வார்த்தை சொல்லப்படாதாம். ரோஸத்தைப்பாரு. இவ்வளவு ரோஸமிருந்தால் போர இடத்திலே பேர் எடுத்துடலாம் பேர், அழுவானே கேடு" என்று கூடத்தில் வைதுகொண்டிருந்தாள் அவள் தாயார். அவ்வளவு சத்தம் போட்டுவிட்டான் கிட்டு. அல் அசல் எல்லாம் கூடிவிட்டது. ஊர் பரவி விட்டது செய்தி.

"குழந்தை அப்படித்தான் என்ன சொல்லி விட்டது? விரல் விரலாய் இப்படியா அறைவாள் அதற்காக? நன்னாய் இருக்குப்போ" என்று மதுரத்தின் தாயார் ஓய்ந்தபாடில்லை. கிட்டுவும் மதுரத்தின் தம்பிதான்—மதுரம் ஒன்றுக்கும் பேசவும் இல்லை. தலையையும் தூக்கவில்லை.

அன்று மதுரம் நல்ல முகத்தில் விழிக்கவில்லை. இன்னும் பொழுது நன்னாய்ப் பலபலவென்று விடியவில்லை. விழித்துக்கொண்டு விட்டாள். விடியற்காலை சீக்கிரம் எழுந்து வழக்கமே தவிர ஒரு நாளும் நேரம்கழித்து எழுந்திருக்கமாட்டாள். அன்று விழித்துக் கொள்ளும்பொழுதே உடம்பில் சுறுசுறுப்பில்லை. ஒருவிதமான அசதி, மனதில் என்னவோ அசட்டு எண்ணங்கள்—ஆனால் அவள் அதற்கு இடம்கொடுக்கவுமில்லை. "சீ, என்ன சோம்பல்? நாம் சோம்பல்பட்டால் நடக்குமோ" என்று சொல்லிக்கொண்டே எழுந்து விட்டாள். முற்றத்தில் கிடந்தன பத்துப் பாத்திரங்கள் நான்கை 'மளமள'வென்று தேய்த்துவிட்டுக் கரை ஏறினாள். கோலமாவை கையிலெடுத்துக்கொண்டாள். வாசலுக்குக் கோலமிடப்போனாள்.

மதுரம் என்றைக்குமே கோலம் நன்னாய்ப் போடுவாள். முத்துமுத்தாயிருக்கும், கோணல் குறுகல் ஒன்றிருக்காது. அன்றைக்கும் நன்னாய்த்தான் அமைந்திருந்தது. இருந்தாலும் அவள் மனதில் வேலைசெய்துகொண்டிருந்த ஒரு சலிப்பு அவளைச் சற்று ஆட்டியது. மனதில் கொஞ்சம் சந்தேகம் தட்டியது. நின்று தயங்கித் தயங்கிக் கோலத்தை இரண்டு தட்வை பார்த்தாள். "என்ன வேதனை இது?" என்று நினைத்துக்கொண்டே உள்ளே வந்தாள்.

அவள் தாயார் காப்பி போட்டுக்கொண்டிருந்தாள். வழக்கமாய் வீட்டில் எல்லோருக்குமே காப்பி கிடையாது. குழந்தைகள் எல்லோரும் பழையதுதான் சாப்பிடும் வழக்கம். அப்படி ஏதாவது மிச்சமிருந்தால் ஒவ்வொருநாள் மதுரத்திற்குக் கிடைக்கும். ஆனால் அதற்காக அவள் காத்துக்கொண்டு நிற்கமாட்டாள். வேலையைப் பார்த்துக் கொண்டு குளிக்கப்போய்விடுவாள். வழக்கம் போல் காப்பி ஏனங்களை கையில் எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

"இந்தா, ஒருவாய் காப்பி இருக்கு, இதை வாயில் குத்திண்டு போ" என்றாள் அவள் தாயார். மதுரம் அதைச்சாப்பிட்டுவிட்டுப் பாத்திரங்களை எடுத்துக்கொண்டுபோனாள். அதற்குள் "இந்தாடீ விடிஞ்சதும் விடியாததுமாய்க் குளிச்சுட்டு வந்து நிப்பியே நீ, அப்படிக் குளிப்புக்கு ஒண்ணும் அவசரம் வந்துடலே இப்போ, எல்லாம் நான் குளிச்சுட்டு வந்து சமைக்கிறேன். இன்னும் சித்தே கழிச்சுப் பழயதைச் சாப்பிட்டுட்டு குளிக்கலாம்—" என்றாள். மதுரம் நின்றாள். ஏன் நித்தியம் சமைக்கும் வழக்கம்தானே. என்ன காரணம் வேண்டாமென்கிறாள்? சற்று அவளுக்கும் விளங்கவில்லைதான்.

"ஏம்மா வேண்டாங்கறே? வேறே எங்கேயாவது போகணுமா என்ன?" என்றாள்.

இதென்ன பெரிய குற்றம்? அவள் தாயாருக்குக் கோபம் வந்துவிட்டது உடனே.

"காலங்காத்தாலே பன்னிப் பன்னிக் கேழ்வை கேட்டையானால் தெரியுமா? இப்படித்தான் குழந்தைகள் குழந்தைகள் மாதிரி இல்லாவிட்டால் எல்லாக்காரியமும் குட்டிச் சுவராய்ப் போகிறது. குளிச்சுட்டு பொட்டியிலிருந்து அந்தப் பச்சைப்புடவையை எடுத்துக்கட்டிக்கோ" என்று கடிந்து சொன்னாள். மதுரத்திற்குச் சற்று வருத்தமாய் இருந்தது. அவளா இப்படி அசட்டுப் பிசட்டென்று இருப்பவள்—அதுவும் எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். முதல் ஏதோ கேட்டாளே ஒழிய, உடனே தாயார் சொன்னதிலிருந்து விஷயம் சட்டென்று விளங்கி விட்டது. ஒரு வருஷமாய் இந்த அனுபோகமும் உண்டு. ஆனால் முன்னாடி வீட்டில் நடக்கும் சச்சரவுகளிலிருந்து விஷயம் சற்று முந்தியே தெரிந்திருக்கும். இப்பொழுது இதுவரையிலும் அப்படித் தெரியாததுதான் பிசகு. மனதோ ஏதோ வேதனை பிடித்துக்கொண்டிருக்கிறது. அதோ பொழுது விடிந்ததும்

விடியாததுமாய் முகத்தைக் காண்பித்தால் எப்படி இருக்கும்? இதை முன்னாடியே சொல்லியிருந்தால் என்ன முழுகிப்போய் விடும்? இதை நினைக்கும்பொழுது அவள் வாயும் பேசாமலிருக்கவில்லை. "ஏம்மா எனக்கென்ன ஜோஸ்யமா தெரியும்? இதற்கு என்ன இவ்வளவு கோபித்துக்கொள்கிறே?" என்று கேட்டுவிட்டாள். கேட்கவேண்டுமா? "ஸரி, ஸரி; தர்க்கம் பண்ண ஆரம்பிச்சுட்டயோன்னோ? உருப்புட்டாப்போலேதான். வேலை கிடக்கிறது தலைக்கு மேலே, ரயிலோ எட்டுமணிக்கு. குட்டிச்சுவராய்ப்போன தர்க்கம்! இப்படி தர்க்கம் பண்ணிண்டு சந்தியிலே நிக்கலாம் நாளைக்கு" என்று பெரிசாய்ச்சத்தம் போட ஆரம்பித்துவிட்டாள். "என்ன சத்தம்" என்றார் ராஜமய்யர் கூடத்திலிருந்து. மதுரம் வாயைத் திறக்கவில்லை. வெளியே நழுவி விட்டாள்.

•

ராஜமய்யர் எளிய ஸ்திதியில் இருப்பவர்தான். ரொம்ப ஸம்ஸாரி. மூன்று பெண்களுக்குக் கல்யாணமாகிப் புக்கம் போய்விட்டார்கள். நான்காவதுதான் மதுரம். கல்யாணத்திற்கு நிற்பவள். இதற்கடுத்தாற்போல் ஐந்தாறு குழந்தைகளும் இருந்தார்கள். அதற்காக அவர் மூன்றுபெண்களையும் செலவுசெய்யாமல் கொடுக்கவில்லை. இருக்கும் நில புலங்களை ஆதாரமாய் வைத்துக்கொண்டு கொஞ்சம் ரொக்கம் எழுப்பினார். ஒவ்வொரு மாப்பிள்ளைக்கும் ஆயிரம் ரூபாய் ரொக்கம் கையில் கொடுத்தார். அவர் நிலைமைக்கு இது அதிகம் என்றுதான் எல்லோரும் சொன்னார்கள். ஆனாலும் நன்றாய் இருக்கவேணுமே? அதைத் தான் அவர் பார்த்தார். இப்பொழுதும் அதேதான். "ஒரு ஐந்நூறு ரூபாய் போனாலும் போகட்டும். மதுரத்திற்கு இன்னும் ஒரு நல்ல இடமாய்ப்பார்க்கணும்" என்று சொல்லிக்கொண்டார். அவளிடம் அவருக்கு ஒரு அலாதி விச்வாஸம்தான். ஆனால் அவருடைய சம்சாரம் இதற்குக் குறுக்காய் நின்றாள்.

"இந்தக் குடித்தனச் சள்ளையிலேதான் மூணு பொண்ணையும் குடுத்தாச்சே? நானும்தான் வந்து சந்தியிலே நிக்கறனே? அவளையாவது ஒரு நல்ல இடம் பார்த்துக் கொடுக்கப் படாதோ? பத்துரூபாய்ச் சம்பாதிச்சாலும் சரி, ஒரு உத்தியோகம் பண்ணறவனுக்குத் தான்கொடுக்கணும்" என்று ஒரு காலால் நின்றாள். அவருக்கும் இப்படிப் பார்த்து அலுத்துவிட்டது.

"என்னடீ, என்னமோ கிடந்து அடித்துக் கொள்கிறாய்? உத்தியோகஸ்தனும் ஆச்சு எல்லாம் ஆச்சு. இரண்டுநாள் கீழே உட்கார்ந்தால் சோற்றுக்கு வழியில்லை. விறைக்கிறான்கள் கிடந்து. இரண்டாயிரமாம் மூவாயிரமாம்! நாளைக்குப் பணத்தை ஏப்பம் விட்டுட்டு எல்லாம் வந்து நிற்கும் இங்கே?" என்று ஒரு அடி போட்டுவிட்டு அந்த யோசனையை விட்டுவிட்டார்.

வீட்டில் ஆறுமாதகாலமாய் இப்பேச்சு நடந்தால் குழந்தைகளின் செவியில் விழாமலிருக்குமா? மதுரமும் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டேதான் இருந்தாள். அவள் மனதிலும் ஏதாவது தோன்றாமலாபோய் விடும்? ஒரு வார்த்தை யாராவது அவ்ளையும் கேட்டால் ஒரு சமயம் சொல்லலாம். அவளைக் கேட்கிறவர் யார் அவளால் என்ன செய்ய முடியும் பாவம்! எப்படியாவது போகட்டுமென்று இருக்க எப்படித் துணியும். அவர்கள் வேணுமானால் அவளைக் கேட்கவில்லை. விஷயம் முழுவதும் அவளைச் சம்பந்தப்பட்டது தானே? வாயைத்திறக்கவோ வழி இல்லை. சத்தம் அதிகமாய் இல்லாவிட்டால் மறைவிலாவது ஒளிந்துகொண்டு பேச்சைக் காதில் வாங்குவாள். சத்தம் வலுத்ததோ அங்கு நிற்கவேமாட்டாள், போய்விடுவாள் இரண்டாம் கட்டிற்கு.

கடைசியில் ராஜமய்யர் ஒரு வரனைத் தன் மனதில் திட்டம்போட்டு முடித்தார். ஸொத்தோ ஸ்வதந்தரமோ, ஜாதகமோ எல்லாம் பார்த்து முடித்தாய்விட்டது. அவன் தான் எட்டு மணி வண்டியில் பெண் பார்க்க வரப்போகிறான்.

வீடு சுத்தமாய் மெழுகிக் கோலமிடப்பட்டிருந்தது. ராஜமையர் யோக வேஷ்டியுடன் பையனை வரவேற்கத் தயாராய் இருந்தார். மாப்பிள்ளைப் பையனும் பழைய நாள் மாதிரி "இஷ்கா, புஷ்கா" என்று இருக்கவில்லை. குறித்த மணியில் 'டாண்' என்று வந்து சேர்ந்தான். தரையில் ஜமக்காளம் விரிக்கப்பட்டிருந்தது. அதில் உட்காராமல் வந்து ஊஞ்சற் பலகையில் உட்கார்ந்தான். அதற்குக் காரணமும் அவனைப்பார்த்தவுடன் தெரிந்தது. ராஜமையர் ஒரு தடவை உள்ளே சென்று தலையை நீட்டிவிட்டித் தாமும் வந்து ஊஞ்சற் பலகையில் உட்கார்ந்தார். வாசலில் விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகளும் ஓடிவந்து கூடினார்கள். சமையலறையிலிருந்து ஒரு தடவை தலையை வெளியே நீட்டினாள் ராஜமையரின் ஸம்ஸாரம். உடனே காப்பி பலகாரம் எல்லாம் காட்சியளித்தன. ஒரு கனைப்பு, ஒரு சிரிப்பு, இவைகளுடன் உபசார வார்த்தைகளும் முடிந்தன. இனி வரவேண்டியவள் பெண்தான். ராஜமையர் உள்ளே வந்தார். "மதுரம், இப்படி வந்து இவாளை நமஸ்காரம் பண்ணிட்டுப் போம்மா" என்றார் நயமாய்.

நெற்றியில் தம்படி அகலம் பளீரென்ற குங்குமப் பொட்டும் அரையில் பச்சைப் பசுக்குப்புடவையும், மதுரம் பளீரென்றுதான் இருந்தாள். நல்ல சிகப்பு என்று இல்லாவிட்

டாலும் முகத்தில் நல்ல களை. அதிகமாய் வளர்த்தி என்றும் சொல்லமுடியாது. அதற்காக நறுங்கலும் இல்லை. காரியமா? காரியக் கப்பல்தான். பம்பரமாய்ச் சுற்றுவாள். பாட்டிற்கும் குறைவில்லை. கண் கண்டதைக் கை செய்யும், அவ்வளவுதானே? அதனால்தான் ராஜமையருக்கு அவளிடம் ஓர் அலாதி விச்வாஸம்.

தாயார் வந்து தலைப் பூவைச் சரிப்படுத்தி விட்டாள். மதுரம் புடவையைச் சரிபடுத்திக் கொண்டாள். அவள் உள்ளத்தில் நிறைந்திருந்த குழப்பமும் கவலையும் அவ் விழிகளின் வழியே வெளிவந்தன.

“பயப்படுவானேன்? புலியா, கரடியா? நீ பாட்டில்போய் நமஸ்காரம் பண்ணிட்டு வா, மஞ்சு! நீயும் போடீ அவளோடே” என்றாள் அவள் தாயார். மதுரத்திற்கு இவ்வார்த்தைகள் சற்று தைர்யத்தையே கொடுத்தாலும் அதில் ஒரு குறை இருக்கத்தான் இருந்தது.

“எல்லாம் இவர்கள் காரியத்தையே நினைக்கிறார்களே ஒழிய என்னைப்பற்றி ஏதாவது சிந்திக்கிறார்களா?” என்ற எண்ணம் அவள் மனதில் எழாமல் இருக்கமுடியவில்லை.

“அங்கேயே உட்கார்ந்து பாடணுமாம்மா?” என்றாள் மறுபடியும்.

“பாடச் சொன்னால் பாடறது” என்றாள் தாயார்.

எல்லாம் ஒரு அரைமணி நேரம்தான். பெண் பார்த்துப் பாடச்சொல்லிக் கேட்டு எல்லாம் முடிந்துவிட்டது. வந்தவர்களை அனுப்ப ராஜமையர் ரயிலடிக்குப் போய்விட்டார்.

மதுரம் கூடத்திற்குப் போய்விட்டு வந்தவள்தான். அப்படியே ஒன்றும் தோன்றாமல் ஒரு மூலையில் உட்கார்ந்துவிட்டாள். அவள் மனதில் எண்ண அலைகள் மோதிக்கொண்டிருந்தன. தகப்பனார் பேரில் அவளுக்கு அஸாத்தியக் கோபம்தான் வந்தது. “எது செய்தாலும் என்னைக் கொஞ்சம் யோசனைசெய்து செய்கிறாரா? எதில் போனாலும் இதே அசட்டுத்தனம்தான். இதுவரையிலும் தான் என்னை ஒரு வார்த்தை கேட்கவில்லை, வந்தவரையாவது தனியாய் உட்கார வைக்கப்படாதா? பார்த்தாவது என்மனதை நிச்சயம் செய்து கொள்ளலாமோ இல்லையோ? எவனையோ கூட வந்தவனையும் பக்கத்தில் உட்காரவைத்து விட்டு நின்றால் நான் எப்படித் தெரிந்து கொள்ளமுடியும்?” என்று அவள் நினைக்கும் பொழுது கோபம் எப்படி வராமலிருக்கும்? ஊஞ்சற் பலகையில் கொத்தவரைக்காய் வற்றல் மாதிரி தேசலாய் கன்னங்கரேலென்று ஒருவர் உட்கார்ந்திருந்தார். நல்ல சிகப்பாய்க் கனத்த் சரீரமுடையவர் மற்றொருவர் உட்கார்ந்திருந்தார். ஆயிரம் ஸங்கோசமிருந்தாலும் அவளுடைய ஆசை தெரிந்துகொள்ள வேண்டுமென்று ஒரு தடவை பார்க்கத்தான் பார்த்தாள். எப்படி என்னத்தைத் தெரிந்து கொள்வது? நமஸ்காரம் செய்தவுடன் அங்கு வேறென்ன வேலை? அப்பா ஏதாவது சொல்லுவாரோ என்னமோ என்று அவர் முகத்தையும் தான் ஒருதடவை பார்த்தாள். “ஸரீ, உள்ளே போய் உட்கார்ந்து ஒரு பாட்டுச் சொல்லு, கேட்கணுமாம்” என்றார் அவர். மதுரம் வேறு என்னதான் செய்யமுடியும். மறுபடியும் அவளுடைய கண்கள் அவ்விடத்தை ஒருமுறை சுழன்று வந்தன. உட்கார்ந்திருந்தவர் இருவருக்கும் சுமார் ஒரே வயதிருக்கலாம். இதில் யாரென்று அவள் நினைத்துக்கொள்வது? அடீசச்வரா, என்று உள்ளே வந்துவிட்டாள். பிறகு என்ன பாடினாளோ என்ன நடந்ததோ அவளுக்கே அவ்வளவு நன்றாய்த் தெரியாது. மூலையில் வந்து உட்கார்ந்தவள்தான். எவ்வளவு நாழிகையாய்விட்டதோ அதுவும் தெரியாது. “என்னடீ செய்யறே மதுரம்? அப்படியே உட்கார்ந்துட்டயே போய், அடுப்பங்கரையே பார்த்துண்டான்னா நான் எதையாவது கவனிக்கலாம்” என்ற சத்தம் கேட்டவுடன்தான் அவள் சுய நினைவு வந்தது. “ஆமாம், எப்பொழுது பார்த்தாலும் இதுதான். எல்லாம் அவரவர்கள் காரியம்தான் பிரதானம். மற்றவர்களைப்பற்றி என்ன கவலை” என்று முணுமுணுத்துக்கொண்டே எழுந்து வந்தாள்.

அதற்குள் கூடத்தில் நடந்துகொண்டிருந்த சம்பாஷணை அவள் செவியில் விழுந்தது. முணுமுணுப்பு சட்டென்று தன்னால் நின்றது. கதவோரமாய் நின்றுகொண்டு காது கொடுத்தாள். கவலையினாலும் கோபத்தினாலும் அவள் மார்பு படபடவென்று துடித்துக்கொண்டிருந்தது.

ராஜமையர் பேசிய ஸ்தாயியிலிருந்து பழம் என்றுதான் தோன்றியது அவளுக்கு.

ராஜ:- ஸ்ரீ பிள்ளை பெண் பிடிக்கிறதென்று சொல்லிவிட்டான். இனிமேல் நாம் சொல்லவேண்டியதுதான். நீ நன்றாய்ப் பார்த்துட்டயோ இல்லையோ பையனை?” இவ்வார்த்தைகளைக் கேட்டதும் மதுரத்திற்கு ஆத்திரம் பொத்துக்கொண்டுதான் வந்தது. “எல்லாம் நீங்க பார்த்துட்டேளோ இல்லையோ? வேறு யார் பார்க்கணும்” என்றுதான் சொல்லும்படி இருந்தது அதற்குள்.

“ஆமாம், மாப்பிள்ளே யார்? சற்று சேப்பா இடுப்பிலே ஜரிகை வேஷ்டி கட்டிண்டு இருந்தானே அவன்தானே?” என்றாள் தாயார்.

“ஆமாம், அவனேதான். பார்த்தயோன்னோ? நல்ல சிகப்பு—குணமா தங்கக்கம்பி. அவ்வளவுதானே—மேலே ஒன்றுமே யோசிக்கவேண்

டாம். வேண சொத்துக் கிடக்கு—உனக்கு என்ன தோன்றுகிறது சொல்லு? ஸரீன்னு சொல்லிவிடலாமோன்னோ?

தாயார்:-ஸம்மதமில்லாமல் என்ன? பையன் கொஞ்சம் பெரும்பாடியாக இருக்கானேன்னு தான்—வயஸூம்...............

ராஜு:— பார்த்தாயா இதுதானே உன்னிடம்? இப்படீன்னு அப்படீங்க்றது. அப்படின்னு இப்படிங்க்றது. ஒருவழியும் போகவிடமாட்டே—பெரும்பாடியா இருந்தால் என்ன? அப்படித்தான் இருந்தான் அடுத்தாத்து சுப்பையா? இப்பொழுது எல்லாம் ஸரியாய்ப் போய்விடலையோ? மதுரத்துக்கு இப்போ இரண்டாயிரரூபாயில்தோடு வாங்கிப்போடத் தயராய் இருக்கான். குழந்தையை திவ்யமா வைத்துக்வொள்வான். நமக்கு வேறே என்ன வேண்டும்?

தாயார்:— ஸரீ, உங்களுக்குச் சம்மதம்னு எனக்கும் சம்மதம்தான். என்ன சொல்லக் கிடக்கு? அவாளிடமும் சொல்லிவிடுகிறது என்று ஏதோ ரகசியமாய் பேச ஆரம்பித்தாள்.

நின்றுகொண்டு கேட்டுக்கொண்டிருந்த மதுரத்தின் தலையில் இவ்வார்த்தைகள் ஓர் பேரிடிபோல் விழுந்தன. அவளுடைய ஸந்தேகம் தீர்ந்தது. அகத்தில் இருள் வந்து சூழ்ந்தது. வேகமாய்ப் பின் கட்டிற்குச்சென்றுவிட்டாள். அவளுடைய எண்ணத்தை யாரிடம் சொல்வது? இதற்கா இவ்வளவு வர்ணனை என்று நினைக்கும்பொழுது அவள் உள்ளத்தில் துக்கம் கரைபுரண்டு ஓடியது. அவள் அகக்கண் மூன்பு இரு உருவங்கள் வந்து நின்றன. ஒன்று பரங்கிப்பழம்போன்ற பளபளப்பான தடித்த சரீரம், தலையில் செங்காவிபோல் கட்டுக்குடுமி, காதில் சுண்டைக்காய் அளவு வெள்ளைக் கடுக்கன், வியர்வையினால் நனைந்த வெள்ளைச்சட்டை. இவைகளுடன் தடித்து உயர்ந்த ஒரு தோற்றம். இதுதான் இன்று பார்த்தது. மற்றொன்று பால் போன்ற இளம் முகம், தலையில் சுருண்ட கிராப், நாகரீகமான உடை அணிந்த கட்டான அழகிய தோற்றம் — இது ஆறு மாதங்களுக்கு முன்பு அவள் பார்த்தது. ஒன்றை அவளால் புறக்கணிக்கமுடியவில்லை. ஒன்றை அவளால் நினைக்கமுடியவில்லை. மேன்மேலும் பலவிதமான எண்ணங்கள் எழஎழ அவளால் தாங்கமுடியவில்லை. யாரிடமாவது தன் மனதைச் சொல்லி அழவேணும் போலிருந்தது. யாரிடம் போய்ச் சொல்வது? அப்படியே தூணோடு தூணைச் சாய்ந்துகொண்டு உட்கார்ந்திருந்தாள். கண்களில் கண்ணீர் நிறைந்து தேங்கிக்கொண்டிருந்தது.

அப்பொழுது இதுவரையில் கூடத்தில் நின்றுகொண்டிருந்த அவளுடைய தம்பி கிட்டு அவளிடம் ஓடிவந்தான். மதுரத்திற்கு ஒருவரையும் பார்க்கவும் பிடிக்கவில்லை, பேசவும் பிடிக்கவில்லை. அதுவும் கிட்டு அவ்விடம் வந்தது கட்டோடு பிடிக்கவில்லை. கோபத்தோடு அவனை ஒரு முறை பார்த்தாள். வந்தவன், "அக்கா, அத்திம்பேர் உனக்கு இரண்டாயிரம் ரூபாயில் வைரத்தோடு வாங்கிப்போடப்போறாராம் தெரியுமா?" என்று அவள் காலைக்கட்டிக்கொண்டான். இவ்வார்த்தைகள் மதுரத்திற்குப் புண்ணில் கோல் பட்டதுபோலிருந்தது. துக்கமும் ஆத்திரமும் பொங்கி வந்தன. அவனும் பேசாமல் இருந்து தொலைக்கக்கூடாதா?

"எல்லாம் உங்க இஷ்டம்தானே? என்னை யார் லக்ஷியம் செய்கிறார்கள்? போடா" என்று அவன் முதுகில் படேரென்று ஓங்கி ஓர் அறை அறைந்தாள். அவள்பேரிலா பிசகு? அவளுக்கிருந்த ஆத்திரம் கிட்டுவின் முதுகில் கைகையாய் பதிந்துவிட்டது. அவ்வளவுதான்.

கிட்டு போட்ட சத்தத்தில் வீடே கிடுகிடுத்துவிட்டது. கூடத்தில் பேசிக்கொண்டிருந்தவர்களும் ஓடிவந்துவிட்டார்கள்.

"அப்படி அறையும்படியா குழந்தை என்னத்தைடீ சொல்லிவிட்டான்? உன்னோடே யாரானும் பேசலாமோ இனிமே? இன்னும் பேசி முடியவில்லை. வந்துவிட்டது இப்பவே ராங்கியும் இதுவும். ஏது. ஏது, காதுலே வேறே வைரத்தோடும் ஏறி அந்தஸ்தும் வந்தூடுத்துன்னு அதுவேறே இருக்கு" என்று அடுக்க ஆரம்பித்தாள் தாயார்.

"ஆமாம் வைரத்தோடு" என்றாள் மதுரம். அதற்குமேல் அவளால் பேசமுடியவில்லை. அவளுடைய துக்கத்தைக் கொட்ட எது சாக்கு என்று காத்துக்கொண்டிருந்த உள்ளம் படேர் என்று வெடித்தது. படுத்துக்கொண்டு விசிக்க ஆரம்பித்தாள். "இந்த வார்த்தை சொல்லப் படாதாம். இதற்கு அழுவானேன் கேடு" என்றாள் தாயார். மறுபடியும் அழுவானேன். என்றால் வேறு என்ன செய்வாள் பாவம்? அதுகூடவா அவளுக்குப் பாத்தியமில்லை?

உள்ளத்தின் ஒளி

கே. சுந்தரம்மாள்

●

குடத்தில் ஜலத்தை மொண்டு இடுப்பில் வைத்துக்கொண்டு திரும்பினாள் பத்மா. அடுத்த படித்துறையில் நின்றுகொண்டிருந்த ராஜேச்வரியைப் பார்த்ததும் நின்றுவிட்டாள்.

"ராஜேச்வரி! எங்கே போகப்போகிறாய்? அலங்காரம் பலமாக இருக்கிறதே?" என்றாள்.

"இன்று டாக்கிக்குப் போகப்போகிறோம்" என்றாள் ராஜேச்வரி.

"என்ன? டாக்கியா?" என்று ஆச்சரியத்துடன் அகல விழித்தபடி கேட்டாள்.

"என்ன ரொம்ப ஆச்சரியமாகக் கேட்கிறாயே? நீ பட்டணத்தில் வளர்ந்தவளா?" என்றாள் ராஜேச்வரி.

"ஆமாம் எனக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது. உன் மாமியார் சம்மதித்தாளா? இவ்வூரில் அவ்வழக்கம் உண்டா? யார் யார் போகப்போகிறீர்கள்?"

"வழக்கம், பழக்கம், எல்லாம் நம் கைக்குள் தானிருக்கிறது. நாங்கள் ஜோடி தான் செல்லுகிறோம். ஐந்துமைலானாலென்ன? ஜோரான இரட்டைமாட்டு வண்டியிருக்கிறது. மாமியார் சொல்லுவது என்ன? எல்லாம் பிள்ளைகள் இருக்கும் தோரணையிலிருக்கிறது."

"அதென்னமோ, எனக்கு ஒன்றும் நடக்காது" என்று நீண்ட பெருமூச்சுவிட்டாள்.

"ஏன் நடக்காது? நீ பி. ஏ. பட்டதாரியாக இருந்தும் அடிமைபோல் நடந்து சிறைவாசம் செய்கிறாய். வாழ்க்கைப்பள்ளியின் படிப்பு உனக்குப் போதாது. புருஷன் உன் சொற்படி வரச் செய்யமுடியவில்லை. பயந்து சாகிறாய். உன்னால் எங்களுக்குக் கூட டோஸ் கிடைக்கிறது—'பத்மாவைப்பார். படித்த பெண்ணாக இருந்தாலும், எவ்வளவு அடக்கமாக வீட்டுவேலை செய்கிறாள். உங்களைப் போல் அகமுடையானைச் சுற்றிக்கொண்டு அலைகிறாளா? மரியாதையில்லாமல், அவர்கள் பேசியதை நாங்கள் பார்த்ததே கிடையாது" என்கிறார்கள். இது எப்படி இருக்கிறது? சிந்தித்துப் .பார்த்தால், "உன்மேல் உன் புருஷனுக்கு அன்பில்லை" என்றே எண்ண வேண்டியிருக்கிறது. இல்லையேல், அழகு, படிப்பு, இவையுள்ள மனைவி கிடைத்திருக்கும்பொழுது, அவனுக்குள்ள பணத்திற்கு உன்னை எவ்வளவு மேன்மையாக நடத்தலாம்? வேலைக்காரிபோல் நடத்துகிறான். அம்மாவின் திருப்தியே தனது வாழ்வின் லக்ஷ்யம் என்றிருக்கிறான். என்னிடத்தில் அளவற்ற அன்பு வைத்திருப்பதினால்தான், ஒருவர் வார்த்தையையும் அவர் சட்டை செய்வதில்லை. உட்கார்ந்து நினைத்துப்பார், உனது நிலைமை விளங்கும்" என்று ஓர் குட்டிப் பிரசங்கம் செய்தாள்.

"என்னமோ நீ சொல்லுகிறாய், கொடுத்து வைத்ததுதான் கிடைக்கும். அன்பை நாம் புகுத்தமுடியுமா? அவரவர் விதி" என்றாள்.

"விதி! என்னவிதி! மதியைக்கொடுத்தால் தானே விதி வருகிறது. முயற்சிசெய், இகழ்ச்சி அடையமாட்டாய். எனக்கு நாழிகையாய் விட்டது போகிறேன்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே சென்றுவிட்டாள்.

பத்மாவும் உள்ளே சென்றாள். அவரவர் விட்டின் பின்பக்கத்தில் படித்துறையாதலால் "நாட்டுப்பெண்கள் சம்பாஷணை" அவ்விடம் நடைபெறுவது வழக்கம்.

பத்மா போகும்பொழுது நிர்மலமாகவிருந்த ஹிருதயாகாசத்தில், சஞ்சலத்தின் புயலும் மேகமும் அலைக்கத்தொடங்கின வரும்பொழுது.

பத்மா பிறந்து வளர்ந்தது சென்னைப்பட்டணமானாலும், அவள், "வீட்டைவிட்டால், பள்ளிக்கூடம், பள்ளிக்கூடம் விட்டால் வீடு" இதைத் தவிர நாலு இடங்களுக்குப்போய் இஷ்டப்படி திரிந்துவிட்டுவர அவள் பெற்றோர் இடமளிக்கவில்லை. தோழிமார்கள் புஸ்தகப்புழுவென்ற நாமகரணம் கூடச் சூட்டினார்கள். என்ன சொன்னாலும் நாலுபேருடன் அரட்டையடிக்கும் விவகாரத்திற்குச்செல்லமாட்டாள். அதனால், காதல், ஊதல், என்ற விவகாரத்தின் கையில் அவள் சிக்கவில்லை. தனது தமக்கைமார்களைப்போல் பெற்றோர் பார்த்துத் தேர்ந்தெடுக்கும் கணவனையே நாம் ஏற்றுக்கொள்வது கடமை என்ற எண்ணத்தினாலேயே பி. ஏ. படித்துவிட்டுக் கிராமத்தில் பெற்றோருடன் சுக காலக்ஷேபம் செய்யும் ரகுபதியை, அவள் தகப்பனார், வாழ்க்கைத் துணைவனாகத் தேர்ந்தெடுத்தபொழுது யாதொரு ஆக்ஷேபமும் சொல்லவில்லை.

பத்மா புக்ககம் வந்து ஒரு வருஷமாகிவிட்டது. 'படித்தபெண் அடக்கமாக இருக்காது' என்று வழங்கும் வசைமொழியைப்

பொய்யாக்கவேண்டும்—என்ற எண்ணத்துடன் யாவரிடத்தும் பணிவாக மிக்க கவனத்துடன் நடந்துவந்தாள்.

ஆனால், அவள் வீட்டில் ஸஹோதர ஸஹோதரிகள் நடத்தும் தாம்பத்தியத்துக்கும், தனது கற்பனை உலகில் கண்டுகொண்டிருந்த தனது தாம்பத்ய வாழ்க்கைக்கும் இப்பொழுது ரகுபதியும் தானும் நடத்தும் வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அவள் மனம் ஏமாற்றத்தையும் சஞ்சலத்தையும் அடைந்தது.

“ரகுபதி பெற்றோருக்கு ஏகபுத்ரனாகையால், தந்தையின் பக்கத்திருக்கவேண்டும், அவரும் கிராமத்தை விட்டு வரமாட்டார்” என்ற காரணத்தினால் உத்யோகம் தேடாமல் கிராம வாசம் செய்தானே தவிர அவன் பொழுதை வீணாக்குவதில்லை. “கிராம புனருத்தாரணம்” என்ற வாக்யத்தின் உண்மையை நிலைநாட்ட, வாசகசாலை, பெண்கள் பள்ளிக்கூடம், கைத்தொழிற் சாலை, தொண்டர் படை, இவைகளெல்லாம் ஏற்படுத்தி, எல்லாவற்றையும் தானே முன்நின்று கவனிப்பான். அதனால் சாப்பிடும் நேரம், இரவு படுக்கை, இந்தச் சமயங்களில்தான் வீட்டில் தங்குவான், மற்றப்படி அவசியமில்லாவிடில் வீட்டில் தங்க மாட்டான்.

சென்னைமாநகரம்போன்ற இடங்கள்மாதிரி ஜோடியாக வெளியே போவதும், எந்த விஷயத்திற்கும் மனைவியே பக்கத்தில்வந்து நிற்கவேண்டும் என்றவைகளெல்லாம் இல்லாவிடினும் ஓய்வு நேரங்களில்கூட சற்றுச் சந்தோஷமாகப் பேசுவதில்லையே, மாமியாரே தனக்கு வருவதற்கு ஸௌகரியமில்லை பத்மாவைக் கூட்டிக்கொண்டு போய்விட்டுவா என்று சொன்னாலும்கூட, “நீ பார்க்காததை அவள் மாத்திரம் பார்க்கவேண்டும் என்பது என்ன? எல்லாம் நீ போகிறபோது போனால் போதும்” என்று சொல்லிவிடுகிறாரே; இது என்ன? அவருக்கு நம்மீது அன்பில்லையோ?” என்று நினைப்பாள். பிறகு அன்பு இல்லை என்பதற்கும் என்ன ஆதாரம் இருக்கிறது? தேடிப் பார்த்தால் ஓர் அரிய விஷயம் தவிர வேறொன்றும் தோன்றவில்லை. அன்பு உண்டு என்று தெளியவும் முடியவில்லை. இந்தப் போராட்டத்தில், வெற்றி காணாமல் திகைக்கும் சமயம் ராஜேச்வரியின் வார்த்தைகள், ஒரு முடிவிற்கு வர ஹேதுவாயின.

இரண்டு நாட்களாகவே, அவளுக்குச் சற்று இருமலும் ஜலதோஷமுமாக இருந்தது. மாமியார் கஷாயம் வைத்துக்கொடுத்தாள். அன்று, ஈரவிறகுப்புகை தாங்காமல் தலைவலி வேறு மண்டையை உடைக்க ஆரம்பித்தது. வேதனை மிக்க ஹ்ருதயத்தில் ஓர் துணிவு தோன்றினது. இன்று இரவு இதைப்பற்றிக் கணவனிடம் கேட்பது. அவன் தகுந்த காரணம் சொல்லாவிடில், அவளைப் பிடித்தமான பெண்ணை மணந்துகொள்ளச் சொல்லிவிட்டுத் தான் உத்யோகம் ஏற்கச் சென்றுவிடுவது என்ற முடிவிற்கு வந்தாள். மறுநாள் முக்யமான மீட்டிங்கில் பேசவேண்டிய விஷயங்களைப் பற்றி மிக்க கவனமாக எழுதிக்கொண்டிருந்தான் ரகுபதி. அதனால் பத்மா வந்து கால்மணி நேரமாகப் பக்கத்தில் நின்றிருப்பதைக்கூட அவன் அறியவில்லை. உடம்பின் நிலைமை நிற்க முடியவில்லை. மனதின் நிலைமை பொறுமையைக் கடந்துவிட்டது.

“பால் ஆறிப்போகிறதே” என்றாள் சலிப்பாக.

“அதை வாங்கிச் சாப்பிட்டுவிட்டு, மறுபடியும் எழுதத் தொடங்கினான். அதிகமாகக் காற்றை உட்கொண்ட பலூன் வெடிப்பது போலக் கவலையின் குமுறல் வார்த்தைகளாக வெடித்தன. “இந்த எழுத்து வேலையை நாளை மத்தியானம் வைத்துக்கொள்ளக்கூடாதா?” என்றாள்.

என்றுமில்லாமல் வெறுப்பாகப் பேசியதைக் கேட்டதும் ஆச்சரியத்துடன் திரும்பிப்பார்த்து, “ஏன்? உனக்கு என்ன வேண்டும்?’ என்றான்.

“எல்லாம் நாளைக்குப் பேசித் தீர்மானிக்கலாம். இன்று, நாளை மீட்டிங்கிற்கு வேண்டிய முக்யமான விஷயம் எழுதவேண்டும். நீ படுத்துக்கொள்” என்றான் சிரித்துக்கொண்டே.

“எப்பொழுதும் மீட்டிங், மண்ணாங்கட்டி; இதற்குக் கல்யாணம் அவசியமில்லையே? இனி என்னால் இந்த ஜீவனற்ற வாழ்க்கை நடத்த முடியாது” என்றாள் பதட்டமாக.

“என்ன? இன்று சண்டை எப்படி இருக்கிறது என்று பார்க்க உத்தேசமா?” என்றான் எழுதிக்கொண்டே.

“ஆம்! பார்ப்பது என்ன? சண்டையின் முடிவின் விளைவினால்தான் என் மனம் சாந்தம் அடைய முடியும்” என்றாள்.

அச்சமயம் அவன் லக்ஷ்யம் மீட்டிங்கிலிருந்தது. இவளின் மனோ நிலை, பேச்சு, ஒன்றும் அவனுக்குப் புரிந்துகொள்ளும் சக்தி ஆவல் இரண்டும் இல்லாத நிலைமையில், அவனுக்குத் தடையாகப் பேசிய அவள்மீது கோபம்தான் உண்டாயிற்று. அதனால் “ஓஹோ படித்த கர்வத்தின் அகம்பாவம் போகுமா? சீ! பேசாமல் போ. சாந்தமாம்! விளைவாம். உன் மண்டைக் கர்வம் என்னிடம் செல்லாது” என்று கடுமையாக எரிந்து விழுந்தான்.

அவ்வளவே, அவள் துக்கம் அளவுகடந்தது. பதில் பேச முடியவில்லை. அவள், 'படித்த கர்வம் என்று சொல் அற்றுப்போகவேண்டும் என்ற நினைப்பில், அதே தன் மீது சாட்டப்பட, செய்வது இன்னதெனப் புரியாமல், படுக்கையில் குப்புறப்படுத்து அழலானாள்.

அதே வியாஜமாக நிமோனியா ஜ்வரம் வந்துவிட்டது. ஒரு நாள் முழுவதும், சுய உணர்வு இல்லாமல் வாய் பிதற்றினாள். இரவு பகல் அவள் பக்கத்திலேயே இருந்து உதவிசெய்து வந்த ரகுபதிக்கு, அப்பொழுது தான் அவள் மன நிலைமையும், அன்று அவள் தன்னிடம் பேசியதின் கருத்தும் விளங்கின. நாம் விஷயம் அறியாமல் கடிந்து கொண்டதினால்தான் அவளுக்கு இந்த நிலைமை ஏற்பட்டுவிட்டது என்று வருந்தினான்.

ஏழுநாட்கள் சென்றன. அன்று ஜ்வரமில்லை. நடுப்பகல் சமயம் பத்மா படுக்கையில் படுத்த வண்ணம், கட்டிலின் அஸ்மானகிரியைப் பார்த்த படியே யோசனையிலாழ்ந்தாள். சுய உணர்வு தோன்றியது முதல் ரகுபதி தன் பக்கத்திலேயே இருந்து சலிப்பின்றி ஒத்தடம் கொடுப்பது, மருந்து கொடுப்பது முதலியவைகளை அன்போடு செய்து வந்ததை நினைக்க, "தான் அன்று எவ்வளவு மதியீனமாக அவனிடம் பேசிவிட்டோம். அன்பில்லாமலா, இரவு தூக்கத்தையும் வெறுத்து நமக்குப் பாடுபடுகிறார்? இன்று அவரிடம் நாம் மன்னிப்புக்கேட்கவேண்டியது அவசியம்" என்று நினைத்தாள்.

அந்தச் சமயம் ரகுபதி சாப்பிட்டுவிட்டுக் கையைத் துடைத்துக்கொண்டே அவள் பக்கத்தில்வந்து மருந்தை எடுத்துக் கொடுத்தான். பிறகு பக்கத்தில் உட்கார்ந்து அவள் நெற்றியில் விழுந்த கேசத்தை விலக்கிவிட்டுக் கொண்டே "பத்மா? உடம்பு நன்றாய்க் குணமாகிவிட்டது" என்றான்.

அவள் கையை எடுத்துத் தன் கையில் வைத்து இரு கைகளாலும் மூடிக்கொண்டு, "என்னை மன்னித்துவிடுங்கள்" என்றாள்.

"ஏன்? எதற்காக?"

"இவ்வளவு நாள் பழகியும் உங்களை அறியாமல், ஏதேதோ நானே கற்பனை பண்ணிக்கொண்டு, அன்று, தாறுமாறாகப் பேசிவிட்டேன். அப்பொழுதிருந்த மன நிலையில் ராஜேச்வரியின் வார்த்தைகள் உண்மையெனத் தோன்றின. உங்கள் நடத்தை எல்லாம் விபரீதமாகத் தோன்றிற்று. அன்று மத்யானம் அம்மா என்னைச் சினிமாவுக்கு அழைத்துப்போகும்படி சொல்லியும், நீங்கள், 'நீ பார்க்காதபொழுது அவளுக்கு மாத்திரம் என்ன' என்று சொல்லிவிட்டீர்கள். அதனால் உங்களுக்கு என்னிடத்தில் அன்பில்லை என்பதை ஊர்ஜிதப்படுத்திக்கொண்டேன். நீறு பூத்த நெருப்பென விளங்கும் உங்கள் அன்பை அறியும் சக்தியில்லாமல் போய்விட்டேன். படித்த முட்டாளானேன். 'படித்த கர்வம்' என்ற பெயர் வாங்காமலிருக்கவேண்டும் என்ற எனது நினைப்பில் உங்கள் சொல் புண்ணில் கோலிட்டதுபோலிருந்தது. அதுவே எனது இந்த நிலைமைக்குக் காரணம்" என்று கண்களில் அன்பு ஜொலிக்க அவனைப் பார்த்த வண்ணம் அமைதியாகச் சொன்னாள்.

"பத்மா! இதுவும் ஒரு நன்மைக்கே. ஒருவர் மனதை ஒருவர் விட்டுச்சொல்லச் சந்தர்ப்பம் கிடைத்தது. உன்னை மன்னிப்பானேன்? என்மீதும் குற்றம் இருக்கிறது. வைரம் உயர்ந்த தன்மையுள்ளதாயினும் பட்டை தீர்ந்தபிறகே அதன் பிரகாசமான, உண்மைக் குணத்தை வெளிக்காட்டுகிறது. தீபம் எரிவதற்கு எண்ணெயும் திரியும் காரணமானாலும் தூண்டுகோலால் தான் மங்காமல் பிரகாசமடையும். அது போல் அன்பு எவ்வளவு ஆழமாக மனதில் பதிந்தாலும், கொஞ்சம் செய்கையாலும் காட்டவேண்டியது அவசியமே. இது இயற்கையின் விநோதம். அன்று நானும் எழுதுவதின் கவனத்தினால், 'படித்த கர்வம்' என்ற வார்த்தையைச்சொல்லிவிட்டேன். அதுவும் என் ஹ்ருதய பூர்வமாகச் சொன்னதல்ல. உன்னை நான் மனைவியாக அடைந்தது பற்றி அடையும் பெருமையும் கர்வமும் எவ்வளவென்று சொல்லமுடியுமா? உன் குணத்தைப்பற்றிப் பிறர் சொல்லக்கேட்கும் பொழுதெல்லாம், என் மனம் அளவுகடந்து பூரித்துவிடும். நீயும் நானுமாகச்சேர்ந்து, தேச சேவையிலும், மற்ற விஷயங்களிலும், பாடுபடலாம். எழுத்து வேலைகளில் எனக்கு நீ மிக்க உதவியளிப்பாய் என்றெல்லாம் எண்ணிக்கொள்ளுவேன். ஆனால்" என்று சொல்லும்பொழுது வெளியில் ஏதோ பேச்சுச் சப்தம் கேட்க வார்த்தையை அம்மட்டோடு நிறுத்திக்கொண்டு அதைக்கவனித்தான்.

"ஏண்டி காமு! நாட்டுப் பெண் விச்சா இருக்காளா" என்றாள் பாட்டி.

"விச்சா இருக்கா; இரண்டுநாளாக ஜ்வரமில்லை. இன்றைக்குச் சாதம் போட்டேன். சாயங்காலம் புதுசு உடுத்திக்கொண்டு சாஸ்திரத்திற்கு இரண்டு கார்த்திகை தீபம் ஏற்றச்சொல்லலாம் என்றிருக்கிறேன்."

"ஏற்றச்சொல்லு. என்னமோ மலைபோல வந்தது பனிபோல நீங்கிற்று. திருஷ்டிதான் இப்படி வந்துடுத்து. தங்கமான குணம். அரைப்படிப்பு படிச்சுட்டு தலைகீழா நிற்கிறது

களே, "படித்த பெண்" என்று கொஞ்சமாவது காட்டிக் கொள்ளுகிறதா? உன் பிள்ளையும் அடக்கமானது. மரியாதையில்லாமல், நம்மெதிரிலெல்லாம் பேசுகிறதுகளே? என்னமோ உன் அதிஷ்டம் தான் பிள்ளையும் நாட்டுப்பெண்ணும் கிடைத்தார்கள்" என்றாள்.

"ஆமாம் பாட்டி. நீங்கள் சொல்வது வாஸ்தவமே. நான் பூர்வத்தில் செய்த புண்ணியமே நாட்டுப்பெண் வாய்த்த அதிருஷ்டம். அன்னிக்குப் பாருங்கோ, ராஜேச்வரி, ஸீதா நாட்டுப்பெண் எல்லோரும் ஜோடிஜோடியாக சினிமாவுக்குக் கிளம்பினார்கள். எனக்கு என்னமோ போகணும்னு தோணலை. நீ, அழைத்துக்கொண்டு போயிட்டு வா என்று சொன்னேன். ஆனால் ரகு என்ன சொன்னான் தெரியுமா? நீ பார்க்காததை அவமாத்திரம் பார்க்கனும்னு அவசியமென்ன? என்று சொல்லிவிட்டான். இந்த மாதிரி எந்தப் பிள்ளைகள் சொல்லும். தீர்க்காயுசுடன் இருவரும் நன்றாக இருக்கவேணும். அதோ மணியும் அடிக்கிறது. பகவானே என் எண்ணம் கைகூடணும். மெய்யோ, பொய்யோ என்பது நிறைய இருந்து பெத்துப் பிழைக்கணும்" என்றாள்.

"பத்மா! கேட்டாயா, இந்த ஆத்ம திருப்திக்காகத்தான், நான் அவ்விதம் நடந்துகொண்டேன். ஆனாலும் இதை நீ அறிந்துகொள்ளும்படி செய்யாமலிருந்தது அறிவீனமே" என்றான்.

"இல்லை, அறிவீனமாக இருந்தவள் நானே. இப்பொழுது உங்கள் அன்பை நினைக்கும்பொழுது, என் ஹ்ருதயம் பூரிப்பை........." என்று அவனது கையை ஹ்ருதயத்தில்வைத்து அழுத்திக்கொண்டாள்.

ஃ ஃ ஃ

சாயங்காலம் கிராமத்தின் தெரு இரு சரகிலும் கோடி சூரியன் உதித்தாற்போல் தீபங்கள் ஜொலித்தன. பத்மா ஓர் கை விளக்கை எடுத்துக்கொண்டு பலஹீன நடையுடன், ரகுபதியிருந்த அறையில் நுழைந்தாள். மின்சார விளக்கைப் போட்டுவிட்டுக் கைத்தீபத்தை மேஜையின்மீது வைத்துவிட்டு, ரகுபதியை நமஸ்கரித்தாள்.

"பத்மா! இருளில் உட்கார்ந்திருந்த எனக்கு இந்த அறையை பிரகாசிக்கும்படி செய்த இக் கார்த்திகை தீபம்போல் நமது வாழ்க்கையில் அன்பு திரைக்குப் பின்னிருந்த உள்ளத்தின் ஒளி இத்திருக் கார்த்திகை நன்னாளில், திரை விலகி ஒளி தெரிந்தது. இது என்றும் மறக்கமுடியாத சுபதினம்" என்று சிரித்தவாறே கூறிக்கொண்டு அவள் கையைப் பிடித்துத் தன்பக்கத்தில் ஸோபாவில் உட்கார வைத்தான்.

"ஆமாம் இன்று உள்ளத்தின் ஒளியைக் கண்டேன். உலகில் காதல், மதம், லக்ஷ்யம், தேசபக்தி ஆகிய நீரூற்றுக்கள் வாழ்க்கையாகிய சோலையுருவத்தை அளித்திருக்கின்றன. யாவும் அறிவின் கூர்மையே காணமுடியும்" என்று அன்புடன் அவளைப் பார்த்துக்கொண்டே கூறினான். உள்ளத்தில் எழுந்த அன்பின் ஒளி கண்களிலும் பிரதி பலித்தது.

ஆப்டோன் ப்ளாக்குக்களும்
அழகான கலர் ப்ளாக்குக்களும்
செய்யுமிடம்!

எம். ஸி.
அப்பாசாமி செட்டி & கோ.,
14, ஜோன்ஸ் தெரு, மண்ணடி,
மதராஸ்.



'மதனகாமராஜன்,' 'அனந்தசயனம்,' 'குமாஸ்தாவின் பெண்,' 'பிரஹலாதா'— படங்களில் புகழ்பெற நடித்த தென்னாட்டுத் தலைசிறந்த நடிகை எம். வி ராஜம்மா சொல்லுகிறார் :

"நான் எப்பொழுதும் அருந்துவது நரஸூஸ் காபிதான். நரஸூஸ் காபியின் தனிப்பட்ட நறுமணத்திற்காகத்தான் நான் அதை விரும்புகிறேன்."

M.V. Rajamma.

புகழ்பெற்ற சினிமா நக்ஷத்திரங்கள் விரும்புவது

நரஸூஸ் காபி

M. N. K.—17 TM.

அம்புஜம்

"கௌசி"

லால்குடியில் புதுத்தெருவில் ஒரு பெரிய மாடிவீடு. அந்த வீட்டுப் பட்டசாலையில் கருங்காலிப்பலகை ஊஞ்சல். அந்த ஊஞ்சலில் ஒரு அப்ஸரஸ். முனிபுங்கவர்களின் (தமிழ் டாக்கியில் வரும் முனிகளல்ல) சலனமற்ற மனதையே படபடக்க வைக்கும் அழகுள்ள ஒரு மாது. அவள் பற்களழகு கொலைப்பாதகமுள்ளது. வெற்றிலைக்காவி சற்றே ஏறி இருக்கும் அந்தப் பற்கள், அரைவாய் கால்வாய் பேர்வழிகள் பலரின் ஆவியை அப்படியே பறித்துக்கொண்டுசென்றிருக்கிறதாம். வெறித்துப்பார்க்கும் அவள் கமலக் கண்களின் ஆழத்திற்குப் பஸிபிக் மகாசமுத்திரம் ஒரு உவமை ஆகாது. அவள் கண் இமைகளின் உரோமத்தில் 'கீழே விழுவதா வேண்டாமா' என்று சர்ச்சை செய்துகொண்டிருக்கும் கண்ணீர்த் துளிகள் 'மூங்கிலிலைமேல் தூங்கும் பனிநீர்' என்ற வரிகளை நினைப்பூட்டுவதாயிருந்தன. முகம் சந்திரபிம்பமாயினும் அதில் ஒரு களங்கம்—சோகம், சோகத்தின் காரணத்தை அறிய—அதுதானே நாம் சொல்லப் போகும் கதை. ஊஞ்சலின் எதிரே தரையில்உட்கார்ந்து சிலேட்டில் கிறுக்கிக் கொண்டிருக்கும், சிறுவாண்டுப் பயலைப் பார்த்தால் ஒருவாறு புரியும். வாண்டுப்பயல் என்ன செய்வான்! அவன் தந்தை விஷயமல்லவோ ஊஞ்சலில் வீற்றிருக்கும் அவன் தாயை அந்தப் பாடுபடுத்தியிருக்கிறது.

ஃ ஃ ஃ

ஸ்ரீனிவாச கனபாடிகள் நானூறுகாணிக் குடித்தனக்காரர். அவர் பாரம்பர்யத் தொழிலாகிய லேவாதேவியைக் கையாண்டு ரொக்கத்தை லக்ஷ ரூபாய்க்குப் பெருக்கினார். இவ்வளவு சொத்துக்கும் அவருடைய ஏகபுத்திரியாகிய அம்புஜமே சொந்தம். கனவான் வீட்டுப்பெண் என்பதற்காகவும், கனபாடிகள் வற்புறுத்தலின் பேரிலும், அம்புஜம் அதுவரையிலும் குல வழக்கமாயிருந்த அறியாமையைத் தகர்த்தெறிந்துவிட்டு, ஒரு பத்துக் கிளாஸ் வரையிலும் வந்து நின்றாள்.

கனபாடிகள் லேவாதேவியில் பயன்படுத்தும் நுட்ப மூளைத்திறனின் 'எஸ்ஸென்ஸ்' அப்படியே அந்த ஏக வார்ஸுக்கு இறங்கியதனாலோ, அல்லது கனபாடிகளையே செக்கில் ஆட்டும் வன்மையுடைய அவர்பாரியாளின் ப்ரஸாதமோ, அம்புஜம் மிகச் சிறப்பாகவே மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறினாள். அக்ரகாரத்திலே ஒரேபெண் 'மெட்ரிகுலேட்' என்றதினாலும், நானூறு காணிக்கும் ஏகபோக வார்ஸ் என்ற ஒரு அசைக்கமுடியாத உறுதியினாலும் சிற்சில சமயங்களில் அம்புஜம், கர்வத்தின் உச்சாணிக்கிளையில் ஊசலாடினாள் என்பதில் ஆச்சரியமில்லை. கலாசாலை வாசல்களில், முப்பத்திரண்டு பற்களையும் காட்டி, காமப் புன்னகை செய்யும் இளைஞர்களை இறுமாப்பின் ஒய்யாரத்தில் அம்புஜம் பார்க்கும் பார்வை–பைத்தியங்கொள்ளச் செய்திருப்பினும், அம்புஜத்தின் ஆன்மா எவனையும் நாடியது கிடையாது. பெருவார்ப்பில் வார்க்கப்பட்டவள் அம்புஜம். நினைத்தால் சந்நியாசினியாகவே காலங்கழிக்கும் வைராக்யம் அவள் மென்மையான உடலில் வைரம் பாய்ந்திருந்தது. கெடுவது என்றால் உலகம் காறி உமிழ்ந்தாலும் சட்டை செய்யாது கெட்டுப்போகும் திடசித்தம் படைத்தவள். கனபாடிகளின் மூதாதைகளின் தர்ம சிந்தனையின் பலன்போலும், அம்புஜத்தின் வைர நெஞ்சமும் பிடிவாத குணமும் அவளைக் கெட்ட வழிக்கும் இழுத்துச் செல்லவில்லை. அதனால் அம்புஜம் மற்றப்பெண்களைப்போல், பகல் கனவுகளில் லட்சிய புருஷனைக் கண்டு காலம் கழிக்காதவள் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. அவளுக்கும் கனவுகள் இருந்தன. நன்கு படித்து, மன்மத சொரூபனாய், அஷ்டாவதானம் செய்யும் வீர புருஷன் அவள் கனவுலகில் பன்முறை உலவி இருக்கிறான். ஆனால் அவன் வெறும் கற்பனைப் புருஷனாகவே இருந்துவந்தான். அம்புஜம் எவ்வளவு தேடியும் எலும்பு சதைகளுடன் அவன் காட்சி அளிக்கவே இல்லை. அதுவும் லால்குடியில் இவள் பார்த்தவரையிலும் ஒருவனாவது 100-க்குப் பதினைந்து பங்குகூடத் தேறவில்லை.

அம்புஜத்தின் காலேஜ் படிப்பிற்கு குறுக்கே நின்றார் கனபாடிகள். பயம்! பல சந்தேகங்கள்! "பத்தாவது படித்தாலும் போதும், நீ என்ன உத்யோகத்துக்குப் போகப்போகிறாயோ" என்றார். அதுமட்டுமா!—அம்புஜம் கற்பனையுலகில் சிங்காரித்து ஆராதனைசெய்துவரும் லட்சிய புருஷனைக் கனபாடிகள் பாக்குக் கடிக்கும் நேரத்தில் கண்டுபிடித்துவிட்டார். "இனிமேல் கலியாணந்தான் பாக்கி" என்று அவர்சொன்ன சொற்கள் பல்லாயிரம் வெடிகுண்டுகளாய் வந்து அம்புஜத்தின் கற்பனை

உலகைத் தூள் செய்தன. அதுவும் அந்த லக்ஷிய புருஷன் யார்? கனபாடிகளின் தங்கை மகன் ராமச்சந்திரன். "தாய் தகப்பனற்ற அனாதை; படிப்பின் லக்ஷணமோ கேட்க வேண்டியதில்லை." என்று எண்ணமிட்டாள் அம்புஜம். அது என்னமோ உண்மைதான். வகுப்புக்கு இரண்டுவருஷக் குத்தகை விதம் "பொறுத்தவர் பரீக்ஷை ஆள்வார்" என்பதை நம்பி ராமச்சந்திரன் சாவதானமாக பி. ஏ. வகுப்பை நெருங்கினான். மற்றப் பரீக்ஷைகள் போல் பி. ஏ. இவனுக்கு விட்டுக் கொடுப்பதாக இல்லை. ஒவ்வொருவருஷமும் ஸெப்டம்பர் மார்ச் மாதங்களில் பரீக்ஷைகள் எழுதுவதுதான் மிச்சம். 'ரிஸல்ட்' ஒரே மாதிரிதான். இவன் நம்பர் பேப்பரில் இருக்காது. இவ்வளவுக்கும் கனபாடிகளின் பொருள் உபயம்; கடைசியில் பரீக்ஷாதிகாரிகளுக்குத் தொந்தரவு கொடுப்பது சரியல்ல என்று கருதி, கனபாடிகளின் அபிப்பிராயப் பிரகாரம் பி. ஏ. க்கு விடுமுறையளித்தான். இதனால் ராமச்சந்திரன் மண்டு என்று முடிவு கட்டக்கூடாது. சிரிக்கச் சிரிக்கப் பேசுவதில் அவனுக்கு நிகர் கிடையாது. மேலும் நல்ல குணசாலி. அடக்க ஒடுக்கம், பொறுமையில் அவன் ஒரு வரம்பு, எல்லாவற்றுக்கும் மேல் மிகவும் வசீகரமான முகமும் அழகும் உள்ளவன். அம்புஜத்துக்கு இதெல்லாம் தெரியும். அவன் அழகு அவளது மனதையும் பாதிக்காமல் இல்லை. ஆனால் பீ. ஏ. கூட பாஸ் செய்யாதவரையா கலியாணம் செய்து கொள்வது? அவளுடைய இறுமாப்பு வேரோடு அறுந்துவிழுவதுபோல் இருந்தது.

"கலியாணம் வேண்டாம். நான் மேலே படிக்கவேண்டும் என்று சொல்லிப்பார்த்தாள், கதறிப்பார்த்தாள். தாயில்லாப்பெண்ணின் அலறல்கள் எவ்விதத்திலும் கனபாடிகள் காதில் விழவில்லை. அவர் தாம் செய்வதுதான் சரி என்று தீர்மானித்துவிட்டார். ஒவ்வொரு சமயம் வீட்டைவிட்டு ஓடிவிடலாமா என்று கூட நினைத்தாள். அது அவளுடைய கம்பீரமான மனப்பான்மைக்கு ஒத்ததாக இல்லை. வந்தது வரட்டும். அப்பாவிடம் என்னுடைய தீர்மானத்தைத் தெரிவித்துவிடுவேன் என்று தைர்யப்படுத்திக்கொண்டு தந்தையை அணுகினாள். "நீங்கள் வலுக்கட்டாயமாக எனக்குக் கலியாணம் செய்து வைப்பது முடியாது. நான் சந்துருவைக் கலியாணம் பண்ணிக் கொள்ளவே மாட்டேன்."

கனபாடிகள் தம் பெண்ணின் குரலில் திடம் தொனிப்பதைக் கண்டார். கொம்பேறிமூக்கன் என்று ஊராரால் மெச்சப்படும் கனபாடிகளா இதற்கு விட்டுக்கொடுப்பவர்? இந்த முரட்டுச் சுபாவங்களிடம் நயம்தான் சரி என்று தீர்மானித்தார். "இதோ பாரு அம்புஜம் எனக்கோ வயசாச்சு. நான் நாளைக்கே செத்துப்போனாலும் போயிடுவேன். இத்தனை நாளா உனக்குக் கலியாணம் பண்ணாத்துக்கே ஊரிலே வம்புபேசிக்கிறா. நான் கண்ணை மூடறத்துக்கு முன்னாலே உன்னை யாரிட்டையானும் ஒப்பிச்சுட்டுப் போகணும். ராமச்சந்திரன்தான் சரியான ஆள். பாக்கிறத்துக்கு ராஜாவா இருக்கான். குணமோ அதுக்குமேலே. பி.ஏ. பாஸ்பண்ணாபோனா என்ன, இவ்வளவு நிலம் மேல் பாக்கறதே அவனுக்குப் போரும்." என்றார்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. இப்போது கலியாணம் எனக்கு வேண்டாம்" என்று மறுதளித்தாள் அம்புஜம்.

"நீ முடியாது என்னா எனக்கென்ன. ஒன் நலத்திற்குத்தான் சொல்றேன், நீ பிடிவாதம் பண்றதுன்னா நான் இப்பவே காசி ராமேச்வரம் எங்கேயாவது கிளம்பிப் போயிடறேன். நீ சொத்தை வைத்துக்கொண்டு எக்கேடு கெட்டாவதுபோ" என்று தீர்மானமாகக் கூறி விட்டார்.

அம்புஜம் யோசித்து யோசித்துப் பார்த்தாள். வயதுகாலத்தில் தந்தை வருந்துவது பிடிக்கவில்லை. ஒருவேளை விரக்தியில் காசியைப் பார்க்கப்போய்விட்டால், "இதுதானா நமக்குத் தாயும் தந்தையுமாய் இருந்ததற்கு நம் கைம்மாறு! அப்படிச்சந்துருவைக் கல்யாணம் செய்துகொண்டால் என்ன! பரீக்ஷை பாஸ் பண்ணாவிட்டால் புத்திசாலித்தனம் இல்லை என்று அர்த்தமா? குணம்தானே முக்கியம். சொன்னபடி கேட்கும் கணவனாய் இருப்பான். நம்முடைய சுதந்திரத்துக்குப் பங்கம் வராது. சே! நமது லட்சியப் பிரகாரம் மணம் செய்து கொள்வதா? அதைவிட்டு இரண்டாம்பட்சம் என்று வேண்டாவெறுப்பாக மணப்பதா? எனக்கு அனுபவம் போதாததினால் இப்படி நினைக்கிறேனா? தந்தைக்காக எந்தன் தியாகம் செய்தால் என்ன?" இந்தவாறு பகலிலும் இரவிலுமாக யோசனை செய்தாள். கனபாடிகள் மட்டும் பிடிகொடுக்கவேயில்லை. அம்புஜத்தின் உறுதியும் தளர்ந்தது. கடைசியில் வேண்டாவெறுப்புடன் சம்மதித்தாள்.

கலியாணத்தை விமரிசையுடன் நடத்திவிட்டுத் தாம் எதிர்பார்த்ததுபோலேயே கனபாடிகள் அடுத்த வருஷமே அவருடைய நானூறுகாணி நிலத்தையும் லேவாதேவி ரொக்கத்தையும் பிரிந்து வைகுண்டம் சென்றார். இவ்வளவு வற்புறுத்தல்மணத்தில் சதிபதி அன்னியோன்னியம் எதிர்பார்க்க முடியாது. விஷயம் அறிந்த ராமச்சந்திரன் எதிர்பார்க்கவும் இல்லை. நாளடைவில் சரியாய்ப் போகும் என்று, பரீக்ஷைகளிடம் காட்டிய பொறுமையை மனைவியிடமும்காட்டிவந்தான். சதிபதிகள் இரண்டுநாள் அன்னியோன்னியமாக இருந்தால் இரண்டு மாதம் பேசமாட்டார்கள். இருமாதத்துக்கொருதரம் தோன்றும் இரண்டு நாள் அன்பின் விளைவால்

ராமச்சந்திரன் தகப்பனானான். மகன் பிறந்தும் மனைவியிடம் மகிழ்ச்சி காணவில்லை. வசவுகளின்வேகம், மகன் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்வதுபோல் வளர்ந்தது. ராமச்சந்திரன் பொறுமைப்படும் நடுநடுவே ஓட்டை எடுத்துக்கொண்டது. ஊரிலுள்ளோர் பிள்ளை பிறந்தானதும் இவனைப் புரளி செய்வது அதிகமாயிற்று, தன்னிடமுள்ள கோளாறுபூராவும் தன்னுடைய பொருளாதார நிலைமையே என்பதை உணர்ந்தான். கண்ணியமானவேலைகள் ஒன்றும் அவனுக்குக் கிடைக்கவில்லை. சிறிய வேலைகளுக்கு, மனைவியின் அந்தஸ்தை உத்தேசித்தாயினும் அவனால் அணுக முடியவில்லை.

ராமச்சந்திரன் சும்மா இருந்தாலும் ஊரிலுள்ளோர் சும்மா இருக்கிறார்களா? ‘பெண்டாட்டியை ஆளத்தெரியாதவன் நீ எதுக்குச் சமானம்’ என்று மறைமுகமாகவும் எதிரிலும் சொல்லும்போது ராமச்சந்திரனது மனது துடிக்கும். இன்று வீட்டில் போய் அவள் கொட்டத்தை அடக்கிவிடுவது என்று திடச்சித்தத்துடன் வீட்டுக்கு வருவான். மனைவியின் முகத்தைப் பார்த்தவுடன் மனத்திடம் சிட்டுக்குருவிபோல் பறந்துவிடும். இவன் பயப்படுமாறு அம்புஜம் அப்படி ஒன்றும் பத்ரகாளி அவதாரம் எடுப்பதில்லை. இவனைத் திட்டுவதும் பலமாகச்செய்யமாட்டாள். ஆனால் வாய் பேசாவிடினும் முகம் பேசுமல்லவா? திருச்சிராப்பள்ளிக்குச்சென்று சினிமா பார்க்க வேண்டுமென்றால், நாலுநாள் யோசனைசெய்து மனைவியைக் காலணா கேட்பதைவிடச் சினிமா பார்க்காமலே இருந்துவிடலாம் என்று தோன்றும். நில சாகுபடி விஷயம் கணக்கு வழக்கு முதலியன எல்லாம் அம்புஜம் தானே பார்த்துக்கொண்டாள். எல்லாச் செய்கைகளும் ராமச்சந்திரன் வேண்டப்படுவதில்லை என்பதைத் தெளிவாகக் காட்டின, அவன் இரண்டொருமுறை சண்டை செய்தும் பார்த்தான் ஒன்றும் அவள் மனதைக் கரைக்கவில்லை. அவள் இறுமாப்பும், உதாசீனமும் இன்னும் அதிகமாயின.

ஒருநாள் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது சோற்றில் மலைப்பிஞ்சுகள் அதிகம் கலந்திருப்பதைப்பார்த்து ராமச்சந்திரன் “இதென்ன ஒரே கல்லாக இருக்கிறதே?” என்று சாவதானமாகக் கேட்டான். “வேலையில்லாமல் உட்கார்ந்திருக்கும் ஆண் கைம்பெண்களுக்குக் குற்றம்வேறே வேண்டியிருக்கா” என்று துடுக்காகப் பதிலளித்தாள் அம்புஜம். ‘காக்கை உட்காரப் பனம் பழம் வீழ்ந்தது. இத்தனை நாள் பொறுத்த ராமச்சந்திரனால் “கைம்பெண்” என்ற வார்த்தையைப் பொறுக்க முடியவில்லை. “கைம்பெண்!” ‘கைம்பெண்’ தன் நிலையை விஸ்தரிக்கும் அழகான வார்த்தை. இந்த வார்த்தைக்கா இவ்வளவு நாள் பொறுத்தோம்?” என்று எண்ணமிட்ட ராமச்சந்திரன் இலையை விட்டு எழுந்தான். சத்தம் ஒன்றும்போடவில்லை. மடமடவென்று சட்டையும் துண்டும் எடுத்துப் போட்டுக்கொண்டான். மனைவியிடம் வந்து பதட்டமில்லாத குரலில், “இத்துணைநாள் நான் உன்னை அறியவில்லை. இன்று புரிய வைத்ததுக்குச் சந்தோஷம். இனிமேல் உங்கள் பிதுரார்ஜித வீட்டில் கைம்பெண் இருக்க மாட்டான். கவலைப்படாதே!” என்று கூறிவிட்டுத் தன் குழந்தை படுத்துறங்கும் தொட்டிலண்டை வந்தான். முறுவல் பூத்த முகத்துடன் தூங்கும் பாலசந்திரனின் நிஷ்களங்க முகத்தைப் பார்த்ததும் ராமச்சந்திரன் கண்களில் நீர் துளித்தது. நீர் துளித்த கண்களுடன் ரேழியைக் கடந்து வாசலுக்கு வந்ததும் அவனது கால் தடுக்கிற்று.

வலதுகால் தடுக்கினால் நல்ல சகுனமல்லவா? விட்டைவிட்டு விரட்டப்படும்போது நல்ல சகுனமா? வீட்டை விட்டுவெளியேறுவதில் என்ன நலம் இருக்கக்கூடும்? என்று ராமச்சந்திரனுக்குப் புலப்படவில்லை, சமயலறை நிலையில் சாய்ந்தவண்ணம் நின்று பார்த்துக்கொண்டிருந்த அம்புஜத்துக்கும் மடமடவென்று இரண்டு நிமிஷங்களில் நடந்த சம்பவங்களின் விளைவு புரியவில்லை. தொட்டிலில் படுத்தவாறு கனவுலகில் சஞ்சரித்துச் செல்லும் பாலசந்திரனுக்குத்தான் தெரியுமா? அல்லது வானில் மேகங்களுடன் கண்ணாம்பூச்சி விளையாடும் அர்த்த சந்திரனுக்குத்தான் தெரியுமா யார் கண்டார்? யாரே கண்டார்!

ஃ ஃ ஃ

நாட்கள் சில ஓடின. ஊரில் வதந்திகள் பல உலாவின. “கொண்ட கணவனைத்தடிச் சிறுக்கி விரட்டி விட்டாள்” என்று அரற்றிற்று ஊர்வாய். வரம்பில்லாத ஊர்நாக்குக்கூட அம்புஜத்தின் நடத்தையைப்பற்றிக்காரணம் கூறும்போது, ஒரு அயல் புருஷனை அங்கே தொக்கவைத்துப் பேசவில்லை. ஊரிலுள்ளோர் கனபாடி வம்சத்தின் பரம்பரை வீம்பை விளாசி வாங்குகிறார்களே அன்றி அம்புஜத்துக்கு மிருக இச்சைகளைக் கற்பனை பண்ணி அவள் பேரைச் சாக்கடையில் தள்ளத் துணியவில்லை. அது என்னமோ உண்மைதான். அம்புஜம் காரமாக ராமச்சந்திரனுடன் நடந்துகொண்டதற்கு அயல் புருஷன் காரணமல்ல. அது அவள் குணம்.

மனித ஹிருதயம் ஒரு சாமான் அல்லவே, அதை எடைபோட்டு நிறுத்து இந்த இந்தச் சமயங்களில் இந்தஇந்தமாதிரி நடந்து கொள் என்று நிர்ணயிக்க. அதுவும் ஒரு ஸ்திரீ அட்டவணையில் அடங்காதவள் அம்புஜம். ராமச்சந்திரன் வீட்டைவிட்டு வெளியேறினதில் வருத்தம் காண்பித்தாளா அல்லது இன்பம்

அடைந்தாளா என்று ஒருவராலும் கூறமுடியவில்லை. அம்புஜத்தாலேயே உணர்ந்துகொள்ள முடியவில்லை. ராமச்சந்திரன் வெளிச்சென்றதிலிருந்து வீடு வெறிச்சென்றிருந்தது என்ற ஒரு உண்மைதான் அவள் அறிந்தது. ஜடப்பொருளான வீடு வெறிச்சென்றிருக்க எவ்வாறு முடியும்? ஒருவன் ஆன்மாவில் ஏற்படும் ஒருவித சூன்யமல்லவா அந்த வெறிச்சென்ற உணர்ச்சியை வெளிப்படுத்துகிறது? என்று இந்தச் சூட்சம வேதாந்தக் கேள்விகளை அவள் ஆராயத் துணியவில்லை. தான் நினைத்தது போல் 'சத்துருவிடம் தனக்கு அவ்வளவு வெறுப்பு ஒருபோதும் இல்லை என்ற ஒரு உண்மைதான் அவளுக்குப் புலப்பட்டது. வெறுப்பு இல்லாவிட்டால் அன்பு இவ்வளவு நாள் தூங்கிக்கொண்டிருந்ததா? அவள் மனதில் உதித்த இந்தக் கேள்விக்கு அவள் அளித்த பதில் ஒரு மூச்சுத்தான். "நாட்கள் ஓடஓடக் கணவன் இல்லாதது ஒரு குறைதான். ஆனால், சிறிய குறை, சமாளித்துக்கொள்ளலாம்," என்று அவள் மனதில்பட்டது. இருந்தாலும் குழந்தை பாலசந்திரனின் எதிர்காலத்தை உத்தேசித்தாகிலும் கணவன் இருப்பிடத்தைத் தேடவேண்டும் என்னும் அவாவும் கூட எழுந்தது.

'கணவன் எங்கே போனால் எனக்கென்ன? குழந்தைக்காகத்தான் அவரைத் தேடவேண்டும்'' என்று தனக்கேதான் சொல்லிக்கொண்டாள். குழந்தைக்காக மட்டுமா தேடுகிறோம்? நம் அந்தராத்மாவிலும் அவரைக்கண்டு......... ஒரு ஆசை இல்லையா? என்ற பிரச்னைக்கு வலுக்கட்டாயமான ஒரு "இல்லை" போட்டுக்கொண்டாள். தன் மனதையே ஏமாற்றுகிறோம் என்பது தெரிந்துதான் இருந்தது! ஆனால் இன்னும் அவள் இறுமாப்புச் சாம்ராஜ்யத்தின் கடைசிக் கோட்டைகள் விழவில்லையல்லவா?

தன் கார்யஸ்தர்களைவிட்டு ராமச்சந்திரன் செய்தி விவரங்களைத் தேடச்செய்தாள். அவன் சென்னையில் இருக்கிறானா அல்லது வடக்கே சென்றுவிட்டானா என்ற தகவல் ஒன்றும் தெரியவில்லை. ஊரிலுள்ள சோம்பேறிப்பெரியவர்களுக்குச் சென்னைப் பிரயாணமும் திருச்சி வரையில் சென்றுவரும் பாக்கியமும் அம்புஜத்தின் செலவில் கிடைத்ததுதான் மிச்சம். ஒரு தகவலும் கிடைக்காதது அம்புஜத்தின் மனதிலும் பயத்தைக் கிளப்பியது. இப்படி இருக்கையில் அவளுக்கு ஒரு கடிதம் வந்தது. அது ராமச்சந்திரனிடமிருந்து. அதன் சுருக்கம் அவள் உள்ளத்தை வறுத்தது. "நான் இந்திய விமானப்படையில் சேரத் தீர்மானித்துவிட்டேன். இந்தக் கடிதம் நான் வெறும் கைம்பெண் அல்ல என்று உனக்குத் தெரிவிக்க எழுதியது. குழந்தை பாலுவைப் பிரியமாக வளர்"

கடிதத்தில் ராமச்சந்திரன் விலாசம் ஒன்றும் கொடுக்கப்படவில்லை. தபால் முத்திரை

உங்கள் கூந்தலைக் காப்பாற்ற மூலமந்திரம்

உங்கள் கூந்தலைக் காப்பாற்றுவது உங்கள் கையிலேதான் இருக்கிறது......மிகவும் எளிதான முறை, ஆயினும் உங்கள் கூந்தலை இயற்கையாக வளர உதவியளித்து, அதன் அழகைக் காக்கும் தன்மை வாய்ந்தது. ஒரு பாட்டில்

காமினியா ஆயில்

(ரிஜிஸ்டர்டு)

இந்த வித்தையைச் செய்யும். ஒருமுறை உபயோகித்தால் மறக்கமுடியாது. அதன் நிகரற்ற மணம் அதைத் தேடிச்செல்லத் தூண்டும்

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். ஒரு அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

ஆட்டோ டில்பகார்

(ரிஜிஸ்டர்டு)

மணங்களுக்குள் தலைசிறந்த அரசன். இதன் வசீகர மணம் நிகரற்றது. மதுசார சம்பந்தமற்றது.

எங்கும் கிடைக்கும்.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். 2 அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

சோல் ஏஜண்டுகள் :

ஆங்கிலோ-இந்தியன் டிரக் & கெமிகல் கம்பெனி, பம்பாய்-2.

பம்பாய் என்று பொதுவாக அவன் இருக்கும் ஊரைக் காட்டியது. அவ்வளவுதான். "இந்திய விமானப்படை" என்ற வார்த்தை அவளை என்றும் அறியாத பயத்தால் அடித்தது. கண்களில் நீர் பொலுபொலுவென்று வழிந்தது. வழிந்து ஓய்ந்ததும் மிஞ்சியிருந்த தண்ணீர் தான், கதையின் ஆரம்பத்தில் கூறியவாறு, இமைகளின் உரோமத்தில் நின்றவாறு கீழே விழுவதா வேண்டாமா என்று சர்ச்சை செய்து கொண்டிருந்தன. எதிரே உட்கார்ந்து சிலேட்டில் கிறுக்கிக்கொண்டிருந்த பாலசந்திரனுக்கும் தன் தாயின் அழுகைக்குக் காரணம் புரியவில்லை. அவன் "எம்மா அழறே" என்று கேட்டதும் அவள் காதில் விழவில்லை. அவள் மனது வேண்டா வெறுப்புடன் இந்திய விமானப்படை பர்மாவைத்தாக்கும் காட்சியில் ஈடுபட்டிருந்தது. துப்பாக்கிச் சத்தமும், வெடிகுண்டுகள் விழும் கம்பிரமும், விமானங்கள் உருள்வதும், விமானிகள் மரணம், அப்பப்பா! என்ன கோரம். "எவ்வளவு சாதுவானவருக்கு எவ்வளவு கோரமான உத்தியோகம்! அந்த விமான விபத்துக்கள்கூட என் வசைமாரிக்கு எவ்வளவோ இன்பமாக அவருக்குப்போய் விட்டனவே. விமானப்படைக்கு அனுப்பிய சீமாட்டி நான் அல்லவோ" என்று எண்ணமிட்டதும் அவள் வைர நெஞ்சைப் பச்சாத்தாபம் பிடுங்கித்தின்றது. பச்சாத்தாபம் காதலாகுமா? சொறிநாயைப் பார்க்கும்போதுகூட பச்சாத்தாபம் ஏற்படும். இருதயம் உணர்ச்சியற்றுக் கட்டையாய்கிடக்க வாய்மட்டும் முணுமுணுக்கும் சங்கதியல்லவா பச்சாத்தாபம். காதலோ என்ன? ஒரு காட்டாறு. தன்னையே தியாக வெள்ளத்தில் அடித்துச் செல்வது. அன்றிலிருந்து தினமும் கோவிலுக்குச்சென்று கணவன் பத்திரமாகத்திரும்பிவர அர்ச்சனை செய்துவந்தாள் அம்புஜம். தினம் சூரியன் மலைவாயில் விழும்போது அம்புஜம் பழங்கள் தேங்காயோடு கோவிலுக்குக் கிளம்புவதைப் பார்த்துவிட்டுச் செல்வான். கோவிலில் இருந்து திரும்பி வந்ததும் ரேடியோவில் செய்திகளை வார்த்தைவிடாது கவனமாகக் கேட்பாள்.

ஃ ஃ ஃ

வெள்ளிக்கிழமை; பௌர்ணமி நன்னாள். அம்மன் கோவிலிலிருந்து திரும்பிவரும்போதே அம்புஜத்தின் மனம் ஒரு நிலையில் இல்லை. அர்த்தமில்லாத சந்தோஷமும் சோகமும் ஒன்றையொன்று பின்னிக்கொண்டு அவள் உள்ளத்தில் கூத்தாடின. பூமி சந்திரவெளிச்சத்தின் ஆனந்த அணைப்பில் செயலற்றுக் கிடந்தது. அம்புஜம் சாப்பிடாமலேயே பாலசந்திரனைத் தூக்கிக்கொண்டு மொட்டை மாடியை அடைந்தாள். நிலவுவெளியின் மயக்கப் போதை குழந்தையைத் தூக்கத்தில் ஆழ்த்திற்று. தன் தாய் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருக்கும் புயல்களின் இரைச்சலை அறிந்தவனல்லன் அந்தக் குழந்தை. அவன் பாட்டுக்குத் தூங்கினான். தூங்கும் குழந்தையின் முகத்தைப் பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்தாள் தாய். குழந்தையின் முகமும் அந்த முகத்தின்மேல் நெற்றியில் விழுந்திருக்கும் குஞ்சம்போன்ற சிகையும் அவளுக்கு ராமச்சந்திரனை நினைப்பூட்டின! அப்படியே தத்ரூபம்! மேல் உதடுகள் ஒரு அழகுடன் கோணியிருப்பதும் அப்படியே தந்தைமாதிரி.

இந்த நிசப்தத்தைப் பிளந்துகொண்டு அண்டைவீட்டு ரேடியோவில் ஒருவர் இனிமையான சாரீரத்தில் "காதலெனும் பாதையிலே தேன் வந்து பாயுது 'காவேரி' போலே" என்று பாடினார். அது சமயம், சிலுசிலுவென்று ஒரு காற்று அடித்தது. காற்று, முன்தானையை விலக்கி அவள் மேன்மையான மார்பின்மேல் வீசி அவளுக்கு மயிர்க் கூச்சலைத் தந்ததுமன்றி, மேல் நோக்கிச்சென்று அவள் உதடுகள், மூடிய கண்களையெல்லாம் ஸ்பர்சித்துப் பிரிய மனமில்லாது அவளைப் பிரிந்து சென்றது. அசுரன்தான் காற்று ரூபம் எடுத்து வந்தான்போலும்!—காற்றுப் பட்டதும் அம்புஜத்துக்கு உன்மத்தம் பிடித்தாற்போல் இருந்தது. மூளை வழக்கத்துக்கு அதிகமாகப் படபடவென்று வேலைசெய்தது. குழந்தையைப் பார்த்துக்கொண்டிருந்தவள் கண்முன்பு புகைப்படம்போல் காட்சிகள் தென்பட்டன. முன்பொருநாள்! சின்னக்குழந்தையாய் இருந்தபோது அவளும் ராமச்சந்திரனும் விளையாடினது, கல்யாணமானபின் பொருநாள் இதே மாதிரி இரவு! அவள் பெண்மை கொழுந்து விட்டெரிந்த இரவு! அவள் இறுமாப்பழிந்து நின்றாள். ராமச்சந்திரன் கலங்கிய கண்களுடன் இவள் அருகு வந்தான். ஒரு முடிவில்லா ஆலிங்கனம்!! அதில் ராமச்சந்திரன் ஆண்மை அவளை அக்னி சந்தனக்கட்டையைத் தகிப்பதுபோல் தகித்தது. அவள் கணவன் தன் ஏழ்மையை மறந்திருக்க, அவள் தன் நானூறு காணியையும் மறந்திருந்தாள். அது ஓரே ஒரு இன்பநாள்! அதன் விளைவுதான் பாலசந்திரன்!

ஃ ஃ ஃ

முன்னெச்சரிக்கையில்லாமல் தடதடவென்று கோடை மழை பெய்யவும், அம்புஜம் தன் இன்பக்கனவிலிருந்தெழுந்தாள். குழந்தையை எடுத்துக்கொண்டு மாடியிலிருந்து கீழ் இறங்கி வந்தாள். கனவு கலைந்து விட்டதென்னமோ உண்மை. ஆனால் கனவிலிருந்து எழுந்தவள் புதிய அம்புஜம். எந்த மின்சாரம் தாக்கிற்றோ! அது பழைய அம்புஜத்தைக் கொன்றுவிட்டது. சிலுசிலுவென்றடித்த காற்றோடு போய்விட்டாள் பழைய அம்புஜம். அவள் இறுமாப்புச் சாம்ராஜ்யத்தின் கடைசிக்கோட்டைகளும் ராமச்சந்திரன் அறியாமலே, அவன் வசமாயின! இப்போது இருப்பதெல்லாம் அம்புஜமும் அவள் காதலும்

அழகிய கூந்தல்—இதன் இரகசியம் என்ன?

வேறெந்தக் காலத்தையும்விட குப்தர்கள் அரசாண்ட காலந்தான் மிக நேர்த்தியான பலவித கூந்தல் சிங்கார ஜோடிப்புகளுக்குப் பிரசித்திபெற்றதாய் இருந்தது. ஏனெனில் கனத்த மேனிவாய்ந்த கூந்தல் வனப்பிற்கு இன்றியமையாததென அந்நாளில் கருதி வந்தார்கள்.

இந்நாகரீகத்திற்கும் அழகிற்கும் அஜந்தாவிலும் பாகிலுமுள்ள சிற்பங்கள், களிமண் வேலைப்பாடுகள், சித்திர எழுத்துக்கள் இதுகளே போதுமான அத்தாட்சி.

ஏன், இந்நாளிலும் அழகிய மேனியும் பளபளப்பும் வாய்ந்த கூந்தல் தேகவனப்பையும் வசீகரத்தையும் அதிகப்படுத்தத்தான் செய்கிறது ஆக்ஷேபணையில்லை.



டாம்கோ கூந்தல் தேங்காயெண்ணெயும் ஷாம்பூவும்

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

தான். திடீரென்று காதல் இப்போது எங்கு வந்து குதித்தது? அது உள்ளே எப்போதும் இருந்திருக்கவேண்டும், திரையால் மறைக்கப் பட்டிருக்கவேண்டும். நிலவும் மென் காற்றும் கணவன் பிரிவும் சேர்ந்து அத்திரையை விலக்கி இருக்கவேண்டும்! அம்புஜமே விநோதம். அவள் காதல் அதைப்பார்க்கிலும் விநோதம்! தன்னை உண்மையாக அறிந்து கொண்ட அம்புஜம் ஒரு அமைதி யடைந்தாள். அதில் சோகம் கலந்திருந்தது. மணி 9-20 ஆகவே செய்திகளைக்கேட்க ரேடியோவைத் திருப்பினாள். "திருச்சிராப்பள்ளி ஜில்லாவைச் சேர்ந்த ராமச்சந்திரன் என்பவர் எதிரி விமானங்களுடன் போர்செய்கையில் உயிர் துறந்தார்" என்ற செய்தியை ஈரமில்லாத பச்சாத்தாபமற்றகுரலில் ரேடியோ அலறிற்று. அம்புஜம் பித்துப் பிடித்தவள்போல் நாற்காலியில் சாய்ந்தாள். தன் காதல் உள்ளத்தில் நாயகனைக்கண்ட அன்றே அவனை இழக்கப் போகிறோம் என்று அவள் நினைக்கவில்லை. அவனை உண்மையாக வரித்த அன்றே அவனை இழக்கவா?

கணவன் இறந்த செய்தியை அம்புஜம் ஆரவாரப்படுத்தவில்லை. தன் நகைகள், அலங்காரங்களை ஒதுக்கிவைத்தாள். தினமும் காலை எட்டுமணியிலிருந்து மாலை படுக்கப் போகும் வரையில் வெறு வெளியைப்பார்த்த வண்ணமிருப்பாள். படுக்கையில் படுத்தவுடன் விட்டத்தைப் பார்த்த வண்ணமிருப்பாள். கண்கள்தாமே அயர்ந்து தூங்கினால்தானுண்டு. நிலங்களில் காரியஸ்தர்கள் சூறையிட்டனர். அதைப்பற்றி அவள் கவலைப்படவேயில்லை. ஏதோ பிரளயத்தை எதிர் பார்ப்பவள்போல் காலம் கடத்தினாள். இன்பம் வற்றிப்போன உடல் நோய்வாய்ப்பட்டது. மருந்துகள் உட்கொள்ள மறுத்துவிட்டாள். ஒரு நாள் இரவு தூக்கம்வராமல் படுக்கையில் புரண்டுகொண்டிருந்தபோது வாசல் கதவை யாரோ தட்டினார்கள். கதவைத் திறக்கவும், ராமச்சந்திரன் நிற்கக்கண்டாள். 'நீங்களா உங்கள் ஆவேசமா' என்று கேட்டாள். "நான்தான்! நானேதான்" என்றான் ராமச்சந்திரன்.

"பின்பு ரேடியோவில் வந்த செய்தி?"

"அதுவரை நானும் என் பெயருள்ள இன்னொருவனும் பம்பாயில் இந்திய விமானப் படையில் சேரப்போனோம். அந்த ராமச்சந்திரனும் நமது ஜில்லாதான். எனக்குக் கண் பார்வை போரவில்லை என்று என்னை எடுத்துக்கொள்ளவில்லை. அவன் தேர்ந்தெடுக்கப் பட்டான். பின்பு பம்பாயிலே பல வேலைகள் பார்த்தேன். அங்கிருக்கப் பிடிக்கவில்லை திரும்பிவிட்டேன். உன்னைப்பார்த்தாய்விட்டது; குழந்தையையும் பார்த்துவிட்டால் இரவு ரயிலிலேயே வடக்கே திரும்பிவிடலாமென்று தீர்மானம்" என்றான்.

"வடக்கே எதற்கு?"

"உன் வீட்டில் கைம்பெண்களுக்கிடமில்லை யல்லவா. நான் இன்னும் ஒன்றும் சம்பாதிக்க வில்லை. விமானப் படையினரும் உன்னைப் போலவே என் விஷயத்தில் நடந்துகொண்டனர்".

"சில மாதங்கள் வரை என்னை ஒரு பிசாசு பிடித்துக்கொண்டிருந்தது. அதனால், அப்படி யெல்லாம் நடந்துகொண்டேன். நீங்கள் வெளியே போனபின் அந்தப் பிசாசு என்னை விட்டுச் சென்றுவிட்டது. இப்போது நான் மாறிவிட்டேன். என்னை மன்னித்து ஏற்றுக் கொண்டால் நான் உங்கள் தாஸானு தாஸி" என்றாள்.

ராமச்சந்திரன் திகைத்துவிட்டான்.

"நிஜமாகவா?"

"சத்தியமாக"

"உன்னைப் பிடித்திருந்த பிசாசின் பெயர் தெரியுமா?"

"தெரியாதே"

"எனக்குத் தெரியும். அதுதான் அரைகுறை ஆங்கிலப்படிப்பின் அகங்காரம்." இதைக்கேட்டு அம்புஜம் சத்தம்போட்டுச் சிரித்தாள். தூங்கிய குழந்தை பாலு எழுந்திருந்து தன் தாய் ஒரு புருஷனிடம் சிரித்து விளையாடுவதைப் பார்த்து திறுதிறுவென விழித்தான். வானத்துச் சந்திரனும், அன்று ராமச்சந்திரன் வீட்டைவிட்டு வெளியேறும் போது வலதுகால் தடுக்கியதின் தாத்பரியத்தைப் புரிந்துகொண்டதுபோல், மேகத்திடை மறைந்தான்.

248543

JL M21,N41KV N43.3 3-4

Edited & Published by N. R. Ramanujan, B.A., & Printed by S. Rangaswami, B.A. at The Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

காவேரி

தென் இந்தியாவின்
உயர்ந்த மாதப்பத்திரிகை

சந்தா விகிதம்

		உள் நாடு	சிலோன்
வருட சந்தா	....	ரூ. 4 8 0	ரூ. 4 12 0
6 மாதம்	....	ரூ. 2 4 0	ரூ. 2 8 0
தனிப்பிரதி	...	ரூ. 0 6 0	40 சதம்

தபால்மூலம் தனிப் பிரதிவேண்டுவோர் தபால் செலவும் சேர்த்து அனுப்பவேண்டும்

நமது புது ஏஜண்டுகள்

ஆத்தூர்
A. N. கிருஷ்ணன்,
நியூஸ் ஏஜண்ட் & மளிகை.

ஆடுதுறை
T. R. அப்துல்கபூர்,
ஷராப்பு மர்ச்செண்ட்.

சென்னிமலை
B. ஷாஜஹான், நியூஸ் ஏஜண்ட்.

தாராபுரம்
நாகராஜ நாயுடு, நியூஸ் ஏஜண்ட்.

ஜெம்ஷட்பூர்
D. V. V. சாஸ்திரி
M. ரோடு, லலிதா சதனம்.

கொடவாசல்
S. சதாசிவம், நியூஸ் ஏஜண்ட்.

கொடுமுடி
K. S. சொக்கலிங்கம், நியூஸ் ஏஜண்ட்.

கல்லிடைகுறிச்சி
S. வைகுண்டநாதன்,
நியூஸ் ஏஜண்ட்

புதுச்சேரி
லெக்ஷ்மண் பிரசாத் கோ.,
நியூஸ் ஏஜண்ட்ஸ்,

பழனி
V. K. வெங்கடாஜலம், வடக்கு ரதவீதி.

செகந்தராபாத்
V. R. ராகவன், 93 ஜீரா காம்பவுண்ட்.

ஸ்ரீவில்லிபுத்தூர்
N. நடஜமுதலியார், நியூஸ் ஏஜண்ட்.

குத்தாலம்
S. B. மணியன், ஜெய விலாஸ்.

காரைக்கால்
K. ஹமீத் மரக்காயர் & Co.,
47-லெமய்ரா தெரு.

முசிரி
C. S. நாராயணய்யர், நியூஸ் ஏஜண்ட்.

நாகபூர்
N. R. சுப்ரமண்யன், நியூஸ் ஏஜண்ட்.

நாகர்கோயில்
K. சிதம்பரதாணு
நியூஸ் ஏஜண்ட், சிதம்பர நகர்.

வேப்பத்தூர்
N. வெங்கட்ராமன்
காதி வஸ்திராலயம்.

விருதுநகர்
K. தர்மர்,
நியூஸ் ஏஜண்ட்
10/246 கட்டா பட்டி தெரு.

Regd. No. M. 4405.

CAUVERI.

T. S. R.

டி. எஸ். ஆர்

மூளைக் குளிர்ச்சிக்கும்
கேச வளர்ச்சிக்கும்
நறுமணத்திற்கும்

நிகரற்ற தைலங்கள்

கோகுல் தைலம்

தேங்காயெண்ணை தைலம்

ரக ரகமான ஊதுபத்திகளும்
வாசனைத்திரவியங்களும் கிடைக்கும்

சென்னை ஸோல் ஏஜண்டு

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்

திருவல்லிக்கேணி—மதராஸ்

T·S·R·&Co.

PERFUMERS
KUMBAKONAM

PRINTED AT THE CAUVERI COLOUR PRESS, KUMBAKONAM.